Hilton
COLOMBO



# 2024

# வருடாந்த அறிக்கை

ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா லிமிடெட்

# உள்ளடக்கங்கள்


| | |
|---|---|
| எம்மை பற்றி | 01 |
| நிதி சிறப்பம்சங்கள் | 03 |
| செயல்பாட்டு சிறப்பம்சங்கள் | 04 |
| தலைவரின் மதிப்புரை | 07 |
| இயக்குநர்களின் சுயவிவரங்கள் | 10 |
| மூத்த மேலாண்மை குழு | 14 |
| பெரு நிறுவன ஆளுகை | 15 |
| இடர்மேலாண்மை | 20 |
| மேலாண்மை விவாதம் மற்றும் பகுப்பாய்வு | 23 |
| நிறுவனத்தின் நடவடிக்கைகள் குறித்த இயக்குநர் குழுவின் ஆண்டு அறிக்கை | 38 |
| கணக்காய்வு குழு அறிக்கை | 41 |


**நிதிக்கூற்றுக்கள்**


| | |
|---|---|
| சுதந்திரமான கணக்காய்வாளரின் அறிக்கை | 46 |
| விரிவான வருமான கூற்று | 50 |
| நிதி நிலைமை கூற்று | 51 |
| உரிமை மாற்றல் கூற்று | 52 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 53 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 54 |
| கடந்த 10 ஆண்டுகளின் நிதி முன்னேற்றமும் முக்கிய செயல்திறன் அளவுகளும் | 84 |
| ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு | 86 |
| நியோகப் படிவம் | 87 |
| நிறுவனத்தின் பொதுத் தகவல் | உள்.ப |




# எம்மைப் பற்றி

1983 ஆம் ஆண்டில் ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா லிமிடெட் (HDL) ஆனது ஒரு ஆதன மேம்பாட்டு நிறுவனமாக இணைக்கப்பட்டது, இதன் பிரதான பணியானது ஹில்டன் கொழும்பு ஹோட்டலை சொந்தமாக வைத்திருப்பது மற்றும் அதன் செயல்பாடுகளை இலகுவாக்குவதாகும். இது கொழும்பு 01, எச்சலான் சதுக்கத்தில் (Echelon Square, Colombo 01) தந்திரோபாய ரீதியாக அமைந்துள்ளது. இந்த ஹோட்டல், இலங்கை தலைநகரின் மிகச் சிறப்பான மற்றும் வர்த்தக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் ஒன்றான பகுதியில், மொத்தம் 6.2 ஏக்கர் பரப்பளவிலான நிலத்தில் அமைந்துள்ளது.

ஹில்டன் கொழும்பு ஆதனமானது 4.4 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ள, அதே நேரத்தில் கொழும்பு 01, லோட்டஸ் வீதியில் கூடுதலாக 1.8 ஏக்கர் பரப்பளவானது பொழுதுபோக்கு வசதிகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் இயக்குவதற்கும் ஒதுக்கப்பட்டிருக்க, இதற்காக 99 ஆண்டு குத்தகை ஒப்பந்தம் தற்போது இறுதி செய்யப்படும் செயல்பாட்டில் உள்ளது. கொழும்பு நகரத்தின் விருந்தோம்பல் துறையை வடிவமைக்கும் முக்கிய நிறுவனமாகவும், நகரின் விரிவான நகர்ப்புற அடித்தள வளர்ச்சிக்கு HDL அளிக்கும் முக்கிய பங்களிப்பையும் பிரதிபலிக்கிறது.

முதலில் கொழும்பு பங்குச் சந்தையில் (CSE) பொதுவான பட்டியல்படுத்தப்பட்ட நிறுவனமாக இருந்த HDL ஆனது, 2011 ஆம் ஆண்டில் ஒரு தந்திரோபாய மாற்றத்திற்குட்பட்டு முழுமையாக அரசுக்கு உரித்தான நிறுவனமாக மாறியதோடு, அதன் 100% பங்குகளும் இலங்கையினுடைய திறைசேரி செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

# எமது தொலைநோக்கு

“விருந்தோம்பல் வணிகத்தில் நிலைபேறான சிறப்புடன் உச்சத்தில் நிற்றல்.”

# எமது நோக்கம்

“புதுமைத்தன்மையையும் சிறப்பையும் ஊக்குவிப்பதன் மூலம் விருந்தோம்பல் துறையில் நிலைபேறான வளர்ச்சியை முன்னெடுத்து, பங்குதாரர்களுக்கெல்லாம் சிறப்பான பெறுமதியை வழங்கி, இலங்கையை ஒரு முன்னணி உலகளாவிய பயண இலக்காக உயர்த்துவதுடன், பங்குதாரர் வருமானத்தை மேம்படுத்தி சமூகத்தின் மேல் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துதல்”









### ஹில்டன் கொழும்பின் முகாமைத்துவத்திற்கான தந்திரோபாய கூட்டாண்மை

ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா லிமிடெட் நிறுவனமானது, 1984 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட முகாமைத்துவ உடன்படிக்கையின் கீழ், ஹில்டன் கொழும்பின் முகாமைத்துவம் மற்றும் செயல்பாட்டுப் பொறுப்புகளை ஹில்டன் இன்டர்நேஷனல் மேனேஜ்மென்ட் கார்ப்பரேஷனிடம் (ஹில்டன் வேர்ல்டுவைட்) ஒப்படைத்திருந்தது. 139 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் 8600 க்கும் அதிகமான ஆதனங்களை கொண்டுள்ள முதன்மையான உலகளாவிய விருந்தோம்பல் நிறுவனமான ஹில்டன் வேர்ல்டுவைட் ஆனது, பூகோள ரீதியான வியாபாரக் குறி மதிப்பு, செயல்பாட்டு சிறப்புத்தேர்ச்சி மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளை கூட்டாண்மைக்கு கொண்டுவருகின்றது.

ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா லிமிடெட் நிறுவனமானதுஇ அதன் தந்திரோபாய கூட்டாண்மையின் ஊடாக இலங்கையின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் முக்கிய பங்கு வகிக்கின்றது. உலகப் புகழ்பெற்ற விருந்தோம்பல் வியாபாரக் குறியுடன் ஒரு தந்திரோபாய கூட்டாண்மையினை பராமரிப்பதன் ஊடாக நீண்ட கால சொத்து மதிப்பு மற்றும் பங்குதாரர் வருமானத்தை நிலைநிறுத்துவதன் மூலம் நிறுவனமானது உயர்தர விருந்தினர் அனுபவத்தை வழங்குவதை உறுதிப்படுத்துகிறது. வருமான உருவாக்கம் மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கம் மூலமாக மட்டுமல்லாமல், சர்வதேச பயணம், வணிகம் மற்றும் நிகழ்வுகளுக்கான முக்கிய இடமாக கொழும்பை நிலைநிறுத்துவதன் ஊடாகவும் HDL ஆனது தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்கின்றது.

### ஆதனத்தின் சிறப்பம்சங்கள் - ஹில்டன் கொழும்பு

ஹில்டன் கொழும்பு இலங்கையில் ஒரு முதன்மையான ஆடம்பர விருந்தோம்பல் ஆதனமாக உள்ளது, முக்கியமாக இது கொழும்பின் மைய வணிக மாவட்டத்தின் இதயப்பகுதியில் சிறப்பாக அமைந்துள்ளது. இந்த ஹோட்டலானது சர்வதேச மற்றும் உள்நாட்டு வணிக பயணிகள், ஓய்வு சுற்றுலாப் பயணிகள் மற்றும் நிகழ்வு பிரதிநிதிகள் உள்ளிட்ட பரந்த வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குகின்றது. இது மொத்தம் 368 அழகாக வடிவமைக்கப்பட்ட விருந்தினர் அறைகளை வழங்குகிறது. அதில் பிரசிடென்ஷியல் (Presidential) மற்றும் ஜூனியர் பிரசிடென்ஷியல் (Junior Presidential) ஸ்யூட்டுகள் (Suites) உட்படுகின்றன.
இவை அனைத்தும் நவீன வடிவமைப்பு, உயர்தர வசதி மற்றும் சிறந்த பயன்பாடு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன

ஹோட்டலில் ஏழு தனித்துவமான இடங்கள் மூலம் உணவு மற்றும் பொழுதுபோக்கு அனுபவங்களின் முழுமையான தொகுப்பு வழங்கப்படுகிறது. இவை விருந்தினர்களுக்கு பல்வேறு வகையான சமையல் பாணிகள் மற்றும் சூழ்நிலைகளை வழங்குகின்றன. சாதாரண உணவகங்களிலிருந்து உயர்தர உணவகங்கள் வரை, உள்ளரங்கம் முதல் வெளிநிலையம் வரை, அமைதியான ஓய்வறை சூழலிலிருந்து உற்சாகமான இரவுக் கால அனுபவங்கள் வரை பரவியுள்ளன.

ஹில்டன் கொழும்பானது அதன் தங்குமிடம் மற்றும் சமையல் சிறப்பிற்கு மேலதிகமாக, வலுவான நிகழ்வு மற்றும் வணிகரீதியான உட்கட்டமைப்பையும் வழங்குகின்றது. முக்கிய வசதிகளில், பெரும் விருந்துமண்டபம் அதனுடன் இணைந்த முன்நிகழ்ச்சி பகுதி மற்றும் பல்வேறு வகையான பல்நோக்கு நிகழ்ச்சி மண்டபங்கள் என்பன உள்ளடங்கும் அடங்கும். வணிக பயணிகள் ஹோட்டல் வளாகத்திலேயே அமைந்துள்ள உயர்தர நிர்வாக வசதிகள் மற்றும் முழுமையாகச் சீரமைக்கப்பட்ட சந்திப்பு அறைகள் ஆகியவற்றின் மூலம் முழுமையான ஆதரவைக் பெறுகின்றனர்.

அதன் முக்கிய சேவைகளை மேலும் மேம்படுத்தும் வகையில், ஹோட்டலுக்கு அடுத்துள்ள 1.8 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள சிறப்பு நலன்கள் மற்றும் வாழ்க்கைமுறை மையம் மூலம் கூடுதல் வசதிகள் வழங்கப்படுகின்றன. இந்த வசதியானது ஹோட்டல் விருந்தினர்கள் மற்றும் கழக உறுப்பினர்களுக்கு அதிநவீன உடற்பயிற்சி கூடம், வெளிப்புற நீச்சல் தடாகம் மற்றும் முழுமையான ஸ்பா மற்றும் ஆரோக்கிய சேவைகள் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு வசதிகளை வழங்குகின்றது. இவ்வசதிகள், ஹில்டன் கொழும்பினை உலகத் தரத்திலான முழுமையான ஒருங்கிணைந்த ஆடம்பர விருந்தோம்பல் அனுபவத்தை வழங்கும் நிறுவனமாக அதன் புகழை மேலும் வலுப்படுத்துகின்றன.

# நிதி சிறப்பம்சங்கள்

| நிதி சிறப்பம்சங்கள் “ரூபா.000” | 2024 | 2023 |
|---|---|---|
| அறை வருமானம் | 1,848,222 | 1,137,293 |
| நிதி மற்றும் வணிக வருமானம் | 3,342,408 | 3,034,962 |
| ஏனைய வருமானம் | 56,153 | 55,845 |
| சமூக பாதுகாப்பு தீர்வை | 146,306 | 118,651 |
| மொத்த வருமானம் | 5,393,089 | 4,346,751 |
| | | |
| மொத்த இலாபம் | 2,684,076 | 1,901,133 |
| மொத்த இலாப எல்லை % | 50% | 44% |
| மொத்த செயற்பாட்டு இலாபம் | 872,083 | 163,335 |
| மொத்த செயற்பாட்டு இலாபம் % | 16% | 4% |
| வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்) | (268,347) | (784,367) |
| வரிக்குப் பின்னரான இலாபம் | (339,837) | (688,713) |
| காலப் பகுதிற்கான மொத்த விரிவான வருமானம் | (351,638) | (15,874) |
| ஒரு பங்குக்கான உழைப்பு / (நட்டம்) | (0,17) | (0“01) |
| சராசரி அறை வீதம் | 31,691 | 31,496 |
| ஆக்கிரமிப்பு % | 51% | 33,00% |
| | | |
| நீண்ட கால வட்டியுடனான கடன்கள் | 3,354,136 | 3,067,766 |
| குறுங்கால கடன் | 2,255,220 | 1,843,522 |
| மொத்த உரிமை | 11,915,257 | 12,266,894 |
| கடன் / உரிமை % | 47.08% | 40.04% |
| மொத்த சொத்துக்கள் | 21,426,589 | 20,566,956 |
| கடன் / மொத்த சொத்துக்கள் % | 26.18% | 23.88% |
| தற்போதைய சொத்துக்கள் | 872,837 | 1,092,826 |
| தற்போதைய விகிதம் (தடவைகள்) | 4,462,725 | 3,609,386 |
| விரைவு சொத்து விகிதம் (தடவைகள்) | 0.20 | 0.30 |
| | 0.17 | 0.28 |

ஐந்து ஆண்டுகளின் வருவாய் போக்கு




வட்டி மற்றும் வரி முன் வருமானம்




நிலம், ஆலை மற்றும் உபகரணங்களில் முதலீடு



# செயற்பாட்டு சிறப்பம்சங்கள்

### எங்களுடைய வசதிகள

பிரதான ஹோட்டல் ஆதனமானது கொழும்பின் முக்கிய இடத்தில் அமைந்துள்ள 4.5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

விருந்தினர் அறைகள்

**368**

உணவு மற்றும் குடிபான விற்பனை நிலையங்கள்

**07**

மாநாடு ரூ நிகழ்வு இடங்கள்

**17**

**1.87** ஏக்கர் நிலத்தில் அமைந்த விளையாட்டு மையம் மற்றும் ஏனைய பொழுதுபோக்கு வசதிகள்

### எங்களது குழு

**596** ஊழியர்கள் (2023 : 615)

பயிற்சி மற்றும் அபிவிருத்தி நேரங்கள

**65,098** வருடாந்த பயிற்சி நேரங்கள் (2023: 24,752)

ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் (சேவை கட்டணம் உட்பட)

ரூபா. **1,262** மில்லியன்

(2023 : ரூபா. 1,026 மில்லியன்)

### சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சான்றிதழ்கள

உணவு மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள

- உணவு பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள்
- HACCP

### விருதுகள் மற்றும் பாராட்டுக்கள்

- ஆடம்பர வணிக ஹோட்டல்
- ஆடம்பர மாநாடு மற்றும் நிகழ்வுக்கான ஹோட்டல்
- மிகச் சிறந்த கட்டிடக்கலை வடிவமைப்பு
- ஆசியாவின் சிறந்த பல்நாட்டு MNC பணியிடங்களில் 2வது இடம் - 2024
- இலங்கையில் பெரிய வகை - சிறந்த 50 பணியிடங்களில் மூன்றாவது இடம் - 2024
- நிலைபேறான தன்மைக்கான விருதுகள் - பெரிய நிறுவனம்
- சிறந்த 10 பன்முகத்தன்மை முன்னணிப் போட்டியில் சாம்பியன்கள் விருதுகளை வென்ற GM முதல் 10 வீரர்களில் ஒருவர்.




AHK
Delegation der Deutschen Wirtschaft in Sri Lanka
Delegation of German Industry and Commerce in Sri Lanka
FRIEDRICH NAUMANN FOUNDATION
SUSTAINABILITY AWARDS 2024
Identifying Role Models to Drive Sustainable Change in the Tourism Sector
This Certificate is Presented to
Hilton Colombo
For the Outstanding Achievement in Category:
Hotel and Accommodation Service Provider - Large Enterprise
Ms. Marie Antonia von Schönburg
Chief Delegate
Delegation of German Industry and Commerce in Sri Lanka (AHK Sri Lanka)
Mr. Wolfgang Heinze
Head of Sri Lanka Office
Friedrich Naumann Foundation for Freedom

SUSTAINABILITY
AWARDS
2024
AHK
WINNER

Hilton Colombo Hotel
Fabulous
713 reviews
8.6
Fort, Colombo
Show on map
100 m from centre
Sustainability certification
Overlooking the Indian Ocean and Beira Lake, Hilton Colombo Hotel offers direct access to Colombo's World Trade Centre. It features an outdoor pool, 24-hour business centre and 10 dining outlets.

HOTEL
Hilton Colombo
4.2 (3,191 reviews)
Colombo, Sri Lanka
3,191 reviews and opinions
"...We stayed at the Hilton Colombo recently and had a really great experience...

# செயற்பாட்டு சிறப்பம்சங்கள்

## **TRIPADVISOR –** HILTON COLOMBO OUTLETS

Tripadvisor

### Graze Kitchen

2, Sir Chittampalam A Gardiner Mawatha,
Colombo 200 Sri Lanka



Ratings and reviews

4.8 ●●●●● 1,281 reviews

Tripadvisor

### L.A.B

Hilton Colombo 2 Sir Chittampalam a Gardiner MW,
Colombo 00200 Sri Lanka



Ratings and reviews

4.9 ●●●●● 297 reviews

Tripadvisor

### Emperor's Wok

2, Sir Chittampalam A Gardiner Mawatha Mawatha,
Colombo, Colombo 00200 Sri Lanka



Ratings and reviews

4.8 ●●●●● 174 reviews

Tripadvisor

### Stella Karaoke Lounge and Bar

2 Sir Chittampalam A Gardiner MW,
Colombo 00200 Sri Lanka



Ratings and reviews

4.7 ●●●●◐ 68 reviews

Tripadvisor

### Cafe Kai

2 Sir Chittampalam A Gardiner Mawatha The Hilton
Colombo, Colombo 00200 Sri Lanka



Ratings and reviews

4.7 ●●●●◐ 48 reviews

Tripadvisor

### Sunsetblu

2 Sir Chittampalam A Gardiner Mawatha Colombo 2,
Colombo 00200 Sri Lanka



Ratings and reviews

4.9 ●●●●● 436 reviews

# தலைவரின் மதிப்புரை



> “ஹில்டன் கொழும்பு ஹோட்டலில் புதிதாக மேம்படுத்தப்பட்ட விருந்தினர் அறைகள் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன், இது ஹோட்டலின் பரிணாம வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கின்றது. இந்த மேம்படுத்தல் 368 விருந்தினர் அறைகளின் ஒட்டுமொத்த ஆதனங்களின் இருப்பானது சொத்து திரும்பலுடன் ஒரு தசாப்தத்திற்குப் பின்னர் ஒத்துப்போகின்றது.”

அன்புள்ள பங்குதாரரே,
2024 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட்டின் ஆண்டு அறிக்கை மற்றும் நிதி கூற்றுக்களில் இருந்து முக்கிய சிறப்பம்சங்களை சபையின் சார்பாக வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். எமது முக்கிய பெறுமதிகளுக்கான எமது அசைக்க முடியாத அர்ப்பணிப்பினால் கம்பனி வலுவான மீட்சியைக் காட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### உலகளாவிய சுற்றுலா

உலகளாவிய சுற்றுலா 2024 ஆம் ஆண்டில் ஆச்சரியப்படத்தக்க மீட்சியை அடைந்தது, சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகை 1.4 பில்லியனை எட்டியது, இது தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளில் கிட்டத்தட்ட 99% ஆகும். இது 2023 ஆம் ஆண்டை விட 11% அதிகரிப்பைக் குறிக்கின்றது, மேலும் 140 மில்லியன் வருகைகளும் கூடுதலாக உள்ளன. தொற்றுநோய்க்குப் பிந்தைய வலுவான தேவை, முக்கிய மூல சந்தைகளில் இருந்து வலுவான செயல்திறன் மற்றும் ஆசிய மற்றும் பசுபிக் பகுதிகளில் உள்ள இடங்களின் தொடர்ச்சியான மீட்சி ஆகியவை இந்த மீட்சிக்குக் காரணமாக இருக்கலாம்.

உலகளாவிய சுற்றுலாவானது 2024 ஆம் ஆண்டில் அதன் செயல்திறனில் குறிப்பிடத்தக்க பிராந்திய வேறுபாடுகளை கண்டது. மத்திய கிழக்கு நாடுகளில் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 95 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை எட்டியதாக வருகையில் குறிப்பிடத்தக்க 32% அதிகரிப்புடன் அதன் மீட்சியில் முன்னணியில் இருந்தன மற்றும் முந்தைய ஆண்டை விட 1% மிதமான வளர்ச்சியை அனுபவித்தன. 74 மில்லியன் வருகைகளைப் பதிவு செய்வதன் மூலம் ஆபிரிக்காவும் வலுவான வளர்ச்சியைக் காட்டியது மற்றும் 2019 ஆம் ஆண்டின் அளவை விட 7% அதிகரிப்பையும் 2023 உடன் ஒப்பிடும்போது 12% அதிகரிப்பையும் இது பிரதிபலிக்கின்றது. உலகின் மிகப்பெரிய சுற்றுலாத் தளமான ஐரோப்பா 747 மில்லியன் வருகையை வரவேற்றது, இது 2019 ஆம் ஆண்டை விட 1% அதிகரிப்பையும் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 5% வளர்ச்சியையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இது பெரும்பாலும் வலுவான உள்ளக பிராந்திய கேள்வியினால் இயக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், உக்ரைனில் நடந்து வரும் மோதல் காரணமாக மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் தற்போதும் சவால்கள் காணப்படுகின்றன. 213 மில்லியன் வருகையினை அமெரிக்கா அடைந்துகொண்டது.

# தலைவரின் மதிப்புரை

இது தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளில் 97% ஐ எட்டியதாக காணப்பட்டது. கரீபியன் மற்றும் மத்திய அமெரிக்கா ஆகியவற்றின் புள்ளிவிபரங்கள் முந்தைய ஆண்டை விட 7% உம் 2019 ஆம் ஆண்டுக்கான புள்ளிவிவரங்களை விட அதிகமாகவும் அதிகரித்துள்ளது. இறுதியாக, ஆசியா மற்றும் பசுபிக் பகுதிகள் 316 மில்லியன் வருகைகளை கண்டுகொண்டது, இது தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளில் இருந்த 87% ஆக மீண்டுள்ளது, 2023 ஆம் ஆண்டிலிருந்து 33% அதிகரிப்பை அனுபவித்ததுள்ளது, இது இப்பகுதியில் ஒரு வலுவான மீட்சியைக் குறிக்கின்றது.

2024 ஆம் ஆண்டில், சர்வதேச சுற்றுலா வருமானம் ஐக்கிய அமெரிக்க டொலர் 1.6 டிரில்லியனினை எட்டியது, இது 2023 ஐ விட 3% அதிகரிப்பாகவும் மற்றும் 2019 ஐ விட 4% அதிகரிப்பாகவும் உள்ளது. இதற்கு மேலதிகமாக, பயணிகள் போக்குவரத்து சேவை உள்ளடங்கலான சுற்றுலா ஏற்றுமதிகள் ஐக்கிய அமெரிக்க டொலர் 1.9 டிரில்லியனாக அதன் சாதனை அளவை எட்டின, இது தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளை விட 3% அதிகரிப்பை பிரதிபலிக்கின்றது.

2025 ஆம் ஆண்டை எதிர்நோக்குகையில், சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகை 3% முதல் 5% வரை வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது, ஆசியா மற்றும் பசுபிக் பகுதியில் தொடர்ச்சியான மீட்சி மற்றும் ஏனைய பிராந்தியங்களில் நிலையான வளர்ச்சியுடன் இது தொடரும். அதிக போக்குவரத்து செலவுகள், நிலையற்ற எண்ணெய் விலைகள் மற்றும் புவிசார் அரசியல் அபாயங்கள் போன்ற சவால்கள் இருந்தபோதிலும் இந்த எதிர்பார்ப்பு நேர்மறையாகவே காணப்படுகின்றது. நிலைபேறான தன்மை மற்றும் குறைவாக அறிந்து கொள்ளப்பட்ட இடங்களைக் கண்டுபிடிப்பதற்கு முக்கியத்துவம் வழங்குவதன் மூலம் 2025 ஆம் ஆண்டிற்கான ஒரு முன்னேற்றக் கண்ணோட்டத்தை அண்ணளவாக 64% சதவீதமான சுற்றுலா நிபுணர்கள் கணித்துள்ளனர்.

எவ்வாறாயினும், மோதல்கள், தீவிர வானிலை நிகழ்வுகள் மற்றும் பணியாளர் பற்றாக்குறை போன்ற தொடர்ச்சியான பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள் குறித்து தொழில்துறை கவனத்தில் கொள்ளல் வேண்டும். நீண்டகால அபிவிருத்தியை உறுதி செய்வதற்காக வளர்ச்சியை நிலைபேறான தன்மையுடன் சமநிலைப்படுத்துவது மிக முக்கியமானதாக இருக்கும்.

**இலங்கை**

இலங்கையின் சுற்றுலாத் துறையானது 2024 ஆம் ஆண்டில் வலுவான மீட்சியைக் காட்டியதுடன் நேர்மறையான உந்துதலுடன் இந்த ஆண்டை பூர்த்தி செய்தது. இந்த திசெம்பரில் மாத்திரம் 248,592 சுற்றுலாப் பயணிகளை நாடு வரவேற்றுள்ளது, இது நவம்பர் மாதத்தை விட 35% அதிகரிப்பினையும் 2023 திசெம்பர் மாதத்துடன் ஒப்பிடும்போது 18.18% வளர்ச்சியையும் குறிக்கின்றது. 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள், இலங்கை 2,053,465 சர்வதேச வருகைகளைப் பதிவு செய்துள்ளது, இது நிலையான வளர்ச்சி மற்றும் மீட்சியை பிரதிபலிக்கின்றது, செயற்திறனான சுற்றுலா தந்திரோபாயங்கள் மற்றும் இலக்கு சந்தைப்படுத்தல் முயற்சிகளுக்கு நன்றி. 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையே ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாக காணப்படுவதுடன் மேலும் இது 2018 ஆம் ஆண்டில் இருந்து மிக உயர்ந்தளவானதாகவும் காணப்பட்டது.

புதிய வீசா முறையைச் சுற்றியுள்ள சிக்கல்கள், அரசியல் நிச்சயமற்ற தன்மைகள், பயண ஆலோசனைகள் காரணமான பாதுகாப்பு கவலைகள், உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் காணப்பட்ட காலதாமதங்கள் மற்றும் உலகளாவிய புவிசார் அரசியல் பதட்ட நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இது அடையப்பெற்றதாகும். மேலும், தொற்றுநோய்க்குப் பிந்தைய காலத்தில் மிகவும் கவர்ச்சிகரமான வீசா கொள்கைகள் மற்றும் ஏனைய இடங்களிலிருந்து வரும் கடுமையான சந்தைப்படுத்தல் முயற்சிகளைக் கொண்ட போட்டித்தன்மையானது இலங்கையின் சுற்றுலா வளர்ச்சியை பாதித்துள்ளது. இந்த சவால்கள் இருந்தபோதிலும், இந்தத் துறையின் மீள்தன்மை தெளிவாகத் தெரிகின்றது. முக்கிய சந்தைகளில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும், 2 மில்லியனைத் தாண்டிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும், இந்தத் துறையின் தொடர்ச்சியான மீட்சியைக் காட்டுகின்றது.

எதிர்காலத்தை நோக்கிப் பார்க்கையில், சுற்றுலாச் சந்தைகளை பல்வகைப்படுத்துதல், உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் 2025 மற்றும் அதற்குப் பின்னர் இலங்கையின் சுற்றுலாத் துறையை மேலும் வெற்றிபெறச் செய்வதற்கு நமது போட்டியிடும் நிலைமையினை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் நிலைபேறான வளர்ச்சியை அடைந்துகொள்வதில் இது மிக முக்கியமானதாக காணப்படும்.

இந்தியா, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஜெர்மனி மற்றும் ஆஸ்திரேலியா போன்ற முக்கிய சந்தைகள் இந்த வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கின. ஐரோப்பா ஆதிக்கம் செலுத்தும் பிராந்தியமாக உருவெடுத்ததுடன் மொத்த வருகையில் 51.9% இனை பங்களிப்பு செய்தது, ஆசியா மற்றும் பசுபிக் 41% பங்களிப்பு செய்தன. அமெரிக்கா (5.1%) மற்றும் மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா (2.1%) என்பன சிறிய அளவான பங்கொன்றினை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த போதிலும் இந்த பிராந்தியங்கள் எதிர்கால பல்வகைப்படுத்தலுக்கான பெறுமதிமிக்க வாய்ப்புகளை வழங்குகின்றன.

**நிதி செயலாற்றல்**

2024 ஆம் ஆண்டில், கம்பனி குறிப்பிடத்தக்க நிதி சார் வளர்ச்சியை அடைந்தது, இது வலுவான செயல்திறன் மீட்சியைக் காட்டுகின்றது. இந்த ஆண்டிற்கான மொத்த வருவாய் ரூபா. 5,242 மில்லியனை எட்டியதுடன் முந்தைய ஆண்டில் இருந்த ரூபா. 4,228 மில்லியனை விட இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றாகும். இந்த வளர்ச்சி முதன்மையாக அறைகள் வருமானத்தில் கணிசமான அதிகரிப்பால் உந்தப்பட்டிருந்ததுடன் இது 2023 இல் ரூபா. 1,137 மில்லியனிலிருந்து ரூபா. 1,848 மில்லியனாக உயர்ந்திருந்தது. எங்கள் விருந்தினர் அறை புதுப்பித்தல் திட்டங்களை வெற்றிகரமாகவும் படிப்படியாகவும் நிறைவு செய்தமை மற்றும் நவம்பர் மாத இறுதிக்குள் செயல்பாட்டு அறைகளின் எண்ணிக்கை 368 ஆக அதிகரித்தமை என்பன நேர்மறையான செயல்திறனுக்கு பெரும்பாலும் காரணமாக இருந்ததுடன் கூடுதலான இயலளவுடனும் போட்டித்தன்மையுடனும் எம்மை நிலைநிறுத்தியது.

2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 12 மாதங்களுக்கான எமது செயற்பாட்டு இலாபம் ரூபா. 869 மில்லியனை எட்டியுள்ளதுடன் இது முந்தைய ஆண்டின் செயற்பாட்டு இலாபமான ரூபா. 163 மில்லியனை விட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. எங்கள் வலுவான செயலாற்றலின் இயக்கத்துக்கு காரணமான மேம்படுத்தப்பட்ட செயல்பாட்டு வினைத்திறன் மற்றும் வினைத்திறனான நிதி முகாமைத்துவத்தினை இந்த வளர்ச்சியானது பிரதிபலிக்கின்றது.

நிதிச் செலவுகள் மற்றும் தேய்வினை கணக்கிட்டதன் பின்னரான 2024 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முன் நட்டம் ரூபா. 268 மில்லியனாகக் கணிசமாகக் குறைவடைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூபா. 784 மில்லியன் வரிக்கு முன் நட்டத்தில் இருந்தான வலுவான

மீட்சியை இது பிரதிபலிக்கன்றது. எமது நிதி நிலைமையினை வலுப்படுத்துதல், இலாபத்தை அதிகரிக்க செய்தல் மற்றும் செயல்பாட்டுத் வினைத்திறனை மேம்படுத்துதல் என்பவற்றிற்கான எங்கள் தந்திரோபாய முயற்சிகளின் செயல்திறனை இந் நட்டத்தில் ஏற்பட்ட இந்த கணிசமான குறைவானது நிரூபிக்கின்றது.

**ஹில்டன் கொழும்பு புதிய சகாப்தத்தில் அடியெடுத்து வைக்கின்றது**

ஹில்டன் கொழும்பு புதிதாக மேம்படுத்தப்பட்ட விருந்தினர் அறைகளை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன், இது ஹோட்டலின் பரிணாம வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. இந்த மேம்படுத்தல் ஒரு தசாப்தத்திற்குப் பின்னர் 368 விருந்தினர் அறைகளின் முழுமையான சொத்து இருப்பிலிருந்தான திரும்பலுடன் இது ஒத்துப்போகின்றது, இது அதிகரித்து வரும் சந்தை கேள்வி மற்றும் புதிதாக நுழைபவர்களிடமிருந்து வளர்ந்து வரும் போட்டி நிலைமைகளுக்கு ஒரு தந்திரோபாயமான பதிலாகும். இந்த விரிவாக்கம் உள்ளூர் விருந்தோம்பல் துறையில் எமது போட்டி நிலைமையை வலுப்படுத்தும் அதே வேளையில் எமது விருந்தினர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் எமக்கு உதவுகின்றது.

தற்போது நடைமுறையில் உள்ள செயல்பாட்டு அளவோடு இணைந்ததான கடந்த 5 முதல் 7 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட சொத்து மேம்படுத்தல்கள், ஹில்டன் கொழும்பு நிறுவனம் அதன் வியாபார நாமத்தின் உரிமையினை மேம்படுத்தவும், உள்நாட்டு மற்றும் சர்வதேச பார்வையாளர்களுக்கு உயர்ந்த, உலகத் தரம் வாய்ந்த அனுபவங்களை வழங்கவும் உதவுகின்றது. இந்த மேம்படுத்தல்கள் விருந்தினர்களின் அனுபவத்தை உயர்த்துவது மட்டுமல்லாமல், இலங்கையின் விருந்தோம்பல் துறையில் சந்தைத் தலைவராக எமது நிலையினை உறுதிப்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்.

மேலும், உள்நாட்டு சந்தையில் புதிய நிறுவனங்கள் நுழைவது, போட்டியை அதிகரிக்கும் அதே வேளையில், ஒட்டுமொத்த தொழில்துறைக்கும் ஒரு வாய்ப்பினையும் வழங்குகின்றது. இந்தப் போட்டியின் வருகை சந்தை கேள்வியினை தூண்டி புதுமைகளை வளர்க்கும் மற்றும் ஒட்டமொத்த துறையின் சேவை தரத்தில் மேம்பாடுகளை ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இது பிராந்தியத்தில் விருந்தோம்பலின் ஒட்டுமொத்த தரத்தை உயர்த்துவதுடன் இந்த மாறும் சூழலில் விருந்தினர் எதிர்பார்ப்புகளை விஞ்சியதாக பூர்த்தி செய்யவும் அதன் போட்டித்தன்மை எல்லையினை பராமரிக்கவும் ஹில்டன் கொழும்பை நிலைநிறுத்தும்.

**எதிர்காலத்தைப் நோக்கி**

இலங்கை நாடானது MICE (கூட்டங்கள், ஊக்கத்தொகைகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள்) இற்கான சுற்றுலாவிற்கு ஒரு முதன்மையான இடமாக தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்குத் தேவையான முக்கியமான பண்புகளை கொண்டுள்ளது என்று நான் மிகவும் நம்புகிறேன். அதன் தந்திரோபாய புவியியல் அமைவிடம், வலுவான உட்கட்டமைப்பு மற்றும் சர்வதேச வணிகப் பயணிகளை ஈர்க்கும் தன்மை ஆகியவற்றுடன், இந்தத் துறையில் அதிகரித்து வரும் தேவையைப் பயன்படுத்திக் கொள்வதற்காக நாடு தன்னை நன்கு நிலைநிறுத்தியுள்ளது. இந்தக் காரணிகள் கூட்டாக இலங்கையை வணிக நிகழ்வுகளுக்கான சாத்தியமான பிராந்திய மையமாக நிலைநிறுத்துகின்றன, இது பெரிய அளவிலான கூட்டங்கள் மற்றும் மாநாடுகளுக்கு ஏற்ற சூழலை வழங்குகின்றது.

கொழும்பு துறைமுக நகரத்திற்குள் அதிநவீன மாநாட்டு வசதிகளை உருவாக்கும் திட்டங்கள் உட்பட அரசாங்கத்தின் முன்னெச்சரிக்கை முயற்சிகள் என்பன உலகளாவிய MICE நிலப்பரப்பில் நாட்டின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கான தெளிவான அர்ப்பணிப்பை நிரூபிக்கின்றன. உலகளாவிய MICE சந்தையானது தொடர்ந்து விரிவடைந்து வருவதன் காரணமாக புதுமையான மற்றும் அணுகக்கூடிய இடங்களைத் தேடும் பன்னாட்டு நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு முதன்மையான வணிக இடமாக இலங்கையின் ஈர்ப்பை இந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி மேலும் வலுப்படுத்துகின்றது.

கொழும்பின் மத்திய வணிக மாவட்டத்தின் மையப்பகுதியில் தந்திரோபாய ரீதியாக அமைந்துள்ள ஹில்டன் கொழும்பு நிறுவனமானது, கொழும்பு துறைமுக நகரம் மற்றும் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை போன்ற முக்கிய அடையாளங்களுக்கு அருகாமையில் இருப்பதால் பயனடைகின்றது. புதிதாக புதுப்பிக்கப்பட்ட விருந்தினர் அறைகள் மற்றும் ஏனைய வசதிகளுடன் இணைந்து இந்த சாதகமான இடம் எங்கள் போட்டித்தன்மையை மேம்படுத்துகின்றது, இது முக்கிய வணிக, அரசு மற்றும் சுற்றுலா மையங்களை எளிதாக அணுக விரும்பும் வணிக பயணிகள் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு ஒரு சிறந்த தெரிவாக அமைகின்றது. போக்குவரத்து வலையமைப்புகளுடனான தடையற்ற இணைப்பானது பெரிய அளவிலான மாநாடுகள் மற்றும் நெருக்கமான நிறுவன சந்திப்புகள் இரண்டையும் செயல்திறன் மற்றும் வசதியுடன் நடத்துவதுடன் ஹில்டன் கொழும்பின் திறனை மேலும் ஆதரிக்கிறது.

**பாராட்டுக்கள**

கடந்த ஆண்டை நினைத்துப் பார்க்கும்போது, எனது சக பணிப்பாளர்களின் உறுதியான வழிகாட்டுதலுக்கும் ஆதரவிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது மதிப்புமிக்க பங்குதாரருக்கு, எங்கள் தொலைநோக்குப் பார்வையில் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை எம்மை இன்னும் பெரிய வெற்றியை நோக்கி அழைத்துச் செல்கின்றது. எனது முன்னோடிகள் மற்றும் வெளியேறும் பணிப்பாளர் சபை மற்றும் ஹில்டன் கொழும்பின் மூத்த நிர்வாகக் குழு மற்றும் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களின் பெறுமதிக்க பங்களிப்புகளையும், இந்த ஆண்டின் சவால்களை சமாளிப்பதிலும் மற்றும் செயல்பாட்டு செயல்திறனை கணிசமாக மேம்படுத்துவதிலும் பங்களிப்பானது மிக முக்கியமானதாக இருந்ததையும் சிறந்து விளங்குவதற்கான உறுதியான அர்ப்பணிப்பையும் பாராட்டுகிறேன்.

ஹில்டன் இன்டர்நேஷனல் மேனேஜ்மென்ட் கார்ப்பரேஷனின் முக்கிய ஆதரவினை நான் பாராட்டுகின்றேன். மேம்பட்ட செயல்பாட்டு நிலைமைகள் மீண்டு வரும் சுற்றுலாத் துறையால் உந்தப்பட்டு பிரகாசமான எதிர்காலத்தை எதிர்நோக்குகையில் அவர்களின் கூட்டிணைவானது விலைமதிப்பற்றதாக காணப்படுகின்றது. இந்த ஒத்துழைப்பு ஹில்டன் வேர்ல்டுவைடுடனான எமது நீண்டகால உறவை வலுப்படுத்துகின்றது மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கான களத்தையும் அமைக்கின்றது. இறுதியாக, எங்களது மதிப்புமிக்க விருந்தினர்களுக்கு, உங்கள் தொடர்ச்சியான நம்பிக்கை மற்றும் விசுவாசத்திற்கு நன்றி எதிர் வரும் ஆண்டுகளில் விதிவிலக்கான அனுபவங்களை உமக்கு வழங்குவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

# இயக்குநர்களின் சுயவிவரங்கள்

## திரு. பிரவீர் டி. சமரசிங்க
**தலைவர்**

திரு. சமரசிங்க அவர்கள் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள முதன்மையான ரியல் எஸ்டேட் முதலீடு, அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ கம்பனியான ஓவர்சீஸ் ரியாலிட்டி (சிலோன்) பிஎல்சியின் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் ஆவார். அவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் (UK) ஆகிய இரண்டிலும் உயர் உறுப்பினராக உள்ளார், மேலும் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார்.

திரு. சமரசிங்க ரியல் எஸ்டேட், தொழில்துறை, சேவைகள், சில்லறை விற்பனை, தோட்டக்கலை மற்றும் ஏற்றுமதித் துறைகளில் சிரேஷ்ட தலைமைப் பதவிகளில் 23 ஆண்டுகள் உள்ளடங்கலாக 38 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை மற்றும் வணிக அனுபவத்துடனும் விரிவான நிபுணத்துவத்தையும் கொண்டுள்ளார். அவர் பல பட்டியலிடப்பட்ட பொது கம்பனிகளில் பணிப்பாளர் சபையில் பணியாற்றுகின்றார் மற்றும் பல பணிப்பாளர் சபையின் துணைக் குழுக்களுக்குத் தலைமை தாங்குகிறார், கூட்டமைப்பு ஆளுகை மற்றும் தந்திரோபாய மேற்பார்வைக்கு வலுவான முக்கியத்துவம் அளிக்கிறார்.

திரு. சமரசிங்க, இலங்கை பணிப்பாளர்கள் நிறுவனம், இலங்கை முதலாளிகள் சம்மேளனம், இலங்கை தொழில்துறை சங்கம், இலங்கை அடுக்கு மாடி குடியிருப்பு அபிவிருத்தியாளர்கள் சங்கம் மற்றும் EFC இன் இணைந்த நிறுவனங்களின் குழு ஆகியவற்றின் முன்னாள் தலைவராகப் பணியாற்றியது உள்ளடங்கலான பல முக்கிய தொழில்துறை தலைமைப் பொறுப்புகளையும் வகித்துள்ளார்.

அவர் இலங்கைப் பிரிவின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் முன்னாள் தலைவராகவும், CIMA (UK) இன் முன்னாள் கவுன்சில் சபை உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக அவர் இலங்கை வர்த்தக சபை மற்றும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் சபை உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார், மேலும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், ஹார்வர்ட் பல்கலைக்கழகம் (ஹார்வர்ட் சர்வதேச திட்டம்) மற்றும் ஆஸ்திரேலிய பணிப்பாளர்கள் நிறுவனம் போன்ற சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் நடத்தப்படும் பல நிர்வாக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்கேற்றுள்ளார்.

## செல்வி. தீஷானா எஸ். அமரசேகர
**இயக்குநர்**

திருமதி. அமரசேகர அமெரிக்காவின் வாஷிங்டன், டி.சி.யில் உள்ள அமெரிக்க பல்கலைக்கழகத்தில் சர்வதேச சந்தைப்படுத்தலில் நிபுணத்துவத்துடன் வணிக நிர்வாகத்தில் இளங்கலை அறிவியல் பட்டத்தையும், அமெரிக்காவின் ஹவாய் பல்கலைக்கழகத்தில் ஹோட்டல் முகாமைத்துவத்தில் நிபுணத்துவத்துடன் பயணத் தொழில்துறை பயண முகாமைத்துவத்தில் இளங்கலை அறிவியல் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

விருந்தோம்பல் துறையில் விரிவான அனுபவத்துடன், திருமதி. அமரசேகர இலங்கையின் கண்டியில் அமைந்துள்ள விருது பெற்ற பூட்டிக் ஹோட்டல் மற்றும் சிறந்த உணவகமான தி தேவா ரெசிடென்சி மற்றும் தி தேவா குசினின் என்பவற்றின் நிர்வாக பணிப்பாளராக பணியாற்றுகின்றார். அவரது தலைமையின் கீழான இரண்டு நிறுவனங்களும் கடந்த 16 ஆண்டுகளாக தொடர்ச்சியான சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. சமீபத்திய பாராட்டுகளில் "2025 ஆம் ஆண்டுக்கான பயணிகள் தேர்வுக்கான பயண ஆலோசகர்" விருது மற்றும் "Timeout Sri Lanka வழங்கும் 2025 ஆம் ஆண்டிற்கான 12 சிறந்த ஹோட்டல்கள்" மற்றும் பல ஆண்டுகளாக தெற்காசிய பயண விருதுகளிலிருந்தான பல விருதுகள் முதலியன இதில் உள்ளடங்கும்.

தனியார் துறையில் அவர் ஆற்றிய பணிக்கு மேலதிகமாக அவர் கொழும்பில் உள்ள பாவா ஆதனங்களின் செயல்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்காக இல 11 மற்றும் டி சாரம் ஹவுஸில் உள்ள ஜெ/ப்ரி பாவா அறக்கட்டளையிலும் தீவிரமாக பணியாற்றியுள்ளார்.

இலங்கையின் மலையகத்தில் உள்ள சமூக மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் வாதிடுபவராவார், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு வலுவூட்டல் வழங்கும் திட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். T.E.A. திட்டத்தின் குழந்தைகள் வலுவூட்டல் மையத்தின் தூதராக, பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளுக்கு பயிற்சி, வலுவூட்டல் மற்றும் விழிப்புணர்வை வழங்கும் அமைப்பின் நோக்கத்திற்கு அவர் பங்களிப்பு செய்கின்றார். இதற்கு மேலதிகமாக மாதவிடாய்கான் சுகாதாரப் பொருட்கள் மற்றும் கல்விக்கான அணுகலை உறுதி செய்வதன் மூலம் தேயிலைத் தோட்ட சமூகங்களில் மாதவிடாயுடன் தொடர்புடைய வறுமையை நிவர்த்தி செய்யும் Sizuku Sri Lanka Pads முன் முயற்சியின் செயற்திட்ட முகாமையாளராகவும் பணியாற்றுகின்றார்.

## திரு. துலிந்தா பெரேரா
**இயக்குநர்**

திரு. பெரேரா, ஐகான் (IKON) குழும கம்பனிகளின் நிறுவனர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராக ஒரு தசாப்தத்திற்கும் மேலான அனுபவமும், பிராண்டிங், இலத்திரனியல் மாற்றம் மற்றும் நிதி ஆகியவற்றில் சமமான ஆண்டு நிபுணத்துவமும் கொண்ட ஒரு திறமையான நிபுணராவார். அவர் பல உள்ளூர் மற்றும் உலகளாவிய நிறுவனங்களுக்கு அவற்றின் வளர்ச்சி மற்றும் தந்திரோபாய முயற்சிகளுக்கு பங்களிப்பு செய்துள்ளதுடன் கார்பரேட் தொழில்முறை சார் மற்றும் பிராண்டிங் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

அவரது தலைமைத்துவ வகிபாகத்திற்கு மேலதிகமாக அவர் People's Leasing and Finance PLC மற்றும் People's Insurance PLC ஆகியவற்றின் பணிப்பாளர்கள்

சபையில் உறுப்பினராகவும், People's Micro Commerce Ltd இன் தலைவராகவும் பணியாற்றுகின்றார் மற்றும் அதே நேரத்தில் பல ஏனைய வகிபாகங்களிலும் தீவிரமாக பங்கேற்கின்றார்.

திரு. பெரேரா மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் வேதியியல் மற்றும் செயல்முறை பொறியியலில் இளங்கலை பொறியியல் பட்டத்தையும், ஸ்காட்லாந்து மேற்கு பல்கலைக்கழகத்தில் எம்பிஏ (MBA) பட்டத்தையும் பெற்றுள்ளார். அவர் ஒரு உலகளாவிய பட்டய முகாமைத்துவ கணக்காளர் (CGMA) மற்றும் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனமான ACMA (UK) இல் ஒரு அங்கத்தவராகவும் பட்டய சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் (MCIM) உறுப்பினராகவும், இலங்கையில் பட்டய தொழில்முறை முகாமையாளர் நிறுவனத்தின் (MCPM) உறுப்பினராகவும் உள்ளார்.

## திரு. சமில் உடவத்தே

**இயக்குநர்**

திரு. சமில் உடவத்தே பயண மற்றும் விமானப் போக்குவரத்துத் துறையில் அனுபவம் வாய்ந்த நிபுணர் ஆவார், தந்திரோபாய வணிக அபிவிருத்தி, சர்வதேச முகவர் தொடர்புகள் மற்றும் செயற்பாட்டு ரீதியான தலைமைத்துவம் ஆகியவற்றில் 30 ஆண்டுகளுக்கும் மேலான தொழில் அனுபவத்தைக் கொண்டுள்ளார். தற்போது அவர் ஹேலிஸ் டிராவல்ஸ் அண்ட் ஏவியேஷனில் (1994 முதல்) பணிப்பாளராகப் பணியாற்றுகின்றார் மேலும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளராகவும் உள்ளார், தேசிய வர்த்தகம் மற்றும் சுற்றுலா முயற்சிகளுக்கும் பங்களிப்பு செய்கின்றார்.

திரு. உடவத்தே தந்திரோபாய திட்டமிடல், பாதீட்டு முகாமைத்தவம், பங்குதாரர் ஈடுபடுத்தல்கள் மற்றும் செயற்திட்ட நடைமுறைப்படுத்தல்கள் ஆகியவற்றில் தனது நிபுணத்துவத்தை தனது சேவைக்காலம் முழுவதும் வெளிப்படுத்தியுள்ளார். சர்வதேச சந்தை விரிவாக்கம் மற்றும் உலகளாவிய சுற்றுலா கண்காட்சிகளில் பங்கேற்பது உட்பட பல வெற்றிகரமான முயற்சிகளை வழிநடாத்துவதற்கு அவருக்கு உலகளாவிய பயணச் சந்தைகள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகள் பற்றிய அவரின் ஆழமான புரிதல்கள் உதவியது.

சர்வதேச தர நியமங்களுடன் இணங்குவதை உறுதிசெய்வதன் மூலமும் தொழில்துறை சார்ந்த இடர்களை முகாமை செய்வதன் மூலமும் செயல்பாட்டு செயல்திறனை நிறுவன இலக்குகளுடன் இணைப்பதில் அவர் முக்கிய பங்கு வகித்துள்ளார். திரு. உடவத்தவின் தலைமைத்துவமானது இலங்கையின் பயண மற்றும் விமானப் போக்குவரத்துத் துறையில் புத்தாக்க மற்றும் வளர்ச்சியைத் தொடர்ந்து ஆதரிப்பதோடு, அவரது தனியார் மற்றும் அரச துறை சார் வகிபாகங்கள் மூலம் சர்வதேச வர்த்தகம் மற்றும் சுற்றுலா வளர்ச்சியையும் ஊக்குவிக்கின்றது.

## திரு. பி. ஏ. துஷாரா ரோட்ரிகோ

**இயக்குநர்**

திரு. பி. ஏ. துஷார ரோட்ரிகோ, நிதி முகாமைத்துவம், பொதுத்துறை நிர்வாகம் மற்றும் அரச நிறுவன மேற்பார்வை ஆகியவற்றில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள ஒரு சிரேஷ்ட பொதுத்துறை நிபுணராவார். அவர் இலங்கை கணக்காளர்கள் சேவையின் விஷேட தர அதிகாரியாகவும் உள்ளார், தற்போது பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றுகின்றார்.
திரு. ரோட்ரிகோ 1995 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தில் கணக்காய்வு பரிசோதகராக தனது பணியை தொடங்கினார், பின்னர் பல அரச நிறுவனங்களில் முக்கிய பதவிகளையும் வகித்துள்ளார். மதவாச்சியில் உள்ள பிரதேச செயலகத்தில் கணக்காளராகவும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் உதவி பணிப்பாளராகவும், சென்னையில் உள்ள இலங்கை துணை உயர் ஸ்தானிகர் காரியாலயத்தில் இரண்டாவது செயலாளராகவும், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் உள்ள உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராகவும் பணியாற்றிய அனுபவங்கள் என்பன அவரது அனுபவத்தில் உள்ளடங்கும்.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தில் வணிகவியல் இளங்கலைப் பட்டமும், பொது முகாமைத்துவத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார். இலங்கை பொது நிதி கணக்காளர்கள் சங்கத்தின் சக உறுப்பினராகவும், இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் பட்டய பொது நிதி கணக்காளராகவும் உள்ளார். திரு. ரோட்ரிகோ பல அரச நிறுவனங்களின் சபைகளில் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார், மேலும் பல்வேறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் தலைவராக தனது பங்களிப்பின் மூலம் பொதுத்துறை நிர்வாகத்திற்கு பங்களிப்பு செய்கின்றார்.

## திரு. ருவான் பெர்னாண்டோ

**இயக்குநர்**

திரு. ருவான் பெர்னாண்டோ கென்யாவின் நைரோபியை தளமாகக் கொண்ட ஒரு இலங்கை முயற்சியாளராவார், மேலும் கிழக்கு ஆபிரிக்கா முழுவதும் செயல்பாடுகளைக் கொண்ட பன்முகப்படுத்தப்பட்ட பிராந்திய கூட்டு நிறுவனமான மேலீன் கூட்டுத்தாபனத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் ஆவார்.
திரு. ருவான் 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் ஆரம்பித்து இன்று கென்யாவிலிருந்து தொடங்கி சிங்கப்பூரிலிருந்து ஆபிரிக்கா வரை தனது கால் தடத்தை விரிவுபடுத்தியுள்ளார். உட்கட்டமைப்பு அபிவிருத்தி, விமான நிலைய முதன்மை திட்டமிடல், கட்டுமான பொறியியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி,

# இயக்குநர்களின் சுயவிவரங்கள்

உற்பத்தி, குஆஊபு, மின் இயக்கம், வேளாண்மை வணிகம், கடல்சார் மற்றும் விமான போக்குவரத்து (புளுயுஇ னுஆஊஇ ஐயுவுயு இன் அங்கீகாரம் பெற்ற சேவைகள்) உள்ளிட்ட பல துறைகளில் இந்த குழுமமானது செயல்படுகின்றது. இலங்கையானது நைரோபிக்கு நேரடியன விமான சேவையினை செயற்படுத்தியபோது இலங்கை விமான பயணிகள் விற்பனை முகவராக மேலீன் இருந்தது.

திரு. பெர்னாண்டோ சிங்கப்பூருடன் வலுவான பங்குடமையினை பேணுகின்றார். வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சின் கீழ் செயல்படும் எண்டர்பிரைஸ் சிங்கப்பூரின் சந்தை அணுகல் மற்றும் வணிக அபிவிருத்திக்கான முக்கிய தொடர்பு கொண்டவராக அவர் பணியாற்றியுள்ளார். 2019 ஆம் ஆண்டு முதல் கென்யாவிற்கு பல உயர் மட்ட சிங்கப்பூர் பிரதிநிதிகளை இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஆதரித்து அவர் வழிநடத்தியுள்ளார்.

2023 ஆம் ஆண்டில், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சானது அவரை கென்யாவில் இலங்கை சார்பான நாட்டுப் பிரதிநிதியாக ஒரு சார்பு திறனில் நியமித்தது. பல துறைகளில் இருந்து கென்யாவிற்கு இலங்கை பொருட்கள் மற்றும் சேவைகளை இறக்குமதி செய்வதன் மூலமும், இலங்கையில் உள்ள அரசு நிறுவனங்களுடன் நெருக்கமாக பணியாற்றுவதன் மூலமும் அவரது குழுமம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பங்களித்துள்ளது.

திரு. பெர்னாண்டோ பிராந்திய பொருளாதார மன்றங்களில் வழக்கமான சபை உறுப்பினராக இருப்பதுடன் ஆபிரிக்கா முழுவதும் அவரது தலைமைத்துவம் மற்றும் முயற்சியாண்மை பங்களிப்புகளுக்காக அவர் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். திரு. பெர்னாண்டோ தற்போது ர்யசஎயசன டீரளiநௌள ளுஉாழழட இல் வணிக தந்திரோபாய நிகழ்ச்சித்திட்ட கற்கையில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

## திரு. மனோஜ் அல்கம

**இயக்குநர்**

திரு. மனோஜ் அல்கம, தந்திரோபாய முகாமைத்துவம், நிதி திட்டமிடல் மற்றும் இலத்திரனியல் உருமாற்றம் (digital transformation) ஆகியவற்றில் 30 ஆண்டுகளுக்கும் மேலான சர்வதேச அனுபவமுள்ள ஒரு திறமையான வணிகத் தலைவராவார். அவுஸ்திரேலியாவின் தெற்கு குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார்.

திரு. அல்கம, HSBC, DFCC மற்றும் Ernst & Young உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களில் சிரேஷ்ட தலைமைத்துவ வகிபாகங்களை வகித்துள்ளார், அங்கு அவர் நிதி மறுசீரமைப்பு, தந்திரோபாய உருமாற்றம் மற்றும் சிறப்பான செயல்பாட்டு இயக்குவதில் முக்கிய பங்கு வகித்தார். உலகளாவிய வங்கி செயல்பாடுகள், சொத்து முகாமைத்துவம் மற்றும் முக்கிய வங்கி தீர்வுகள் ஆகியவற்றில் அவரது நிபுணத்துவம் பரவியுள்ளது. அவர் சிக்கலான மாற்ற முயற்சிகளை வெற்றிகரமாக வழிநடத்தியுள்ளார் மற்றும் பல்வேறு சந்தைகளில் செயல்திறன் மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தும் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இங்கிலாந்து, மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா மற்றும் தெற்காசியா போன்ற பிராந்தியங்களில் உயர் செயல்திறன் கொண்ட குழுக்களை முகாமை செய்வதில் அவரது அனுபவம் அவருக்கு வலுவான உலகளாவிய முன்னோக்கினை வழங்குகின்றது. வளர்ந்து வரும் சந்தை இயக்கவியலுடன் பெருநிறுவன தொலைநோக்கினை இணைத்தல், நீண்டகால வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மையை ஆதரிப்பது குறித்து அவர் ஆழமான நுண்ணறிவைக் கொண்டுவருகின்றார்.

Ernst & Young இல் உள்ள திரு. அல்கமவின் ஆலோசனை பின்னணியானது டிஜிட்டல் மாற்றம், வணிக செயல்முறை மறுசீரமைப்பு மற்றும் தந்திரோபாய இடர் முகாமைத்துவம் ஆகியவற்றில் அவரது திறன்களை மேலும் வலுப்படுத்துகின்றது. தலைமைத்துவ அபிவிருத்திக்கான வலுவான வக்கீலான அவர், தொடர்ச்சியான கற்றல், ஒத்துழைப்பு மற்றும் விஷேட செயல்திறனான கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறார்.

## திரு. ஏ.ஜி.எஸ். சேனாதீர

**இயக்குநர்**

திரு. ஏ.ஜி.எஸ். சேனாதீர ஒரு திறமையான நிறுவன பயிற்சியாளராவார், வணிக வியூக நிபணராவார் மற்றும் தலைமைத்துவ பயிற்சியாளரும் ஆவார், நிறுவன அபிவிருத்தி, திறன் விருத்தி மற்றும் நிர்வாகக் கல்வி ஆகியவற்றில் 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ளவர். அவர் தற்போது இலங்கை மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நிறுவன பயிற்சி, விளம்பரம், வெளியீடு மற்றும் வணிக ஆலோசனை ஆகியவற்றில் செயல்படும் ஐபிஎம்சி குழும நிறுவனங்களின் தலைவராகவும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராகவும் பணியாற்றுகிறார்.

ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் இளங்கலை (சிறப்பு கௌரவ) பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவத்தில் முதுகலை டிப்ளோமாவும் பெற்றுள்ளார். அவர் CIMA தகுதிவாய்ந்த தொழில்சார் நிபுணர் மற்றும் நரம்பியல்-மொழியியல் நிரலாக்கம் (NLP) மற்றும் வாழ்க்கை பயிற்சியில் முதுகலைப் பயிற்சியாளர் ஆவார், தலைமைத்துவம் மற்றும் குழு அபிவிருத்திக்கு பல்துறைசார் அணுகுமுறையைக் கொண்டு வருகின்றார்.

திரு. சேனாதீர 1,200 க்கும் மேற்பட்ட நிறுவன பயிற்சிப் பட்டறைகளை நடத்தியுள்ளார் மற்றும் 180 க்கும்

மேற்பட்ட நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து, ஊக்கமளித்தல், தந்திரோபாய தலைமைத்துவம் மற்றும் செயல்திறன் மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றார். அவரது தொழில்முறை இணைப்புகளில் AITD, MAAT மற்றும் உளவியல் மற்றும் ஆலோசனையில் சான்றிதழ், சான்றளிக்கப்பட்ட யோகா ஷிரோமணி மற்றும் அமைதிக்கான நீதிக்கான அங்கீகாரம் ஆகியவை என்பன உள்ளடங்கும்.

தனது ஆற்றல்மிக்க மற்றும் உருமாறும் பயிற்சி முறைகளுக்குப் பெயர் பெற்ற திரு. சேனாதீர, உயர் செயல்திறன் கொண்ட கலாச்சாரங்களை வடிவமைப்பதிலும், மனித மூலதன அபிவிருத்தி மற்றும் தந்திரோபாய ஆலோசனை சேவைகள் மூலம் நிறுவன வளர்ச்சியை ஆதரிப்பதிலும் தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கின்றார்.

## திரு. உஸ்மான் அனஸ்

**இயக்குநர்**

திரு. உஸ்மான் என்பவர் இடர் முகாமைத்துவம், நிதி தந்திரோபாயம், மற்றும் வணிக மதிப்பீட்டில் ஏழு ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள ஒரு நிதிசார் நிபுணராவார். அவர் தற்போது ஐகான் குழும நிறுவனங்களின் தலைமை நிதி அதிகாரியாக பணியாற்றுகின்றார், அங்கு அவர் நிதி நடவடிக்கைகளை மேற்பார்வையிடுகின்றார் மற்றும் தந்திரோபாய தீர்மானமெடுத்தல் மற்றும் நிறுவன வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்கின்றார். நிதி திட்டமிடல், வர்த்தக நிதி மற்றும் எதிர்வு கூறல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வரையறுக்கப்பட்ட டெர்வந்த் சர்வீசஸ் (தனியார்) கம்பனியில் நிதி முகாமையாளர் பதவியையும் வகிக்கின்றார்.

மேற்கு லண்டன் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டத்தினையும் மற்றும் அவர் இங்கிலாந்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) இறுதிப் போட்டியில் தேர்ச்சி பெற்றவர் என்பதையும் அவரது கல்விப் பின்னணியானது உள்ளடக்குகின்றது. தத்துவார்த்த நுண்ணறிவு மற்றும் நடைமுறைசார் நிபுணத்துவம் ஆகிய இரண்டையும் தனது வகிபாகங்களுக்கு கொண்டு வருகின்றார்.

தனது தொழில் பணியின் ஆரம்பத்தில், திரு. உஸ்மான், இலங்கையில உள்ள KPMG இன் உள்ளக் கணக்காய்வு, இடர் மற்றும் இணக்கப்பாட்டு சேவைகள் (IARCS) பிரிவில் பணியாற்றினார், உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள், கணக்காய்வு செயல்முறைகள் மற்றும் பெருநிறுவன இடர் கட்டமைப்புகள் பற்றிய பெறுமதிமிக்க அறிவையும் பெற்றுள்ளார். தனது நிறுவனப் பொறுப்புகளுக்கு மேலதிகமாக, அவர் இம்பீரியல் வணிக ஆய்வுகள் கல்லூரியில் விரிவுரையாளராகவும் உள்ளார், அங்கு அவர் தனது தொழில் அறிவை ஆர்வமுள்ள நிதி சார் வல்லனர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்.

## திருமதி ரோஷிகா ஜயவர்தன

**இயக்குநர்**

திருமதி ரோஷிகா ஜெயவர்தன, விருந்தோம்பல் மற்றும் பயணத் துறைகளில் 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள ஒரு அனுபவம் வாய்ந்த நிபுணராவார், விருந்து விற்பனை, நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் நிறுவன உறவுகளில் நிபுணத்துவம் பெற்றவராவார். அவர் சூப்பர்லிங்க் டிராவல்ஸில் தனது வாழ்க்கையைத் தொடங்கினார், பின்னர் அக்சஸ் டிராவல்ஸில் முகாமைத்துவ பதவிகளுக்கு முன்னேறினார், அங்கு அவர் சர்வதேச குழு சுற்றுப்பயணங்கள் மற்றும் வணிக அபிவிருத்திகளுக்கான முயற்சிகளை கையாண்டார்.

2004 ஆம் ஆண்டில், Waters Edge இனை திறப்பதற்கான ஆரம்ப கட்டத்தில் விருந்து விற்பனைக்கான தலைவராக இணைந்து கொண்டார். தந்திரோபாய விற்பனை திட்டமிடல் மூலம் வருவாயை ஈட்டுவதோடு, பெரிய அளவிலான நிறுவன செயல்பாடுகள் மற்றும் திருமணங்களை வழிநடத்தும் ஒரு முதன்மை நிகழ்வு இடம்பெறும் ஒரு இடமாக ஆதனத்தினை நிலைநிறுத்துவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார். பின்னர் அவர் ரீஜண்ட் விருந்து மற்றும் ரிசார்ட்ஸ ில் (Regent Banqueting and Resorts) பொது முகாமையாளராக - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவில் இணைந்து கொண்டார், Reefs Edge ஹோட்டலைத் தொடங்குவதிலும் நீண்டகால வருமான உத்திகளை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகித்தார்.

தனது தலைமைத்துவத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அவர், 2018 ஆம் ஆண்டு வாட்டர்ஸ் எட்ஜ் நிறுவனத்திற்கு மீண்டும் விருந்து விற்பனை பணிப்பாளராக் திரும்பினார், அங்கு அவர் ஒரு சிரேஷ்ட விற்பனைக் குழுவை வழிநடத்தினார், வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட பிரச்சாரங்களை உருவாக்கினார், மேலும் நிலையான நிதி செயல்திறனை உறுதி செய்தார். சிறப்பான சேவையினை நிலைநிறுத்துவதற்கான பயிற்சித் திட்டங்களையும் மேற்கொண்டார்.

திருமதி ஜெயவர்தன தற்போது ஒரு சொகுசு வில்லாவின் வணிக ஆலோசகராகப் பணியாற்றுகின்றார், விருந்தோம்பல் முகாமைத்தவம், சந்தைப்படுத்தல் தந்திரோபாயம் மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாடு ஆகியவற்றில் தனது நிபுணத்துவத்தை புதிய முயற்சிகளுக்குப் பயன்படுத்துகின்றார் மற்றும் தொழில்துறையின் வளர்ச்சிக்கும் தொடர்ந்து பங்களிக்கின்றார்.

# மூத்த மேலாண்மை குழு

## திரு. ஷமாஹில் முகீதீன்

**பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர்**

திரு. ஷமாஹில் மொஹிதீன் ஒரு அனுபவமுள்ள நிதி வல்லுனர் மற்றும் இங்கிலாந்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) உறுப்பினர் ஆவார். 25 ஆண்டுகளுக்கும் மேலான தகுதிக்குப் பின்னரான அனுபவத்துடன், அவர் உள்நாடு மற்றும் சர்வதேச ரீதியில் முன்னணி நிறுவனங்களில் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளையும் வகித்துள்ளார்.

திரு. மொஹிதீன்இ ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) பிஎல்சி யில் இணைவதற்கு முன்னர், ஐட்கன் ஸ்பென்ஸ் குழுமத்தின் துணை நிறுவனமான Aitken Spence Power நிறுவனத்தின் பணிப்பாளரகவும் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். இந்த நிலையில், அவர்இ திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், இடர் குறைப்பு மற்றும் பங்குதாரர் ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் வலுவான திட்ட முகாமைத்துவ திறன்களை வெளிப்படுத்தி பாரிய அளவிலான உட்கட்டமைப்பு திட்டங்களின் நிதி மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவத்தினை வழிநடத்தினார்.

பல்வேறு வணிக செயல்பாடுகளில் செயல்திறன் மற்றும் பெறுமதி உருவாக்கத்தை செயற்படுத்தவதற்கும்இ திரு. மொஹிதீனின் சிறப்புத்தேர்ச்சியானது, கடினமான திட்டங்களை முகாமை செய்வதில் அவரது ஆழ்ந்த நிதி அறிவாற்றலுடன் இணைந்து அவருக்கு உதவுகின்றது.

## திரு. ஜூட் விக்ரமரத்ன

**பிரதம நிதி உத்தியோகத்தர்**

திரு. ஜூட் விக்ரமரத்ன கணக்கியல், நிதி முகாமைத்துவம் மற்றும் தந்திரோபாய திட்டமிடல் ஆகியவற்றில் 15 ஆண்டுகளுக்கும் மேலான சிறப்புத்தேர்ச்சி பெற்ற ஒரு அனுபவம் வாய்ந்த நிதி வல்லுனர் ஆவார். அவர் இங்கிலாந்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் (CIMA) இணை உறுப்பினராகவும் மற்றும் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ முதுமானி நிறுவனத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானிப் பட்டத்தினையும் (MBA) பெற்றுள்ளார்.

இலங்கையில் இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு பன்னாட்டு உட்கட்டமைப்பு நிறுவனத்தில் தனது தொழிலை ஆரம்பித்துஇ அங்கே அவர் சர்வதேச நிதி நடைமுறைகள் மற்றும் பாரிய அளவிலான திட்ட சூழல்களை பற்றிய பெறுமதிமிக்க அனுபவத்தினை பெற்றார். 2012 இல், அவர் கம்பனியொன்றில் ஒரு கணக்காளராக இணைந்து படிப்படியாக அதிகரித்து வரும் பொறுப்பின் வகிபாகங்கள் ஊடாக சீராக பதவிகளில் முன்னேறினார். 2022 இல், அவர் பிரதம நிதி உத்தியோகத்தராக நியமிக்கப்படிருந்தார்.

# பெருநிறுவன ஆளுகை

ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட்டின் பணிப்பாளர்கள் சபை, சிறந்த கூட்டுத்தாபன ஆளுகை நடைமுறைகளை ஏற்றுக்கொள்வதில் அதிக முக்கியத்துவம் வழங்குகின்றது. மேலும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட கூட்டுத்தாபன ஆளுகைக்கான சிறந்த நடைமுறைகள் மற்றும் பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான கூட்டுத்தாபன ஆளுகைக்கான வழிகாட்டுதல்களால் வழிநடத்தப்படும் நிறுவனத்திற்குள் மிக உயர்ந்த தர நியமத்தினை பேணுவதற்கு கம்பனியின் முகாமையானது உறுதிபூண்டுள்ளது. இது 2021 நவம்பர் 16 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை மூலம் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டதாகும்.

**பணிப்பாளர்கள் சபை**

கம்பனியின் பணிப்பாளர்கள் சபை, கம்பனியின் தந்திரோபாய இலக்குகள், பெறுமதிகள் மற்றும் நியமங்களை உருவாக்குதல் மற்றும் செயல்திறன் மற்றும் அறிக்கையிடலை கண்காணித்தல் ஆகியவற்றின் பொறுப்பை சுமக்கும் மிக உயர்ந்த அமைப்பாக தலைமைத்துவத்தை வகிக்கின்றது. இதன் மூலம் கம்பனி பங்குதாரர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்பை நிறைவேற்றுதல், அறிக்கையிடலில் உயர் மட்ட நிறுவன ஆளுகை மற்றும் வெளிப்படைத்தன்மையைப் பேணுகின்றது.

**சபையின் கட்டமைப்பு**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 10 பணிப்பாளர்களைக் கொண்ட சபையானது, கீழே குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், கம்பனியினால் மேற்கொள்ளப்படும் வணிகத்திற்குப் பொருத்தமான திறன்கள் மற்றும் அனுபவத்தின் சமநிலையைக் கொண்ட நிறைவேற்று பொறுப்பில்லாத இயக்குனர்களை கொண்டுள்ளது.

| | |
|---|---|
| திரு. பிரவீர் டி. சமரசிங்க | சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்<br>[03.10.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்] |
| செல்வி. தீஷனா எஸ். அமரசேகர | சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர் |
| திரு. பி.எச்.பி. டெனியாய | சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர் |
| டாக்டர். ஏ.ஐ. கங்கனம்கே | சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர் |
| திரு. எம்.எஸ். வட்தேகம | சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர் |
| திரு. ஆர். சூரியாராச்சிகே | சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர் |
| திரு. சமில் உடவத்த | சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர் |
| [ | 11.10.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்] |
| திரு. துலிந்தா பெரேரா | சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்<br>[11.10.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்] |
| திரு. ஏ. ஜி. எஸ். செனாதீர | சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர<br>[11.10.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்] |
| திரு. பி.ஏ. துஷார ரோட்ரிகோ | சுயாதீனமற்ற நிறைவேற்றதிகாரம் அற்றவர்<br>[11.10.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்] |

**மீளாய்வாண்டின் போது பின்வருபவர்கள் கம்பனியின் பணிப்பாளர்களில் இருந்து நீங்கியிருந்தார்கள**

| | |
|---|---|
| திரு உபுல் தர்மதாச | [03.10.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திரு.பி.ஏ.ஜெயகாந்த | [11.10.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திரு. கே.எஸ். வீரசிங்க | [11.10.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திரு.கே.ஏ.ஆர்.ஜே.பெர்னாண்டோ | [11.10.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திரு. பி.ஏ.எஸ்.ஏ. குமார | [08.11.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |

**மீளாய்வாண்டின் போது பின்வருபவர்கள் கம்பனியின் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டார்கள**

| | |
|---|---|
| திரு.பிரவீர் டி.சமரசிங்க | [03.10.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திரு.துலிந்த பெரேரா | [11.10.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திரு.ஏ.ஜி.எஸ்.செனாதீர | [11.10.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திரு.சமில் உடவத்த | [11.10.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திரு. பி.ஏ.துஷாரா. ரோட்ரிகோ | [08.11.2024 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |

# பெருநிறுவன ஆளுகை

**2025 ஆம் ஆண்டின் போது பின்வருபவர்கள் கம்பனியின் பணிப்பாளர்களில் இருந்து நீங்கியிருந்தார்கள**

| | |
|---|---|
| டாக்டர். ஏ ஐ கண்கனாம்கே | [08.01.2025 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திரு. பி எச் பி தெனியாய | [08.01.2025 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திரு. எம் எஸ் வத்தேகம | [22.01.2025 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திரு. ஆர் சூரிய ஆராச்சிகே | [22.01.2025 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |

**2025 ஆம் ஆண்டின் போது பின்வருபவர்கள் கம்பனியின் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டார்கள்**

| | |
|---|---|
| திரு. மனோஜ் அல்கம | [08.01.2025 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திரு .உஸ்மான் அன்னாஸ் | [08.01.2025 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திரு.ருவான் பெர்னாண்டோ | [22.01.2025 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |
| திருமதி ரோஷிகா ஜயவர்தன | [22.01.2025 அன்றில் இருந்து அமுலுக்கு வரும் வகையில்] |

**பணிப்பாளர்களின் நியமனம்**

கம்பனியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம், திறைசேரியின் செயலாளர் பெரும்பான்மையான பங்குகளை வைத்திருக்கும் வரை, பெரும்பான்மையான பணிப்பாளர்களைப் பதவியேற்க பிரேரிக்கவும் மற்றும் நியமிக்கவும் திறைசேரியின் செயலாளருக்கு உரிமை உண்டு.

திறைசேரியின் செயலாளருக்கு வழங்கப்படும் உரிமைகளில், அவ்வாறு நியமிக்கப்பட்ட எந்தவொரு நபரையும் நீக்குவதற்கும், எந்தவொரு காரணத்திற்காகவும் இயக்குநராக இருந்து நீக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் அல்லது முன்னர் நியமிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் பதிலாக வேறொருவரை நியமிப்பதற்கும் உரிமை உள்ளதாகக் கருதப்படுகிறது, திறைசேரியின் செயலாளரால் அவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட ஒரு இயக்குனர் சுழற்சி முறையில் ஓய்வு பெறுவதற்கு உட்பட்டவர் அல்ல.

70 வயதுக்கு மேற்பட்ட பணிப்பாளர்கள், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 210 மற்றும் 211 இன் விதிகளுக்கு உட்பட்டவர்கள். மேலும், அவர்கள் 70 வயதை எட்டிய பின்னர் அல்லது கம்பனி சட்டத்தின் பிரிவு 211 இன் படி மீண்டும் நியமிக்கப்பட்ட பின்னர், அடுத்த ஆண்டு பொதுக் கூட்டம் வரையிலும் மாத்திரமே பதவியில் இருப்பார்கள். அத்தகைய கூட்டங்களில், கம்பனி சட்டத்தின் பிரிவு 210 இல் குறிப்பிடப்பட்டுள்ள 70 வயது வயது வரம்பு அத்தகைய இயக்குநருக்குப் பொருந்தாது மற்றும் அவர்கள் மீண்டும் நியமிக்கப்பட்டால் மட்டுமே பதவியில் இருப்பார்கள்.

**சபைக் கூட்டங்கள்**

கம்பனியின் விளைவுகள் சபைக் கூட்டங்களில் தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டு வரவு செலவுத் திட்டங்களுடன் கண்காணிக்கப்படுகின்றன, இதில் சபையின் கவனம் தேவைப்படும் வேறு ஏதேனும் விடயங்கள் கலந்துரையாடப்படகின்றன. சபை கூட்டங்கள் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 6 முறை கூட்டப்படுகின்றது. மேலும் தேவையான இடங்களில் சபையின் சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.
2024 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டின் போது சபையின் 10 கூட்டங்கள் நடத்தப்பட்டன. கூட்டங்களில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| பணிப்பாளர் பெயர் | புணிப்பாளராக நியமனம் செய்யப்பட்ட திகதி | 2024 இல் கலந்து கொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---:|---:|
| திரு உபுல் தர்மதாச | 2023/02/16 | 05/08 |
| செல்வி. தீஷனா எஸ். அமரசேகர | 2015/04/07 | 09/10 |
| திரு. பி எச் பி தெனியாய | 2020/01/24 | 10/10 |
| திரு. கே.எஸ் வீரசிங்க | 2023/04/06 | 06/08 |
| திரு. பி.ஏ.எஸ்.ஏ. குமார | 2020/08/24 | 08/09 |
| திரு. பி ஏ ஜெயகாந்த | 2023/04/06 | 08/08 |
| திரு. கே ஏ ஆர் ஜே பெர்னாண்டோ | 2023/03/21 | 0/08 |
| டாக்டர். ஏ ஐ கண்கனாம்கே | 2023/03/21 | 10/10 |
| திரு. எம் எஸ் வத்தேகம | 2023/03/21 | 10/10 |
| திரு. ஆர் சூரியஆராச்சிகே | 2023/03/21 | 09/10 |
| திரு.பிரவீர் சமரசிங்க | 2024/10/03 | 02/02 |
| திரு.துலிந்த பெரேரா | 2024/10/11 | 02/02 |

| பணிப்பாளர் பெயர் | புணிப்பாளராக நியமனம் செய்யப்பட்ட திகதி | 2024 இல் கலந்து கொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு.ஏ.ஜி.எஸ்.சேனாதீர | 2024/10/11 | 02/02 |
| திரு.சமில் பிரியந்த | 2024/10/11 | 02/02 |
| திரு. பி ஏ துஷார ரோட்ரிகோ | 2024/11/08 | 01/01 |

பணிப்பாளர்களுக்கு மாதாந்த கணக்குகள் வழங்கப்படுகின்றன, மேலும் அனைத்து முக்கிய விடயங்களும் சபைக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டு எடுக்கப்படுகின்றன. மேலும், சபையின் குறிப்பிட்ட அங்கீகாரம் தேவைப்படும் பிரச்சினைகள் குறித்த சபைப் பத்திரங்கள் முன்கூட்டியே சமர்ப்பிக்கப்படுகின்றன. அனைத்து கூட்டங்களின் குறிப்புக்களும் கம்பனிச் செயலாளர்களால் முறையாகப் பதிவு செய்யப்பட்டு பேணப்படுகின்றன.

### தலைவர்

திரு. உப்புல் தர்மதாச, 16.02.2023 முதல் 03.10.2024 வரையிலான காலப்பகுதியின் போது பணிப்பாளர்கள் சபையின் தலைவராக இருந்தார்.

திரு. பிரவீர் சமரசிங்க, 2024ஒக்தோபர் 3, அன்று தலைவராக நியமிக்கப்பட்டார். கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனமான ஓவர்சீஸ் ரியாலிட்டி (சிலோன்) பிஎல்சியின் பணிப்பாளர் / பிரதம நிறைவெற்று உத்தியோகத்தராகவும் அவர் உள்ளார். சிரேஷ்ட தலைமைத்துவத்தில் 23 ஆண்டுகள் உள்ளடங்கலாக 38 ஆண்டுகால அனுபவத்துடன், ஆதனங்கள், தொழில்துறை, சேவை, சில்லறை விற்பனை, தோட்டங்கள் மற்றும் ஏற்றுமதி போன்ற பல துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்.

### தலைவரின் முதன்மை பொறுப்புகள்

- சபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் மற்றும் சபையின் கடமைகளை விளைதிறனாக நிறைவேற்றுவதற்கு வசதியாக ஒழுங்குகளை பேணுதல்.
- அனைத்து பணிப்பாளர்கள் மற்றும் கம்பனி செயலாளருடன் கலந்தாலோசித்து, விவாதத்திற்கான அனைத்து முக்கிய தலைப்புகளும் உள்ளடக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் சபைக் கூட்டங்களுக்கான வழக்கமான நிகழ்ச்சி நிரலை உருவாக்குதல். இதற்கு மேலதிகமாக, சபைக் கூட்டங்களில் பணிப்பாளர்களின் முழுமையான மற்றும் சுறுசுறுப்பான பங்கேற்பினை ஊக்குவித்தல்.
- சபைக் மற்றும் சபையின் துணைக் குழுக்கள் தங்கள் கடமைகள் மற்றும் பொறுப்புகளையும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் விடயங்களின் தரநியமத்துடன் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்தல். சபைக் கூட்டங்களில் எழும் பிரச்சினைகள் குறித்து பணிப்பாளர்களுக்கு முறையாக விளக்கப்படுவதையும், பணிப்பாளர்கள் சரியான நேரத்தில் போதுமான தகவல்களைப் பெறுவதையும் தலைவர்கள் உறுதிசெய்தல் வேண்டும்.
- கம்பனியின் விவகாரங்கள் மற்றும் அதன் பங்குதாரர்களுக்கான அதன் கடமைகள் தொடர்பாக சபையினால் மேற்பார்வையிடப்படுவதை உறுதிசெய்தல்.
- கூட்டுத்தாபன ஆளுகையில் மிக உயர்ந்த தரநியமங்கள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிசெய்தல்.

### முகாமைத்துவம்

கம்பனியின் அன்றாட நடவடிக்கைகள் பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர் தலைமையிலான கார்ப்பரேட் மற்றும் சிரேஷ்ட முகாமையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இடர்கள் மற்றும் வாய்ப்புகள் அடையாளம் காணப்படுவதையும், வரையறுக்கப்பட்ட காலக்கெடு மற்றும் பாதீட்டுக்குள் இலக்குகளை அடைந்து கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுப்பதையும் அவர்கள் உறுதி செய்கிறார்கள்.

### உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம்

பங்குதாரர்களின் முதலீடுகள் மற்றும் கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாக்க சபை போதுமான உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் முறைமைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. உள்ளகக் கட்டுப்பாடுகள் உள்ளார்ந்தமான வரையரைகளை கொண்டுள்ளன என்பதையும், மோசடி மற்றும் தவறுகளுக்கு எதிராக முழுமையான உத்தரவாதத்தை வழங்காது என்பதையும் சபை முழுமையாக அறிந்திருக்கின்றது.

பணிப்பாளர்கள் சபையானது மாதாந்திர கணக்குகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்களுக்கு எதிராக கம்பனியின செயல்திறனை தொடர்ந்து மீளாய்வு செய்கிறது

# பெருநிறுவன ஆளுகை

**கணக்காய்வுக் குழு**

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 43 மற்றும் 45 ஆம் பக்கங்கள் இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**கணக்காய்வுக் குழு 2023 யூன் 28 முதல் பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:**

| | |
|---|---|
| திரு. பி.ஏ.எஸ். ஏ. குமார | தலைவர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு. பி.எச்.பி. தெனியாய | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு. எம் எஸ் வத்தேகம | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |

**கணக்காய்வுக் குழு 2024 திசெம்பர் 17 முதல் பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:**

| | |
|---|---|
| திரு. பி.ஏ.துஷார ரோட்ரிகோ | தலைவர் (சுயாதீனமல்லாத நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு. பி எச் பி தெனியாய | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு. எம் எஸ் வத்தேகம | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |

**சபையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து மீண்டும் 2025 பெப்ரவரி 21 முதல் கணக்காய்வு குழு பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:**

| | |
|---|---|
| திரு பி ஏ துஷாரா ரோட்ரிகோ | தலைவர் (சுயாதீனமல்லாத நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு மனோஜ் அல்கம | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு உஸ்மான் அண்ணஸ் | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |

ஹாட்டல் செயல்பாடுகளின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக் அறிக்கைகளை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்து பகுப்பாய்வு செய்கிறது. அத்தகைய அறிக்கைகளின் அடிப்படையில் தேவையான/பொருத்தமான நடவடிக்கைகள் மற்றும் ஹோட்டல்/கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளில் மேம்பாடுகளைக் கண்டறிவது குறித்து கணக்காய்வுக் குழு சபைக்கு பரிந்துரைகளை வழங்குகின்றது.

கணக்காய்வுக் குழு வருடாந்த நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்து அவற்றை கணக்காய்வுக்காக வெளியிடுகின்றது

2023 ஏப்ரல் இல் கம்பனியின் பணிப்பாளர்கள் சபை மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம், அழைப்பின் பேரில் திரு. வி. கனகசபாபதி கணக்காய்வு குழு கூட்டங்களில் கலந்து கொள்கின்றார்.

**ஊதியக் குழு**

**2023 ஏப்ரல் 20 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஊதியக் குழு பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:**

| | |
|---|---|
| திரு.யு.ஜி.தர்மதாச | தலைவர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு. ஆர் சூரியராச்சிகே | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு.பி.எச்.பி.தெனியாய | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு கே எஸ் வீரசிங்க | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்ற பணிப்பாளர்) |

திரு. பி.ஏ.எஸ்.ஏ. குமார, 2023 நவம்பர் 28 முதல் அமுலுக்கு வரும் வகையில் ஊதியக் குழுவில் நியமணம் செய்யப்பட்டார்.

**2024 திசெம்பர் 28 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஊதியக் குழு பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:**

| | |
|---|---|
| திரு.பிரவீர் சமரசிங்க | தலைவர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு. ஏ ஜி எஸ் சேனாதீர | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு. ஆர் சூரியஆராச்சி | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு சமில் உடவத்த | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு. பி.ஏ.துஷார ரோட்ரிகோ | உறுப்பினர் (சுயாதீனமற்ற நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |

**சபையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து மீண்டும் 2025 பெப்ரவரி 21 முதல் கணக்காய்வு குழு பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:**

| | |
|---|---|
| திரு.பிரவீர் சமரசிங்க | தலைவர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு. ஏ ஜி எஸ் சேனாதீர | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திருமதி ரோஷிகா ஜெயவர்தன | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு சமில் உடவத்த | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு. பி.ஏ.துஷார ரோட்ரிகோ | உறுப்பினர் (சுயாதீனமற்ற நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |

ஊதியக் குழு சபைக்கு ஊதியம் தொடர்பான விடயங்களில் பரிந்துரைகளை வழங்குகின்றது.

**தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல் மீளாய்வு குழு**

சபையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து மீண்டும் 2025 பெப்ரவரி 21 முதல் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல் மீளாய்வு குழு பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:

| | |
|---|---|
| திரு. பி.ஏ.துஷார ரோட்ரிகோ | தலைவர் (சுயாதீனமற்ற நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு.ருவான் பெர்னாண்டோ | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |
| திரு.துலிந்த பெரேரா | உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்றதிகாரம் அற்றவர்) |

**கம்பனி செயலாளர்கள்**

நிறுவனச் சட்டம் மற்றும் நிறுவன ஆளுகை குறித்த சிறந்த நடைமுறைகள் தொடர்பான விடயங்களில் சபைக்கு ஆலோசனை வழங்குகிறார்கள், இதன் மூலம் சபையும் அதன் குழுக்களும் சிறந்த நிர்வாக நடைமுறைகளை ஏற்றுக்கொள்வதை உறுதி செய்கின்றனர். தற்போது கம்பனி சட்டத்தின் கீழ் தகுதிவாய்ந்த செயலாளர்களாக உள்ள PW கார்ப்பரேட் செக்ரெட்டரியல் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் கம்பனி செயலாளர்களாக இருக்கின்றனர்

**சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்குதல்**

அனைத்து பணிப்பாளர்களும் கம்பனியின் நிதி மற்றும் முகாமைத்துவ் தகவல்களை அணுகலாம். நிறுவனம் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கும் கம்பனியின் விவகாரங்களை நிர்வகிப்பதில் உரிய விடாமுயற்சியுடன் செயல்படுவதற்கும் பணிப்பாளர்கள் ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொள்கின்றனர். இதற்கு மேலதிகமாக சபையின் கொள்கைகள் பின்பற்றப்படுவதை உறுதிசெய்ய பரிசோதனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் உள்ளன.

**நிதி வெளிப்படுத்தல்கள் மற்றும் வெளிப்படைத்தன்மை**

நிதி கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் மற்றும் கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்றன.

அரசியலமைப்பின் 19 வது மற்றும் 20 வது திருத்தங்களின் பிரகாரம் மற்றும் உடன் சேர்த்து வாசிக்கப்படும் அரசியலமைப்பின் பிரிவு 154 இன் பிரகாரமும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி கம்பனியின் கணக்காய்வாளராக தொடர்கிறார்.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் குறித்து ஒரு அபிப்பிராயத்தை தெரிவிப்பதற்கு கம்பனியின் முகாமை அல்லது சபையின் தலையீடு இல்லாமல் கணக்காய்வாளர்கள் சுயாதீனமாக செயற்படுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். தேவையான அனைத்து தகவல்களும் கணக்காய்வாளர்கள் பரிசோதனைக்காக வழங்கப்படுகின்றன.

**ஒழுக்க நெறிமுறைசார் நியமங்கள்**

கம்பனியின் அனைத்து ஊழியர்களும் கம்பனியின் சார்பாக தங்கள் கடமைகள் மற்றும் பரிவர்த்தனைகளின் செயல்திறனில் மிக உயர்ந்த தரமான நேர்மையைப் பேணுதல் வேண்டும் என்று கம்பனி கோருகின்றது.

கம்பனியின் நோக்கம், தொலைநோக்கு, இலக்குகள் மற்றும் பெறுமதிகளுக்கு ஏற்ப கம்பனியினை உயர் மட்ட சாதனைகளுக்கு இட்டுச் செல்லும் அதிகாரம் பெற்ற மற்றும் பயிற்சி பெற்ற அர்ப்பணிப்புள்ள பணியாளர் குழுவை உருவாக்குவதற்காக ஊழியர்களின் பயிற்சி மற்றும் தொழில் வளர்ச்சியில் நிறுவனம் கவனம் செலுத்துகின்றது.

**நியதிச்சட்டரீதியான கொடுப்பனவுகள்**

அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ளவாறான அனைத்து நியதிச்சட்டரீதியான கொடுப்பனவுகளும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன அல்லது பொருத்தமான இடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS - 19 (ஊழியர் நலன்கள்) இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளன.

**கணக்களிதன்மை மற்றும் வெளிப்படுத்தல்கள்**

2023 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டில், கம்பனியின் விவகாரங்கள் குறித்த உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்குகின்றன என்பதைத் திருப்திப்படுத்துவதற்காக மாதாந்த நிதிக்கூற்றுக்களை மற்றும் வருடாந்த நிதிக்கூற்றுக்களை பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள் விரிவாக மீளாய்வு செய்துள்ளனர், மேலும் இந்த நடைமுறைகள் நிறுவன ஆளுகைக்கான சிறந்த நடைமுறைக் கோட்பாடாகும் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான நிறுவன ஆளுகைக்கான வழிகாட்டுதல்களின் பிரகாரம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

**சுதந்திரமான தொழில்சார் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளல்**

சபையானது தனது கடமைகளை நிறைவேற்றுவதில், தேவை ஏற்படும் போது, கம்பனியின் செலவில், வெளித் தரப்பினர்களிடமிருந்து சுயாதீனமான தொழில்சார் ஆலோசனையைப் பெறுகின்றது.

ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட் சபையின் உத்தரவின் பிரகாரம்

**பி. டபிள்யூ. கார்ப்பரேட் செக்ரட்டீரியல் (பிரைவேட்) லிமிடெ**
கம்பனி செயலாளர்கள்

கொழும்பு
திகதி: 30 ஏப்ரல் 2024

# இடர் மேலாண்மை

பல சவால்களுக்கு மத்தியில் பன்முகப்படுத்தப்பட்ட சந்தைகளை ஈர்ப்பதற்கும் தக்கவைத்துக்கொள்வதற்கும் உள்ள தேவையை எதிரொலிக்கும் மிகவும் போட்டி நிறைந்த தொழில்துறையின் முன்னணியில் இருப்பதால், நீண்டகால பங்குதாரர் பெறுமதியினை வழங்குவதில் அதன் நோக்கத்தில் ஒருங்கிணைந்ததான ஒரு செயல்முறையாக இடர் முகாமைத்துவத்தை கம்பனி கருதுகின்றது. தற்போதைய வணிகச் சூழலில், மாற்றம் என்பது விதிவிலக்காக இல்லாமல் வழக்கமாகிவிட்ட நிலையில், வணிக செயல்படுத்தல் மற்றும் இணக்கம் ஆகியவற்றில் சமநிலைப்படுத்துதல் மற்றும் தந்திரோபாய திட்டமிடலை மேற்கொள்ளுதல் என்பவற்றில் ஹோட்டல் முக்கிய பங்கினை தொடர்ந்து வகித்து வருகிறது. இது தகவலறிந்த முடிவெடுப்பதற்கும் வாய்ப்புகள் மற்றும் அவற்றின் உள்ளார்ந்த இடர்கள் பற்றிய உண்மையான மதிப்பீட்டிற்கும் உதவுகின்றது மற்றும் இது முக்கிய சொத்துக்களை சரியான முறையில் பாதுகாக்க அல்லது மேம்படுத்த ஹோட்டலுக்கு உதவுகின்றது. இடர் முகாமைத்துவ கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலில் இடர் மீளாய்வினையும் முகாமைத்துவ குழு சேர்த்துள்ளது.

எமது இடர் முகாமைத்துவ தளமானது கம்பனிக்குள் ஏற்படும் இடர் வகைகளை அடையாளம் காண்பதிலும், அந்த சாத்தியமான இடர்களை அளவிடுவதிலும், அவற்றைத் தணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அதற்கான தந்திரோபாயங்களை உருவாக்குவதிலும் கவனம் செலுத்துகின்றது. இடர் முகாமைத்துவம் என்பது எங்கள் கூட்டமைப்பு ஆளகை கட்டமைப்பு மற்றும் தந்திரோபாய அபிவிருத்தி செயல்முறையின் ஒரு முக்கிய கூறாகும் மற்றும் போதுமான தன்மை மற்றும் பின்பற்றுதலை உறுதி செய்வதற்காக அனைத்து செயல்பாடுகளிலும் பொருத்தமான முறைமைகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வெற்றிகரமாகவும் மூலோபாய ரீதியாகவும் ஹோட்டல் கட்டமைத்துள்ளது.

எங்கள் இடர் முகாமைத்துவ சட்டகமானது செயற்பாட்டு சூழலில் மாறிவரும் இயக்கவியலை தொடர்ந்து பிரதிபலிக்கிறது மற்றும் பொருந்தக்கூடிய இடங்களில் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப எமது கொள்கை கட்டமைப்புகளுடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது.

**இடர் முகாமைத்துவ சட்டகம்**

ஹோட்டலின் பொது முகாமையாளரால் இடர் முகாமைத்துவ குழு வழிநடத்தப்படுகின்றது, பிரதான ஹில்டன் வேர்ல்ட்வைட் பிராந்திய அலுவலகத்துடன் கலந்தாலோசித்து நன்றாக வடிவமைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ சட்டகத்தினுள் அதன் சட்டரீதியாகவும், நம்பிக்கைக்குரியதாகவும் மற்றும் ஒழுங்குமுறையாகவும் பொறுப்புகளை நிறைவேற்றுதல் மற்றும் கம்பனியின் சபைக்கு அறிக்கை வழங்குதல் என்பவற்றிற்கும் இடருக்கான தந்திரோபாயங்களை செயல்படுத்துவதங்கும் அவருக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஹோட்டலின் தொழிற்பாட்டு ரீதியான தலைவர்கள் பொது முகாமையாளருடன் இணைந்து இடர் முகாமைத்துவ குழுவை உருவாக்குகின்றார்கள்.

புலனாய்வு தரவு சேகரிப்பு, தரத்திற்கான கணக்காய்வு, பாதுகாப்பிற்கான கணக்காய்வு உள்ளக கணக்காய்வு மற்றும் வாடிக்கையாளரின் கருத்துக்களை பெறல் மற்றும் சம்பவங்கள் போன்ற வழிமுறைகள் மூலம் தொடர்புடைய அனைத்து உள்ளக மற்றும் வெளிப்புற இடர்களும் அடையாளம் காணப்படுவதை வழிமுறையொன்று உறுதி செய்கின்றது. இந்த அடையாளம் காணப்பட்ட இடர்கள் வணிகம் மீதான தாக்கம், நிகழ்வின் சாத்தியக்கூறு மற்றும் வேகம் ஆகியவற்றின் அடிப்படையில் பின்னர் மதிப்பிடப்படுகின்றன. தாக்கம் மற்றும் நிகழ்தகவின் அடிப்படையில் இடர்கள் வரைபடமாக்கப்படுகின்றன, இது முக்கிய இடர் வெளிப்பாடுகளை முன்னுரிமைப்படுத்த உதவுகின்றது.

இந்த இடர் தரவரிசைகளின் தீர்வுகள் ஒரு இடர் கட்டத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த கட்டமானது “உயர்வானது முதல் முக்கியமற்றது“ என்ற அளவில் இடர்களை மதிப்பிடுகின்றது. இது ஹோட்டலின் செயல் நடவடிக்கை திட்டங்களின் இடர்களுக்கு முன்னுரிமை அளிக்கவும், தடுத்தல் கண்டு பிடித்தல் மற்றும் சரிசெய்தல் வகைப்படுத்தலின் கீழ் இடர் குறைப்பு தந்திரோபாயங்களினை திட்டமிடவும் உதவுகின்றது.

மாதாந்த அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட இடர்களை ஹோட்டலின் இடர் முகாமைத்துவ குழுவானது மீளாய்வு செய்கின்றது. எந்தவொரு தணிப்பு நடவடிக்கையையும் செயல்படுத்துவதற்காக பொறுப்பு வழங்கப்பட்ட இடர் உரிமையாளர்கள் பொறுப்பாவார்கள் மற்றும் பொது முகாமையாளர் மூலம் சபைக்கு அறிக்கையிடுகின்றார்கள். ஒருங்கிணைந்த நிதி மற்றும் செயல்பாட்டு இணக்கப்பாட்டு அறிக்கை முகாமையினால் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இடர் முகாமைத்துவ கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலில் இடர் மீளாய்வினையும் முகாமைத்துவ குழு சேர்த்துள்ளது.

| இடர் வகுதி | இடர் வகை | இடர்களைக் குறைப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் செயல்நடவடிக்கை திட்டங்கள் |
|---|---|---|
| செயற்பாட்டு இடர் | தொழில்நுட்ப இடர்<br>இலத்திரனியல் முறைமைகளின் மற்றும் தகவல் முறைமைகளின் போதாமைக்கான தோல்விக்கான இடர் | • முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட சொத்து முகாமைத்துவம், மூலப்பொருள் முகாமைத்துவம், விற்பனை புள்ளி மற்றும் நிதி தகவல் முறைமையினை செயல்படுத்துதல் மற்றும் செயற்பாட்டு வினைத்திறன்கள் மற்றும் தகவல்களின் தடையற்ற பாய்ச்சலினை உறுதி செய்தல்.<br>• முறைமையில் தோல்வி ஏற்பட்டால் பேரிடர் மீட்புத் திட்டத்தின் இருக்கும் தன்மை மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்தினை உறுதி செய்தல்.<br>• ஹோட்டலின் கணினி நிறுவல்களைப் பாதுகாப்பதற்கான கட்டுப்பாடுகளை ஹோட்டலின் தகவல் தொழில்நுட்ப பிரிவு செயல்படுத்தியுள்ளது மற்றும் இது செயலிழப்பு நேரத்தைக் குறைப்பதற்கும் செயல்பாட்டின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கும் ஆகும்.<br>• தகவல் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதற்காக வலையமைப்பு பாதுகாப்பு செயல்முறையில் தொடர்ச்சியான மீளாய்வு மேற்கொள்ளப்படுகிறது. |

| இடர் வகுதி | இடர் வகை | இடர்களைக் குறைப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் செயல்நடவடிக்கை திட்டங்கள் |
|---|---|---|
| | உள்ளக செயன்முறை ரூ நடைமுறைகள்<br>நிதிசார் நட்டம் மற்றும் வணிகத்திற்கு இடையூறு மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளில் முறிவு ஏற்படும் இடர். | • உள்ளக கட்டுப்பாடுகளுடன் இணங்குவதை உறுதி செய்வதற்காக தெளிவாக வரையறுக்கப்பட்ட முறைமைகள் ரூ நடைமுறைகள் காணப்படுகின்றன மற்றும் அவற்றின் தொடர்ச்சியான செயல்திறனுக்காக அவ்வப்போது அவை மீளாய்வு செய்யப்படுகின்றன.<br>• ஹில்டன் வேர்ல்ட் வைடைச் சேர்ந்த ஒரு உள்ளக கணக்காய்வு குழு, இந்த முறைமைகளின் போதுமான தன்மை மற்றும் செயல்திறன் மற்றும் இணக்கப்பாட்டின் நிலை குறித்து வழக்கமான மீளாய்வுகளை செய்து அறிக்கையிடுகின்றது.<br>• வருடாந்த கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வகள் மற்றும் முறைமைகள் மற்றும் செயல்முறைகளைக் கண்காணித்தல் என்பன தொடர்பில் கணக்காய்வு குழுவிடம் அறிக்கை அளித்தல் மற்றும்ர்னுடு ஆல் அவ்வப்போது மீளாய்வு செய்தல். |
| | போட்டித்தன்மை இடர்<br>புதுப்பித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் காரணமாக சந்தைப் பங்கில் ஏற்படும் குறைவு ஏற்படல், போட்டித்தன்மையுடன் இருக்கத் தவறுதல்<br><br>குறைந்த ஆக்கிரமிப்பு மற்றும் அறை விகிதாசாரங்களுக்கு வழிவகுக்கின்றது. | • சேவை வழங்கலில் உயர்ந்த தரம் மற்றும் பணத்திற்கான பெறுமதி ஆகியவற்றை உறுதி செய்வதற்காக சேவை தர நியமங்களை கட்டாயமாக கடைபிடித்தல்.<br>• வசதிகள் மற்றும் சேவைகளை வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.<br>• வியாபாரகுறி தரநியமங்கள் மற்றும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (SOP) கடைபிடிப்பதை மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்.போட்டியாளரின் தந்திரோபாயம் மற்றும் சந்தையில் புதிதாக நுழைபவர்களை எதிர்பார்த்து அதற்கேற்ப தந்திரோபாயத்தினை வகுத்தல். உற்பத்திகள் மற்றும் சேவைகளில் நிலையான படைப்பாற்றல் மற்றும் புதுமையினை பேணல். |
| செயற்பாட்டு இடர் | பண்டக் குறி ரூ நன்மதிப்பு இடர்<br>கம்பனியின் பண்டக் குறி மற்றும் நன்மதிப்புக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய செயல். | • வசதிகள் மற்றும் சேவைகள் இரண்டையும் உள்ளடக்கிய விருந்தினர்களின் கருத்துக்களுக்காக வழக்கமான பண்டக் குறி கணக்காய்வுகள் மற்றும் திடீர் கணக்காய்வுகளை நடத்துதல்.<br>• HACCP மற்றும் ஏனைய தரநியம சான்றிதழ் நியமங்களை பெற்றுக்கொள்வதன் மூலம் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கான சிறந்த நடைமுறைகளுடன் இணங்குதல். உற்பத்தி மற்றும் சேவை ஆகிய இரண்டிலும் தொழில்துறை சார்ந்த சிறந்த நடைமுறைகளை தரப்படுத்துதல்.<br>• ஹோட்டல் துறையிலுள்ள முக்கிய முகாமைத்துவ பதவிகள் போதுமான அனுபவமுள்ள தகுதிவாய்ந்த மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்களால் வகிக்கப்படுவதை உறுதி செய்தல். பண்டக்குறியின் வாக்குறுதிக்கு ஏற்ப புதுமையான சேவையினை வழங்குதல். CSR முயற்சிகள் மூலம் பெருநிறுவன சமூகபொறுப்பிற்கு பொறுப்பாதல். |
| | மனித வளங்களுடனான இடர்<br>பொருத்தமற்ற தொழிலாளர் நடவடிக்கையினால் முக்கிய பணியாளர்கள் மற்றும் திறமையான பணியாளர்களை இழக்கும் அபாயம்<br><br>பணியாளர்களுக்கான ஆபத்தான வேலை நிலைமைகள் / இரசாயன தாக்கங்களுக்கு ஆளாக நேரிடுவதால் ஏற்படும் காயங்கள் / சுகாதார கேடுகள். | • செயல்திறன் மதிப்பீட்டு செயன்முறையிலிருந்து எழும் குறுக்கு-வெளிப்பாடு பயிற்சி வாய்ப்புகளை வழங்கும் கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்.<br>• நல்ல முதலாளி-தொழிலாளி உறவுகள், ஊழியர் நலன்புரி மற்றும் தொழிலாளர் சங்கத்துடன் பயனுள்ள மற்றும் திறந்த தொடர்பு ஆகியவற்றை வலியுறுத்துதல், இதனால் வெற்றி-வெற்றி என்ற விளைவு அடையப்பெறும்.<br>• ஒருங்கிணைப்பு கூட்டங்கள், சுற்றுலாக்கள், குடும்பக் ஒன்று கூடல்கள் மற்றும் மத நிகழ்வுகள் மூலம் கம்பனி முழுவதும் ஒற்றுமை மற்றும் சுய-உரிமை உணர்வை வளர்த்தல்.<br>• சந்தையில் அதிக போட்டித்தன்மையுடன் இருக்கும் முக்கிய குழு உறுப்பினர்களின் சம்பள அளவை சரிசெய்தல். நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பு தரநியமங்கள் மற்றும் நடைமுறைகளை கண்டிப்பாக கடைபிடித்தல். |

# இடர் மேலாண்மை

| இடர் வகுதி | இடர் வகை | இடர்களைக் குறைப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் செயல்நடவடிக்கை திட்டங்கள் |
|---|---|---|
| நிதிசார் இடர் | முதலீட்டு இடர் | • மேற்கொள்ளப்படும் எந்தவொரு அதிகரிக்கும் முதலீடுகளுக்கும் இலக்குப்படுத்தப்பட்ட இலாபம் அடையப்படுவதை உறுதிசெய்வதற்கு பாதீடுகளை கால இடைவெளியில் கண்காணித்தல்.<br>• புதிய முதலீடுகள் இலக்குப்படுத்தப்பட்ட சுழூஜகளின் அடிப்படையில் உறுதிமொழிக்கு முன் யதார்த்தமான காசுப்பாய்வுகளுடன் மீளாய்வு செய்யப்படுகின்றன.<br>• முறையாக சொத்துக்கள் செயற்படுத்துனரால் பராமரிக்கப்படவதை உறுதி செய்வதற்காக சொத்துக்களை அவ்வப்போது மீளாய்வு செய்தல். |
| | கடன் இடர் | • கடனை திருப்பிச் செலுத்தத் தவறுவதன் தாக்கத்தைக் குறைப்பதற்கு கடன் கொள்கை மற்றும் கட்டுப்பாடுகளை அவ்வப்போது மீளாய்வு செய்தல்.<br>• புதிய கடனாளிகளுக்கான கடன் வரம்புகள் மற்றும் அங்கீகார செயல்முறையை தொடர்ந்து மீளாய்வு செய்தல்.<br>• உடனடியான தொடர் நடவடிக்கைகளுக்காக கடன்பட்டோர் வயதை மாதாந்தம் கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல். |
| | திரவத்தன்மை இடர் | • பகிரப்பட்ட சேவைக்கான பெறுகையின் மீது வழங்குனருடன் பேரம்பேசி சிறந்த கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளல்.<br>• கம்பனியானது அதற்கு நிதியளிக்கும் திறனை உறுதி செய்வதற்காக செயற்பாட்டு காசுக்கான வங்கி வசதிகள் நெருக்கமான மீளாய்வு மற்றும் அங்கீகார செயல்முறை மூலம்<br>• பெறப்படுகின்றன.<br>• நிதியளிப்பு செய்வதற்கான போதுமான காசுப்பாய்ச்சல்களின் அடிப்படையில் நிலைபேறான யதார்த்தமான காசு எதிர்வுகூறல்களுடன் மூலதன முதலீடுகள் முகாமையினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன. |
| பொருளாதாரம் மற்றும் அரசியல் இடர் | நாணயமாற்று இடர் | • போதுமான ஐக்கிய அமெரிக்க டொலர் வைப்புத்தொகையை வைத்திருப்பதன் மூலம் அந்நியச் செலாவணி வருமானத்துடன் வெளிநாட்டு நாணயக் கொடுப்பனவுகளை உகந்த முறையில் ஹெட்ஜிங் செய்தல்.<br>• அதிக நாணயமாற்று விகிதங்களில் முன்கூட்டியே முன்பதிவு செய்யும் வாய்ப்பை அதிகப்படுத்தி நாணயமாற்று இடரை குறைத்தல். |
| | பிஸ்கால் இடர் | • பேச்சுவார்த்தைகளுக்கான ஒப்பந்தங்கள் மற்றும் புதிய நிதி ஏற்பாடுகளுக்கு எதிராக சந்தை வட்டி விகிதங்களை அவ்வப்போது மீளாய்வு செய்தல்<br>• வரி மாற்றங்கள் மற்றும் ஏனை வரிகளைச் சமாளிப்பதற்கு பயனுள்ள வரி திட்டமிடல் தந்திரோபாயங்கள் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்தல். |

ஹோட்டல்களை முகாமை செய்வதற்காக அமெரிக்காவின் ஹில்டன் வேர்ல்ட்வைட் வகுத்துள்ள வழிகாட்டுதல்களின் பிரகாரம், ஆண்டு முழுவதுமான செயல்பாடுகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் குறிப்பிடத்தக்க இடரினை இனங்கண்டு, மதிப்பீடு செய்து, முகாமை செய்ய ஹோட்டலால் செயல்படுத்தப்படும் செயல்முறைகளை கம்பனி தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

இடர் முகாமைத்துவத்தை கவனிக்கும் பிராந்திய அலுவலகத்தால் அவ்வப்போது மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு திருத்த நடவடிக்கைகளுக்காக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2024 திசெம்பர் 31 அன்று முடிவுற்ற நிதியாண்டிற்கான ஒவ்வொன்றிற்கும் நிலை மற்றும் தணிப்பு தந்திரோபாயங்கள் இடர் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் சில முக்கிய பொருட்கள் கீழே உள்ளன.

# மேலாண்மை விவாதம் மற்றும் பகுப்பாய்வு

**நிதி மூலதனம்**

ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட்டில் தந்திரோபாய முன்னேற்றம் மற்றும் செயல்பாட்டு மீள்தன்மைக்கு ஒரு முக்கியமான இயலுமைப்படுத்துனராக நிதி மூலதனமானது தொடர்ந்து செயல்படுகின்றது. சிறப்பான சேவையினை மேம்படுத்துவதற்கும் சிறந்த விருந்தினர் அனுபவங்களை வழங்குவதற்கும் உதவிசெய்த பெரிய விருந்தினர் அறையொன்றின் புதுப்பித்தல் செயற்திட்டத்தின் நிறைவானது எமது உறுதிப்பாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை 2024 ஆம் ஆண்டில் அடையாளப்படுத்தியுள்ளது. இந்த மூலதன முதலீடானது முக்கிய விருந்தோம்பல் உட்கட்டமைப்பை நவீனமயமாக்கியுள்ளது, வளர்ந்து வரும் சந்தை எதிர்பார்ப்புகளுடன் எங்கள் சலுகைகளை சீரமைத்ததுடன் விருந்தோம்பல் துறையில் ஹோட்டலின் போட்டித்தன்மையையும் வலுப்படுத்தியது.

உயர்ந்த ஆக்கிரமிப்பு விகிதங்கள் மற்றும் அனைத்து வணிகப் பிரிவுகளிலும் வருவாய் மேம்படுத்தலுக்கான இலக்கு அணுகுமுறை, புதுப்பித்தலுக்குப் பிந்தைய வலுவான நிதி செயல்திறன் என்பன விவேகமான கிரய முகாமைத்துவத்தினால் இயக்கப்படும் ஒரு மீட்சியை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் இலங்கையின் விருந்தோம்பல் துறையில் ஏற்பட்ட புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கைக்கு மத்தியில் ஹில்டன் கொழும்பு அதன் இலாபத்தை மேம்படுத்தவும் விருந்தினர் திருப்தியை அதிகரிக்கவும் அதன் மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பை தந்திரோபாய ரீதியாகப் பயன்படுத்தியுள்ளது.

**வருமான பகுப்பாய்வு - நிதியாண்டு 2024 எதிர் நிதியாண்டு 2023**

- 2024 ஆம் நிதியாண்டில், நிலையான செயல்பாட்டு மீள்தன்மை காரணமாக ஹில்டன் கொழும்பு அதன் முக்கிய வருமான நீரோட்டங்களில் வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. மொத்த வருமானம் கடந்த ஆண்டை விட 24.1% அதிகரித்துள்ளதுடன் இது 2023 ஆம் அண்டுக்கான ரூபா. 4.35 பில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா. 5.39 பில்லியன் தெகையினை எட்டியிருந்தது.
- அறை வருமானம் ரூபா.1.85 பில்லியனை எட்டியுள்ளதுடன் இது 62.5% கணிசமான அதிகரிப்பையும் பதிவுள்ளது. இந்த வளர்ச்சி முதன்மையாக அதிகரித்த ஆக்கிரமிப்பு வீதம் மற்றும் மேம்பட்ட சராசரி நாளாந்த வீதங்களால் உந்தப்பட்டதாகும், இது புதிதாகப் புதுப்பிக்கப்பட்ட விருந்தினர் அறைகளின் படிப்படியான நிறைவுகளால் ஆதரிக்கப்பட்டது.
- உணவு மற்றும் குடிபான வருமானம் ரூபா. 3.34 பில்லியனால் 10.1% அதிகரித்துள்ளது, உணவு விற்பனை நிலையங்கள் மற்றும் நிகழ்ச்சிக்கான உணவு பரிமாறும் சேவைகள் அனைத்தும் இதற்கு அதிகரித்த ஆதரவினை அளித்தன. பருவகால உணவுப்பட்டியல்கள் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட விளம்பர முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் இந்த செயல்திறன் மேலும் மேம்படுத்தப்பட்டது.
- ஸ்பா மஸாஜ், சலவை மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் போன்ற துணை சேவைகளிலிருந்து நிலையான வருமானத்தைப் பேணுவதில ஏனைய செயல்பாட்டுத் துறைகள் 0.6% அதிகரிப்புடன் நிலையாக இருந்தன. சுற்றுலா மறுமலர்ச்சியைப் பயன்படுத்தி பயனுள்ள உத்திகள் மற்றும் 2025 நிதியாண்டில் ஹோட்டலை தொடர்ச்சியான வளர்ச்சிக்கு நிலைநிறுத்துவதற்கான உகந்த செயல்பாடுகளை இந்த செயல்திறனானது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

**வருவாய் அமைப்பு**




முக்கிய வருமான மூலங்களின் விவரக்குறிப்பு (ஷரூபாய் ‘000)

| வருவாய் அமைப்பு | 2024 நிதியாண்டு | 2023 நிதியாண்டு | மாற்றம் (%) |
|---|---|---|---|
| அறை வருவாய் | 1,848,222 | 1,137,293 | +62.5% |
| உணவு மற்றும் பான வருவாய் | 3,342,408 | 3,034,962 | +10.1% |
| பிற செயற்பாட்டு துறைகள் | 56,153 | 55,845 | +0.6% |
| மொத்த வருவாய் | 5,393,089 | 4,346,751 | +24.1% |

**ஐந்து ஆண்டுகளின் வருவாய் போக்கு**



# மேலாண்மை விவாதம் மற்றும் பகுப்பாய்வு

**செலவு மற்றும் செயற்பாட்டு இலாப பகுப்பாய்வு**
2024 நிதியாண்டில் கம்பனி குறிப்பிடத்தக்க செயல்பாட்டு ரீதியான மீட்சியைப் பதிவு செய்துள்ளது, தேய்வுக்கு முன்னரான இலாபம் ரூபா. 872.1 மில்லியனாக அதிகரித்துள்ளதுடன் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா. 163.3 மில்லியன் தொகையான 433% வளர்ச்சியைக் பிரதிநிதித்துவம் செய்கின்றது. உறுதியான வருமான வளர்ச்சி மற்றும் பயனுள்ள கிரய முகாமைத்துவம் முதலிய முயற்சிகளால் இந்த கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

- **நிர்வாகச் செலவுகள்** - வருமானத்தின் வளர்ச்சி அதிகரித்ததன் காரணமாக நிர்வாகச் செலவுகள் 19.2% ஆல் ரூபா. 1.08 பில்லியனாக உயர்ந்துள்ளது. வருமானத்தின் சதவீதமாக பார்க்கையில் செலவுகள் முந்தைய ஆண்டோடு ஒத்துப்போகின்றன, இது நிலையான செயல்பாட்டுத் திறனை பிரதிபலிக்கின்றது.
- **விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் செலவுகள்** 2.1% ஆல் ஓரளவு உயர்ந்துள்ளமையானது விளம்பரச் செலவுகளின் வினைத்திறனான முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டைக் குறிக்கின்றது.
- **ஏனைய செலவுகள்** - கட்டணத் திருத்தத்துடனான எரிசக்திச் செலவு குறைப்பு காரணமாக ஏனைய செலவுகள் 12.4% ஆல் ரூபா. 611.7 மில்லியனாக குறைவடைந்துள்ளது.
- **ஏனைய இலாபங்கள் மற்றும் நட்டங்கள்** - முதன்மையாக புதுப்பித்தலுக்கு முந்தைய கட்டத்தில் ஓய்வு பெற்ற சொத்துக்களை அகற்றல் செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட இலாபங்களால் தூண்டப்பட்டு ஏனைய இலாபங்கள் மற்றும் நட்டங்கள் 117.9% ஆல் ரூபா.28.7 மில்லியனாக கணிசமாக முன்னேறியுள்ளது. இது நிறுவனத்தின் ஒட்டுமொத்த இலாபத்திற்கு சாதகமாக பங்களிப்பு செய்துள்ளது.

| வகை | 2024 நிதியாண்டு | 2023 நிதியாண்டு | மாற்றம் (%) |
|---|---|---|---|
| வருவாய் | 5,393,089 | 4,346,751 | +24.0% |
| விற்பனைச் செலவு | (2,708,885) | (2,445,618) | +10.8% |
| மொத்த லாபம் | 2,684,204 | 1,901,133 | +41.1% |
| பிற லாபங்களும் இழப்புகளும் | 28,621 | 13,175 | +117.2% |
| நிர்வாகச் செலவுகள் | (1,077,748) | (904,197) | +19.2% |
| விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் செலவுகள் | (151,347) | (148,227) | +2.1% |
| பிற செலவுகள் | (611,748) | (698,548) | -12.4% |
| மதிப்பழிவு முன் செயற்பாட்டு லாபம் | 872,082 | 163,335 | +433.7% |

**மொத்த லாப விகிதம்**




Revenue (Rs.Mn)
**5,393**
2023 - 4,347

EBIT (Rs.Mn)
**311**
2023 - (204)

PBT (Rs.Mn)
**(268)**
2023 - (784)

Interest Cover (Times)
**0.5**
2023 - (0.34)

**தேறிய நிதிக்கிரய பகுப்பாய்வு**
2024 இல் முடிவுற்ற நிதியாண்டில் மொத்த நிதி வருமானம் 40.5% ஆல் ரூபா. 11 மில்லியனாக குறைவடைந்திருந்தது, இது வைப்புத்தொகை மற்றும் ஒதுக்கங்களில் இருந்தான வட்டி வருமானத்தில் ஏற்பட்ட கணிசமான சரிவின் காரணமாகவே பிரதானமாக ஏற்பட்டுள்ளது.

நிதிச் செலவுகள் 1.3% ஆன ரூபா.590 மில்லியன் மொத்த தொகையாக சிறிய அளவில் காணப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் கடன்கள் மீதான குறிப்பிடத்தக்க கொள்கை விகிதக் குறைப்புகளால் இந்த குறைவு ஏற்பட்டது. தொடர்ந்து கொண்டிருக்கும் புதுப்பித்தல் செயற்திட்டத்திற்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்படும் காலக் கடன் வசதிகள் தொடர்பான அதிக வட்டிச் செலவுகளால் ஓரளவு இந்தச் சரிவானது ஈடுசெய்யப்பட்டது, இது மீளாய்வாண்டின் போது முழுவதுமாக குறைக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, புதுப்பிக்கப்பட்ட அறைகளை நிறைவு செய்து செயல்படுத்துவதற்கான செலவொன்றின் பகுதியாக வட்டி செலவில் கணிசமான பகுதி மூலதனமாக்கல் செய்யப்பட்டது. எனவே, செயற்திட்டத்தின் போதான இலாபநட்ட கூற்றில் இது முழுமையாக பிரதிபலிக்கப்படவில்லை.

**பெறுமதி சேர்க்கப்பட்ட கூற்று**

| (ரூபா. 000) இல் | 2024 | 2023 |
|---|---|---|
| வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான மொத்த வருமானம் | 5,967,394 | 4,808,636 |
| கழி: வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட சேவை கட்டணம் | (521,435) | (419,310) |
| கழி: சுற்றுலா அபிவிருத்தி தீர்வை | (52,870) | (42,575) |
| **வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான தேறிய வருமானம்** | **5,393,089** | **4,346,751** |
| நிதி வருமானத்திற்கான சீராக்கம் | 10,740 | 18,037 |
| ஏனைய இலாபம் மற்றும் நட்டங்களுக்கான சீராக்கம் | 28,621 | 13,175 |
| | 5,432,451 | 4,377,963 |
| கழி: வெளிவாரி மூலங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் கிரயம் | (2,812,687) | (2,874,885) |
| **பெறுமதி சேர்க்கப்பட்டது** | 2,619,764 | 1,503,078 |

| (ரூபா. 000) இல் | 2024 | | 2023 | |
|---|---|---|---|---|
| பின்வருமாறு விநியோகிக்கப்படுகின்றது: | | | | |
| ஊழியர்களுக்கு ஊதியம் மற்றும் சேவை கட்டணமாக | 1,262,418 | 48% | 1,026,190 | 68% |
| அரசாங்கத்திற்கு வரிகளாக | 756,873 | 29% | 499,310 | 33% |
| மூலதன வழங்குநர்களுக்கு | | | | |
| கடன்கள் மற்றும் கடன்களுக்கான வட்டியாக | 379,638 | 14% | 299,097 | 20% |
| வணிகத்திற்குள் நிறுத்திவைக்கப்படுபவை | | | | |
| தேய்வு மற்றும் காலக்கழிவீடுகளாக | 560,672 | 21% | 367,193 | 24% |
| ஒதுக்கங்களாக | (339,837) | -13% | (688,712) | -46% |
| | **2,619,764** | **100%** | **1,503,078** | **100%** |

# மேலாண்மை விவாதம் மற்றும் பகுப்பாய்வு

**சொத்துப் பகுப்பாய்வு - முக்கிய சிறப்பம்சங்கள**

மூலதன முதலீடுகள் மற்றும் சொத்தின் செயற்திறன் மேம்படுத்தல் காரணமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த சொத்துக்கள் 4.2% இனால் ரூபா. 21.43 பில்லியனாக அதிகரித்துள்ளது.

- விருந்தினர் அறை புதுப்பித்தல் செயற்திட்டம் நிறைவடைந்ததிலிருந்து சொத்து மூலதனத்தை பிரதிபலிக்கும் வகையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (PPE) 24.0% இனால் ரூ. 14.32 பில்லியனாக அதிகரித்துள்ளது.
- மூலதன குறைவேலை (CWIP) 94.8% இனால் குறைவடைந்து ரூபா. 89 மில்லியனாக உயர்ந்துள்ளது. இது செயற்திட்ட நிறைவில் குறிப்பிடத்தக்க செயல்முன்னேற்றத்தைக் குறிக்கின்றது.
- மூலதனச் செலவுகள் மற்றும் கடன் சேவை காரணமாக காசு மற்றும் வங்கி மீதிகள் 62.4% இனால் ரூபா. 104 மில்லியனாக குறைந்துள்ளது.
- தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெற வேண்டியவைகள் 378.9% இனால் அதிகரித்துள்ளன, இது பிரதானமாக பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்களினால் எழுகின்ற பெறவேண்டிய தொகைகளால் ஏற்பட்டவைகளாகும்.
- மூலதனச் செயற்திட்டங்களுடன் தொடர்புடைய முற்பணங்களைத் தீர்ப்பதன் காரணமாக ஏனைய சொத்துக்கள் 60.7% ஆல் குறைவடைந்துள்ளன.

**சொத்துக்களின் சுருக்கம் (ஷரூபாயில் ‘000)**

| சொத்து வகைகள் | 2024 | 2023 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **நிலையான சொத்துக்கள்** | 20,553,752 | 19,474,132 | +5.5% |
| - சொத்து, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 14,323,547 | 11,553,379 | +24.0% |
| - குத்தகை நிலம் | 6,141,189 | 6,215,377 | -1.2% |
| - மூலதனப் பணிகள் நடைபெற்று வருகின்றன | 89,016 | 1,705,375 | -94.8% |
| **தற்போதைய சொத்துக்கள்** | 872,837 | 1,092,826 | -20.1% |
| - பணம் மற்றும் வங்கிக் கையிருப்பு | 103,596 | 275,356 | -62.4% |
| - பிற சொத்துக்கள் | 160,708 | 385,056 | -58.3% |
| - வணிக மற்றும் பிற பெறவேண்டிய தொகைகள் | 343,568 | 230,329 | +49.2% |
| - உறவுடைய நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய தொகைகள் | 88,407 | 42,820 | +106.5% |
| - கையிருப்பு | 109,792 | 97,317 | +12.8% |
| - தற்போதைய நிதிசார் சொத்துக்கள் | 66,766 | 61,947 | +7.8% |
| **மொத்த சொத்துக்கள்** | 21,426,588 | 20,566,956 | +4.2% |

**மொத்த சொத்துக்கள் எதிராக ஒரு பங்கிற்கான நிகர சொத்து மதிப்பு**




**உரிமை மற்றும் பொறுப்புகள் பகுப்பாய்வு**

ஆண்டு இறுதியில் உள்ளவாறான மொத்த உரிமை மற்றும் பொறுப்புகள் 4.2% இனால் ரூபா. 21.43 பில்லியனாக உயர்ந்துள்ளது, இது குழுவின் நிதி கலவை மற்றும் மூலதன கட்டமைப்பு இயக்கவியலை பிரதிபலிக்கின்றது.

- பங்குதாரர்களின் பங்கு 2.9% குறைவடைந்து ரூபா.11.92 பில்லியனாக உள்ளது, இது முதன்மையாக நடப்பாண்டு வரிக்குப் பின்னரான நட்டத்தின் தாக்கத்தை பிரதிபலிக்கின்றது
- நடைமுறை அல்லாத பொறுப்புகள் 7.6% இனால் ரூபா.5.05 பில்லியனாக அதிகரித்துள்ளது, இது மூலதனச் செலவுக்கான நீண்ட கால கடன்களின் முழு விநியோகம்.
- நடப்பு பொறுப்புகள் 23.6% அதிகரித்து ҴԱ 4.46 பில்லியனாக அதிகரித்துள்ளது, இது பிரதிபலிக்கிறது:
- கடனுக்கான சலுகை காலம் நிறைவடைந்தவுடன் கடன் முதிர்வுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.
- அதிகரித்த வணிக நடவடிக்கைகளுடன் ஒத்துப்போகும் வர்த்தகம் மற்றும் ஏனைய சென்மதிகளில் வளர்ச்சி.
- விருந்தினர் வைப்புகளுக்கான பிற்போடப்பட்ட வருமான அங்கீகாரம் காரணமான அதிக ஒப்பந்த பொறுப்புகள் காணப்படகின்றன.
- குழுவிற்குள்ளான தீர்ப்பனவுகளை மேம்படுத்துவதற்கான தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகைகளில் குறைப்பு,
- வங்கி மேலதிக பற்றுக்களில் ஏற்பட்ட சிறிது குறைப்பானது மேம்பட்ட பண முகாமைத்துவத்தினை நிரூபிக்கின்றது.

**மூலதனம் மற்றும் கடன்கள் (ரூபாயில் '000)**

| வகை | 2024 | 2023 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| பங்குதாரர் மூலதனம் | 11,915,256 | 12,266,894 | -2.9% |
| நிலையான கடன்கள் | 5,048,606 | 4,690,679 | +7.6% |
| தற்போதைய கடன்கள் | 4,462,726 | 3,609,382 | +23.6% |
| மொத்த கடன்கள் | 9,511,331 | 8,300,062 | +14.6% |
| மொத்த மூலதனம் மற்றும் கடன்கள் | 21,426,589 | 20,566,956 | +4.2% |

**நிதியூட்டம்**




2024 ஆம் நிதியாண்டில் நிறுவனத்தின் சொத்துத் தளத்தின் விரிவாக்கம் மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட விருந்தினர் அறை புதுப்பித்தல் திட்டங்களை நிறைவுசெய்வதுடன் தொடர்புடைய நீண்ட கால சொத்துக்களில் தொடர்ச்சியான தந்திரோபாய முதலீடுகளால் ஏற்படுகின்றது. நடைமுறை சொத்துக்களில் எற்பட்ட சரிவு, குறிப்பாக காசு மீதி, மூலதன அபிவிருத்திக்கான முயற்சிகள் மற்றும் தொடர்புடைய நிதி சார் கடமைகளுக்கு காசுப்பாய்வை நோக்கமாகக் கொண்ட முறையில் பயன்படுத்துவதை பிரதிபலிக்கின்றது.குறுகிய கால சொத்துக்களில் குறைவு ஏற்பட்டு இருந்தபோதிலும், நிறுவனம் நீண்ட காலத்திற்கு நிலையான வளர்ச்சியை ஆதரிக்கும் திறனை வலுப்படுத்தும் ஒரு வலுவான சொத்து நிலையைப் பராமரிக்கிறது.

**முன்னோக்கிச் செல்லுதல்**

எதிர்காலத்தைப் பார்க்கையில், நீண்ட கால பங்குதாரர்களின் பெறுமதியினை அதிகரிப்பதற்கு அதன் மீது தெளிவான கவனம் செலுத்துவதுடன் நிதி மூலதனத்தினை விவேகமான ஒதுக்கீடு செய்வதற்கும் மற்றும் மேம்படுத்தல் செய்வதற்கும் கம்பனி உறுதிபூண்டுள்ளது. விருந்தினர் அனுபவத்தை மேம்படுத்தும், செயல்பாட்டுத் திறனை அதிகரிக்கும் மற்றும் அதிக உழைப்புள்ள சந்தைப் பண்டங்களை இலக்காகக் கொண்டு வருவான ஓட்டங்களை விரிவுபடுத்தும் முயற்சிகளை நோக்கியதாக தந்திரோபாய மூலதனச் செலவுகள் இயக்கப்படும். இந்த முன்னுரிமைகளை ஆதரிக்க, கம்பனி ஒரு உகந்த மூலதன கட்டமைப்பைத் தொடர்ந்து நிலைநிறுத்துவதற்கும் மற்றும் மூலதனத்தின் சராசரி செலவைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்ட நிதி உத்திகளைப் பின்பற்றும். இந்த ஒழுக்கமான நிதி முகாமைத்தவ அணுகுமுறையானது, வேகமாக வளர்ந்து வரும் விருந்தோம்பல் நிலப்பரப்பில் தொடர்ச்சியான நிதி மீள்தன்மை மற்றும் செயல்பாட்டு நெகிழ்வுத்தன்மையை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

# மேலாண்மை விவாதம் மற்றும் பகுப்பாய்வு

**உருவாக்கப்பட்ட மூலதனம்**

**நாங்கள் என்ன வழங்குகிறோம்**

ஹில்டன் கொழும்பு அதன் உலகத்தரம் வாய்ந்த வசதிகள் மற்றும் பிரீமியம் சேவை சலுகைகள் மூலம் விதிவிலக்கான விருந்தினர் அனுபவங்களை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது. கொழும்பின் மையப்பகுதியில் தந்திரோபாய ரீதியாக அமைந்துள்ளது. விருந்தினர்களுக்கு நகரத்தின் முக்கிய வணிக மாவட்டங்கள் மற்றும் கலாச்சார அடையாளங்களுக்கு வசதியான அணுகலை இந்த சொத்து வழங்குகின்றது மற்றும் பிராந்தியத்தில் ஒரு முதன்மையான விருந்தோம்பல் இடமாக அதன் நிலையை வலுப்படுத்துகின்றது.

| | |
|---|---|
| தங்குமிடம் | எங்கள் 342 நன்கு பொருத்தப்பட்ட அறைகள் மற்றும் 36 விஷேட அறைகள் சௌகரியத்தையும் ஆடம்பரத்தையும் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. சொகுசான அறைகள், நிறைவேற்று அறைகள், சொகுசு அறைகள் மற்றுறும் ஜனாதிபதி சொகுசு அறைகள் உள்ளிட்ட பல்வேறு அறை வகைகளிலிருந்து அறைகளை விருந்தினர்கள் தெரிவு செய்யலாம். ஒவ்வொன்றும் நவீன வசதிகளுடன், நிதானமான தங்குதலை உறுதி செய்யும். |
| உணவு உண்ணுதல் | பல உணவு விருப்ப தேர்வுகளுடன் கூடிய பல்வேறு சமையல் அனுபவத்தினை நாங்கள் வழங்குகிறோம். விருந்தினர்கள் எங்கள் உணவகங்களில் உள்ளூர் மற்றும் சர்வதேச உணவு வகைகளை உண்டு அனுபவிக்கலாம், இதில் கறி இலை, கிரேஸ் சமையலறை மற்றும் எம்பரர்ஸ்<br><br>வோக் ஆகியவை அடங்கும். மிகவும் சாதாரணமான சூழலுக்கு, எமது நுஉாநடழெ ீரடி யனெ ளுரளெநவ டீயச ஆகியன பல்வேறு பானங்கள் மற்றும் லேசான உணவுகளுடன் ஒரு நிதானமான சூழலை வழங்குகின்றன. |
| கூட்டம் மற்றும் நிகழ்வுக்கான இடங்கள் | 26 கூட்டங்களுக்கான மற்றும் பிரமாண்டமான நடன கூடம் உள்ளிட்ட விரிவான கூட்டம் நடத்தகூடிய மற்றும் நிகழ்வு வசதிகளைக் ஹில்டன் கொழும்பு கொண்டுள்ளது. எமது இடங்களானவை கூட்டுத்தாபன கூட்டங்கள் முதல் சமூகக் கூட்டங்கள் வரை பல்வேறு நிகழ்வுகளுக்கு இடமளிக்கும் அதிநவீன தொழில்நுட்பத்துடன் பொருத்தப்பட்டதாக உள்ளன. |
| பொழுதுபோக்கு வசதிகள் | விருந்தினர்கள் எங்கள் வெளிப்புற நீச்சல் குளம், உடற்பயிற்சி மையம் மற்றும் முழுமையான சேவையுடனான ஸ்பாவில் ஓய்வெடுக்கலாம். நாங்கள் குழந்தைகள் நீச்சல் குளம் மற்றும் விளையாட்டு மைதானத்தை குடும்பங்களுக்காக வழங்குகின்றோம். எங்கள் ஹோட்டல் சுறுசுறுப்பான பொழுதுபோக்கை விரும்புவோருக்கு ஒரு நீராவிக்குளியல், நீராவி அறை மற்றும் சுவர்ப்பந்து மைதானங்களையும் கொண்டுள்ளது. நிறைவேற்று அறைகள் மற்றும் சொகுசு அறைகளில் வசிக்கும் விருந்தினர்களின் பயன்பாட்டிற்காக பிரத்தியேகமாக நிறைவேற்று சொகுசு அறைகள் உண்டு. |
| இடம் | 1.8 ஏக்கர் விளையாட்டு நிலையத்திற்கான காணி உட்பட 6.6 பரப்பளவில் பொழுதுபோக்கு வசதிகளுக்கான காணி பரவியதாகவுள்ளது. |

ஹில்டன் கொழும்பு முக்கிய விருந்தினர் அறை மறுசீரமைப்பு செயற்திட்டத்தின் வெற்றிகரமான நிறைவைக் கொண்டாடுகின்றது

நவம்பர் 2024 ஆம் ஆண்டில் 264 விருந்தினர் அறைகளின் மறுசீரமைப்பை வெற்றிகரமாக நிறைவு மூலம், விருந்தினர் அனுபவங்களை மேம்படுத்துவதற்கும் உயர்ந்த விருந்தோம்பல் தரங்களை நிலைநிறுத்துவதற்கும் ஹில்டன் கொழும்பு அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது. இந்த முயற்சி ஹில்டனின் உலகளாவிய வியாபார குறி தர நியமங்களுக்கு ஏற்ப உலகத்தரம் வாய்ந்த சௌகரியத்தையும் ஆடம்பரத்தையும் வழங்குவதற்கான ஆதனத்தின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.






இந்தத் செயற்திட்டம் நிறைவடைந்ததன் மூலம் ஹோட்டலின் அறை இருப்புக்களில் 70% முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இதில் நவீன வடிவமைப்பு கூறுகள் மேம்பட்ட அறை தொழில்நுட்பம் மற்றும் மேம்படுத்தப்பட்ட வசதிகள் உள்ளன. இந்த மேம்பாடுகள் சர்வதேச மதிப்புமிக்க விருந்தோம்பல் தரங்களை பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல் சர்வதேச தரங்களை விஞ்சும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது விருந்தினர்களுக்கு வணிக மற்றும் ஓய்வு நேர பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நவீன சிந்தனையுடனான வடிவமைக்கப்பட்ட சூழலை வழங்குகின்றது.

புதிதாகப் புதுப்பிக்கப்பட்ட அறைகளின் வசதிகள்

- நுட்பமான ஹில்டன் பிராண்ட் தரநியமங்களுடனான நவீன நுட்பத்தை கலந்துள்ள நேர்த்தியான உட்புற அலங்காரங்கள்
- ஸ்மார்ட் அறை கட்டுப்பாடுகள், மேம்படுத்தப்பட்ட விளக்குகள் மற்றும் பணிச்சூழலியல் பணியிடங்கள்
- அதிவேக றுை-குை மற்றும் மல்டிமீடியா போர்ட்களுடன் மேம்படுத்தப்பட்ட இணைப்பு
- உயர்நிலை சாதனங்களுடன் புதுப்பிக்கப்பட்ட குளியலறைகள்
- சுற்றுச்சூழல் உணர்வுள்ள வடிவமைப்பு கூறுகள் மற்றும் ஆற்றல் திறன் கொண்ட முறைமைகள்

முழுமையாகக் கிடைக்கக்கூடிய 368 அறைகளுடன் ஹோட்டல் செயல்படுவதற்கு விருந்தினர் வசதி மற்றும் சிறப்பான செயல்பாடுகளுக்கான இந்த தந்திரோபாய முதலீடானது உதவியுள்ளது மேலும் இது திறன் மற்றும் செயல்பாட்டுத் திறன் இரண்டையும் கணிசமாக மேம்படுத்துகின்றது. புதுப்பித்தல் முயற்சியானது ஒட்டுமொத்த விருந்தினர் அனுபவத்தை உயர்த்துவதோடு மட்டுமல்லாமல், இலங்கையின் தலைநகரில் மிகவும் நவீனமான மற்றும் எதிர்காலத்திற்கான விருந்தோம்பல் சலுகைகளில் ஒன்றாக ஹில்டன் கொழும்பின் நிலையை வலுப்படுத்துகிறது.
இந்த ஆதனமானது தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வருவதன் காரணமாக புதுமை, நிலைபேறான நடைமுறைகள் மற்றும் ஹில்டன் விருந்தோம்பலை வரையறுக்கும் தனித்துவமான அரவணைப்பு மூலம் உயர்ந்த விருந்தினர் அனுபவங்களை வழங்குவதில் ஹில்டன் கொழும்பு உறுதியாகவுள்ளது.

**பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்குதல்**

எமது விருந்தினர்களின், குழு உறுப்பினர்களின் மற்றும் பங்குதாரர்களின் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு என்பன ஒரு முக்கியமான தந்திரோபாய முன்னுரிமையாக ஹில்டன் கொழும்பில் உள்ளது. ஹில்டனின் உலகளாவிய வியாபார குறி தரநியமங்களுக்கு ஏற்ப, ஹில்டன் வியாபார குறியுடன் தொடர்புடைய மதிப்புமிக்க சிறந்த சேவையினை பராமரிக்கும் அதே வேளையில் பாதுகாப்பான இயக்க சூழலை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளின் விரிவான கட்டமைப்பை ஆதனமானது செயல்படுத்தியுள்ளது.

அறிக்கையிடல் காலம் முழுவதும், இலக்கு பயிற்சித் திட்டங்கள், கொள்கை வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைபிடிப்பது மற்றும் நிலையான செயல்பாட்டு விழிப்புணர்வு மூலம் எங்கள் பாதுகாப்பு தொடர்பான உட்கட்டமைப்பை நாங்கள் தொடர்ந்து வலுப்படுத்தினோம்.
மேற்கொள்ளப்பட்ட முக்கிய பாதுகாப்பு முயற்சிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- உடனடியாக மற்றும் தகவலறிந்தவுடன் பதிலளிப்பு செய்தல் திறன்களை உறுதி செய்வதற்காக அனைத்து குழு உறுப்பினர்களுக்கும் தொடர்ச்சியான தீப் பாதுகாப்பு மற்றும் அடிப்படை தீயணைப்பு பயிற்சி, இரசாயனங்களிலிருந்தான வேதியல் பாதுகாப்பு, லாக் அவுட்,டேக் அவுட் இடங்கள் ரீதியான பயிற்சி, மற்றும் உயரத்தில் பணிபுரிதல் பயிற்சி முதலியன ஆண்டுதோறும் நடத்தப்படும்
- வழக்கமான அவசரகால வெளியேற்ற பயிற்சிகள், திணைக்களம் முழுவதுமான தயார்நிலை மற்றும் நடைமுறை செயல்திறனை மேம்படுத்துதல் மூலம் தீயணைப்புத் துறையுடன் ஆண்டுதோறும் Q1 மற்றும் Q3 க்கு இரண்டு நேரங்களுக்குமான(காலை,மாலை) முழுயான பயிற்சி மற்றும் உள்ளூர் ஒழுங்குமுறையின் பிரகாரம் ஆண்டுதோறும் Q2 மற்றும் Q4 க்கு இரண்டு முறை வெளிச்சமில்லாத வேளையிலான இரவு நேர பயிற்சியையும் நாங்கள் கொண்டுள்ளோம்.
- விருந்தினர்களுக்கு பாதுகாப்பான பொழுதுபோக்கு சூழலை வலுப்படுத்தும் அனைத்து நீச்சல் தடாக உதவியாளர்களுக்கும் உயிர்காக்கும் சான்றிதழ் மற்றும் புத்துணர்ச்சியூட்டும் பயிற்சி
- சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனங்களை கையாளுதல் நடைமுறைகளுடன் இணங்குதல், செயல்பாட்டு ஆபத்தைத் தணித்தல் மற்றும் பணியிட பாதுகாப்பை உறுதி செய்தல்.
- ISO 22000:2018 மற்றும் ஆபத்து பகுப்பாய்வு மற்றும் அவதிக்கட்டுப்பாட்டு புள்ளி ஆய்வு (HACCP) தர நியமங்களுக்கு அமைவாக அனைத்து உணவு மற்றும் குடிபான விற்பனை நிலையங்களிலும் உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதார நெறிமுறைகளை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. EMEA மற்றும் APAC க்குள் செயல்படும் ஹில்டனின் HACCP கையேட்டில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் விரிவான பயிற்சி, வழிகாட்டுதல் மற்றும் நடைமுறைகள் என்பன இதில் உள்ளடங்கும்.
- குடிநீர், நீச்சல் குள நீர், குளிரூட்டும் கோபுர நீர், விருந்தினர் அறைக்கான நீர் மற்றும் உணவு பதப்படுத்தும் நீர் ஆகியவற்றின் வழக்கமான நுண்ணுயிரியல் மற்றும் வேதியியல் பகுப்பாய்வுகளை உள்ளடக்கிய ஒரு வலுவான நீர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தை ஹில்டன் கொழும்பு செயல்படுத்துகிறது.

பாதுகாப்பு தரநியமங்களுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக இந்த சோதனைகள் அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூடங்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

இடர் குறைப்பு, ஒழுங்குமுறைகளுடனான இணக்கப்பாடு மற்றும் செயல் மேன்மை முறைகள் என்பன எங்களது தொடர்ச்சியான முயற்சிகளுக்கு இந்த நடவடிக்கைகள் மையமாக உள்ளன. பாதுகாப்பான மற்றும் நெகிழ்ச்சியான சூழலைப் பராமரிப்பதற்கான எமது அர்ப்பணிப்பு, எமது விருந்தினர்கள் மற்றும் பங்காளர்களால் எம் மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகும், மேலும் இது எங்களுடைய நீண்டகாலத்திற்கான நிலைபேறானதன்மை மற்றும் சேவை உறுதி நோக்கங்களின் ஒரு மைல்கல்லாக அமைகின்றது.

# மேலாண்மை விவாதம் மற்றும் பகுப்பாய்வு

**இயற்கை மூலதனம்**

**சுற்றுச்சூழலின் நிலைபேறானதன்மை மற்றும் காலநிலை நடவடிக்கை**

ஹில்டன் கொழும்பில், எங்கள் செயல்பாட்டு டிஎன்ஏவில் சுற்றுச்சூழல் முகாமைத்துவ கொள்கைகள் ஆழமாக பதிக்கப்பட்டுள்ளன. ஹில்டனின் உலகளாவிய நோக்கத்துடன் பயணம் செய்யும் உத்தியின் ஒரு பகுதியாக இயற்கை சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கும், நமது சுற்றுச்சூழல் தடயத்தைக் குறைப்பதற்கும், நிகர பூஜ்ஜியப் பொருளாதாரத்தை நோக்கிய மாற்றத்தை செயல்படுத்துவதற்கும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். 2024 ஆம் ஆண்டில், காலநிலை மீள்தன்மை, கழிவுகளைக் குறைத்தல், ஆற்றல் திறன், நீர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வைச் சுற்றியுள்ள பரந்த சமூக ஈடுபாடு ஆகியவற்றில் எங்களது ஈடுபாடுகள் கவனம் செலுத்தின.

எங்கள் சுற்றுச்சூழல் முயற்சிகள் ஹில்டனின் உலகளாவிய நுளுபு இலக்குகளை அடைவதற்கு மட்டுமல்லாமல இலங்கையின் தேசியரீதியான நிலைபோறானதன்மைக்கான முன்னுரிமைகள் மற்றும் ஐ.நா. அிஇன் நிலைபேறான அபிவிரத்தி இலக்குகளுடன் (ளுனுபுள) ஒத்துப்போகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**2024 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் தொடர்பில் கவனம் செலுத்தும் முக்கிய பகுதிகள்**

**1. வினைத்திறனான சக்தி மற்றும் காலநிலை நடவடிக்கை**

காலநிலை அறிவியலுக்கு ஏற்ப 2030 ஆம் ஆண்டுக்குள் ஸ்கோப் 1 மற்றும் 2 கார்பன் தீவிரத்தை 61% இகால் குறைக்கும் ஹில்டனின் உலகளாவிய காலநிலை இலக்குகளுடன் ஹில்டன் கொழும்பு தொடர்ந்தும் இணைந்துள்ளது.

2024 ஆம் ஆண்டில்:

- மின்சாரம் மற்றும் வெப்ப சக்தி பயன்பாட்டைக் குறைப்பதற்கு கடுமையான சக்தி கண்காணிப்பு முறைமைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட செயல்பாடுகளை நாங்கள் செயல்படுத்தினோம்.
- குழு உறுப்பினர்களிடையே ஆற்றல் பாதுகாப்பு நடைமுறைகளை ஊக்குவித்துள்ளோம்.
- வினைத்திறனான சக்தி பயன்பாட்டுதிறன் கொண்ட விளக்குகள், கட்டிட முகாமைத்துவம் மற்றும் ஸ்மார்ட் HVAC முறைமைகளின் தொடர்ச்சியான ஒருங்கிணைப்பானது கசிவு மற்றும் பயன்பாட்டு செலவுகளைக் குறைப்பதற்கு பங்களிப்பு செய்தது.

2. கழிவு முகாமைத்துவம் மற்றும் சுழற்சிக் கழிவுப் பொருளாதாரம்

2030 ஆம் ஆண்டுக்குள் கழிவு வெளியீட்டினை 50% இனால் குறைத்தல் வேண்டும் என்ற ஹில்டனின் உலகளாவிய இலக்கை ஒத்ததாக ஹில்டன் கொழும்பு பின்வரும் வழிகளில் ஒரு சுழற்சிக் கழிவுப் பொருளாதாரத்தை தீவிரமாகப் பின்பற்றுகின்றது:

- "தொட்டி இல்லாத நாள்" முயற்சி - கழிவுகளை பிரித்தல் மற்றும் உணவு கழிவுகளை குறைப்பதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட குப்பைத் தொட்டிகளில் கழிவுகளை அப்புறப்படுத்தாத ஒரு நாள்.










- சோப்பு மீள் சுழற்சி செயற்திட்டம் - ஹில்டன் கொழும்பு குடியிருப்புகளுடன் இணைந்து மறுசுழற்சி செய்வதற்காக விருந்தினர் அறைகளிலிருந்து ஓரளவு பயன்படுத்தப்பட்ட சோப்புக் கம்பிகளை சேகரித்தல்.
- கடற்கரை சுத்தம் செய்யும் பிரச்சாரம் - $1,000 ஹில்டன் குளோபல் பவுண்டேஷன் செயல்பாட்டு மானியத்தால் ஆதரிக்கப்படும் பூச்சிய பிளாஸ்டிக் இயக்கத்துடன் இணைந்து நடத்தப்பட்டது.
- பொருத்தொட்டா மோயா கடற்கரையில் நடைபெற்றது - சுத்தப்படுத்தும் பணியில் கணிசமான அளவு பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றப்பட்டன, மேலும் நீண்டகால தலையீட்டில் PET பாட்டில் சேகரிப்பு தொட்டி நிறுவப்பட்டது.







- சேகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்யக்கூடியவை, சுழற்சி நடைமுறைகளில் சமூக ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் வகையில் மறுசுழற்சி செய்வதற்காக மாநகர சபையிடம் பொறுப்புடன் ஒப்படைக்கப்பட்டன.

3. நீர் பாதுகாப்பு
2030 ஆம் ஆண்டுக்குள் நீர் பயன்பாட்டு தீவிரத்தை 50% இனால் குறைக்கும் ஹில்டனின் இலக்கை ஹில்டன் கொழும்பு தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது.

2024 ஆம் ஆண்டில்:

- விருந்தினர் அறைகள் மற்றும் பணியாளர்கள் பகுதிகளில் நீர் சேமிப்பு சாதனங்கள் பராமரிக்கப்பட்டன.
- உலக நீர் தினத்தன்று சுவரொட்டிகள் மற்றும் கல்விசார் ஒளிப்படங்கள் மூலமும் சுவரொட்டிகள் மூலமும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.
- வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் சாத்தியமான செயல்படுத்தலுக்காக ஹில்டனின் உலகளாவிய சமூக நீர் மீள்தன்மை நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்பது மதிப்பீடு செய்யப்படுகிறது.

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் சமூக ஈடுபடுத்தல்**

**உலக பூமி வாரம் 2024**

சுற்றுச்சூழல் கல்வியறிவு மற்றும் நிலைபேறான வாழ்க்கையை வளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த விழிப்புணர்வு மற்றும் செயல் சார்ந்த நிகழ்வுகளுடன் ஹில்டன் கொழும்பு உலக பூமி வாரத்தைக் கொண்டாடியது:

- "துரு" உடனான சுற்றுச்சூழல் மீள்தன்மை பயிற்சிப் பட்டறை - கழிவு முகாமைத்துவம், வீட்டுத் தோட்டம், காலநிலை மாற்றத்தைக் குறைத்தல் மற்றும் சமூக முயற்சியாண்மை ஆகிய தலைப்புகள உள்ளடக்கப்பட்டன.
- களத்திலேயே மூலிகைத் தோட்டத்தினை செயல்படுத்தல் - "நோக்கத்துடன் பயணம்" என்பதன் கீழ் ஹில்டனின் "உறுதிமொழி 01" உடன் இணைக்கப்பட்ட ஒரு நிலைபேறான தன்மை சார்ந்த சமையல் முயற்சி.
- ஊஜஊ உடனான பங்குடமை அமர்வு - நகர்ப்புற வீடுகளுக்கான நவீன உர தொழில்நுட்பம் மற்றும் நிலையான தோட்டக்கலை ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.
- இருப்பிட அடிப்படையிலான அமர்வுகள் - கார்பன் தடம் குறைப்பு, நிலைபேறான பெறுகை, எரிசக்தி பாதுகாப்பு மற்றும் பசுமை அலுவலக சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

**உலக பூமி மணித்தியாலம்**

உறுதிமொழியின் அடையாளமாக ஹோட்டல் அத்தியாவசியமற்ற விளக்குகளை மங்கலாக்கியது மற்றும் தனது அதனங்கள் முழுவதும் கல்விசார் சுவரொட்டிகள் மற்றும் ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தியது. இந்த முயற்சி பாதுகாப்பு மற்றும் பொறுப்புக்கூறலின் நமது உள்ளக் கலாச்சாரத்தை வலுப்படுத்தியது

**சிறப்பு அங்கீகாரம் மற்றும் விருதுகள்**

1. **ஹில்டன் குளோபல் அறக்கட்டளையின் செயல்பாட்டு மானியம்**

பயணத்துடன் கூடிய பயண வார தன்னார்வத் தொண்டு நடவடிக்கைகளை அங்கீகரிப்பதற்காக ஹில்டன் குளோபல் அறக்கட்டளையால் ஹில்டன் கொழும்புக்கு $1000 செயல்பாட்டு மானியம் வழங்கப்பட்டது. இந்த நிதியானது வெற்றிகரமான கடற்கரை சுத்தம் செய்யும் நடவடிக்கை மற்றும் நீண்டகால பிளாஸ்டிக் கழிவுகளைக் குறைக்கும் முயற்சிகளை ஆதரித்தது.

2. **நிலைபேறான தன்மைக்கான விருது - முதல் இடம்**

பிரெட்ரிக் நௌமன் அறக்கட்டளையினால் (ஜெர்மனி) வழங்கப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான "ஹோட்டல் மற்றும் தங்குமிடம் சேவை வழங்குநர்கள் - பெரு நிறுவனம்" பிரிவின் கீழ் நிலைபேறான தன்மைக்கான விருதுகளில் ஹில்டன் கொழும்புக்கு முதலிடம் வழங்கப்பட்டது. இந்த விருது நிலைபேறான நடைமுறைகள், புதுமை மற்றும் நீண்டகால சுற்றுச்சூழல் அர்ப்பணிப்பு ஆகியவற்றில் எங்கள் தொழில்துறை தலைமையை அங்கீகரிக்கிறது.

**தந்திரோாய விளைவு மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்**

எமது நிறுவன இடர் முகாமைத்துவம் மற்றும் நீண்ட கால பெறுமதியின் உருவாக்கத்தில் ஒரு ஹில்டன் கொழும்பின் சுற்றுச்சூழல் நிலைபேறான தந்திரோபாயமானது முக்கிய பகுதியாகும். சுற்றுச்சூழல் இடர்களை குறைத்தல், செயற்பாட்டு செலவுகளைக் குறைத்தல், பங்குதாரர்களின் நம்பிக்கையை மேம்படுத்துதல் மற்றும் காலநிலை தொடர்பான இடையூறுகளுக்கு எதிராக மீள்தன்மையை மேம்படுத்துதல் ஆகியவற்றில் எமது செயற்திட்டங்கள் நேரடியாக பங்களிப்பு செய்கின்றன.

2025 ஆம் ஆண்டை எதிர்நோக்கி, நாங்கள் பின்வரவனவற்றை இலக்கு வைத்துள்ளோம்

- ஹோட்டல் செயல்பாடுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒருங்கிணைப்பை விரிவுபடுத்துதல்.
- ஸ்மார்ட் வாட்டர் மீட்டரிங் மற்றும் மழைநீர் சேகரிப்பு முன்னோடிகளை செயல்படுத்துதல்.
- ஹில்டனின் சுழற்சி தயாரிப்பு தந்திரோபாயத்துடன் இணைந்த பிளாஸ்டிக் அல்லாத அறை வசதிகளை அறிமுகப்படுத்துதல்.
- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்வதற்காக எதிர்கால நிலைபேறான அறிக்கைகளில் அளவிடக்கூடிய சுற்றுச்சூழல் மீஜ களை வெளியிடுதல்.

**முடிவுரை**

ஆடம்பர விருந்தோம்பல் மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேறானதன்மை ஆகியவை இலக்குகளை எதிர்க்கவில்லை, மாறாக பரஸ்பரம் உறுதிப்பாடுகளை வலுப்படுத்துகின்றன என்ற நம்பிக்கையை இயற்கை மூலதனத்தின் எங்கள் மேற்பார்வை பிரதிபலிக்கிறது. உதாரணமாக வழிநடத்துவதற்கும், நாம் அனைவரும் சார்ந்திருக்கும் இயற்கை உலகத்தை நிலைநிறுத்தி மதிக்கும் விதத்தில் செயல்படுவதற்கும் ஹில்டன் கொழும்பு அதன் பொறுப்பில் உறுதியாக உள்ளது.

# மேலாண்மை விவாதம் மற்றும் பகுப்பாய்வு

**சமூக மூலதனம்**

**சமூக ஈடுபாடு - நோக்கத்துடனான பயணம் 2024**

நிலைபேறான மற்றும் உள்ளார்ந்த வளர்ச்சிக்கான எமது அர்ப்பணிப்பு எங்களது ஹோட்டல் ஹில்டன் கொழும்பின் செயல்பாடுகளின் வரம்புகளுக்கு அப்பால் நீண்டுள்ளது. ஹில்டனின் உலகளாவிய பயண நோக்கத்துடனான முயற்சிக்கு இணங்க, எங்களது சமூக ஈடுபாட்டு தந்திரோபாயமானது எங்களது நுளுபு கட்டமைப்பின் முக்கிய தூணாக அமைகின்றது. 2024 ஆம் ஆண்டானது எங்களது வெளிநடவடிக்கைகளின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைக் குறித்து நிற்கின்றது, இது உள்ளூர் சமூகத்துடனான எங்கள் நீடித்த உறவையும் சமூக சமத்துவம் மற்றும் வாய்ப்பை வளர்ப்பதற்கான எங்கள் ஆழ்ந்த அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கின்றது.

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக செயல்பட்டு வரும் ஹில்டன் கொழும்பு நிறுவனமானது அதன் நீண்டகால வெற்றியானது அதனை ஆதரிக்கும் சமூகத்தின் நல்வாழ்விலிருந்து பிரிக்க முடியாதது என்பதை ஒப்புக்கொள்கிறது. எங்கள் ப்ளு எனர்ஜி சமூகக் குழு முழுவதுமாக ஹோட்டல் குழு உறுப்பினர்களை உள்ளடக்கியதாகும் மற்றும் ஆண்டு முழுவதும் அவர்களின் நேரத்தையும் திறன்களையும் பயன்படுத்தி தன்னார்வத் தொண்டு செய்து, தொடர்ச்சியான தாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. இந்த செயற்திட்டங்கள் கல்வி, சுகாதாரம், பேரிடர் நிவாரணம், விஷேட தேவையுடையோருக்கான ஆதரவு, இளைஞர் வலுவூட்டல் மற்றும் பாலின சமனிலை உள்ளிட்ட முக்கிய பகுதிகளை நிவர்த்தி செய்கின்றன.

**2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய சமூக முயற்சிகள்**

**கல்வி மற்றும் இளைஞர் வலுவூட்டல்**

1. பள்ளி புதுப்பித்தல் - புத்தளம் மாவட்டம் உள்ளூர் கல்வி அதிகாரிகளுடன் இணைந்து, மாணவர்களுக்கான உட்கட்டமைப்பு மற்றும் கற்றல் நிலைமைகளை மேம்படுத்தும் ஒரு கிராமப்புற பள்ளி கட்டிடத்தை புதுப்பித்தல் செய்வதற்கு எங்கள் பொறியியல் குழு தலைமை தாங்கியது. உடல்சார் கற்றல் சூழல்கள் மற்றும் கல்விசார் கருவிகள் மீதான எங்களின் இரட்டை கவனத்தை வலியுறுத்தும் வகையில் எழுதுகருவி பொருட்களும் விநியோகிக்கப்பட்டன.

2. ஹோட்டலினை பழக்கப்படுத்துதல் - கல்போருயாய பாடசாலையானது (தொலைதூரப் பகுதி)
எங்களது விருந்தோம்பல் துறை விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக கிராமப்புற மாணவர்கள் ஹில்டன் கொழும்புக்கு ஒரு ஆழமான கற்றல் சுற்றுப்பயணத்திற்கு வருகை தந்தனர். அவர்கள் ஹோட்டல் செயல்பாடுகளை ஆராய்ந்தனர் மற்றும் விருந்தோம்பல் துறையில் கிடைக்கும் தொழில் பாதைகளை நன்கு புரிந்துகொள்ள ஊழியர்களுடன் கலந்துரையாடினர். இந்த முயற்சி கிராமப்புற நகர்ப்புற வாய்ப்பு இடைவெளியைக் குறைக்கவும் நீண்டகால அபிலாஷைகளை ஊக்குவிக்கவும்










3. “நாங்கள் உங்களைக் கேட்கின்றோம்” - கேட்கும் திறனுடனான ஈடுபாடு-ரத்மலானை காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோர் பாடசாலை மாணவர்களுக்காக ஒரு அறிமுக அமர்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது, இது அவர்களுக்கு ஹோட்டல் செயல்பாடுகளில் உள்ள நடைமுறை வெளிப்பாட்டினையும் பணியிடம் சார் உள்ளடக்கத்தையும் வளர்க்கின்றது. விருந்தோம்பல் துறையில உள்ள நேரடி அனுபவத்தை அவர்களுக்கு வழங்குவதன் மூலம், புதிய திறன்கள் மற்றும் சாத்தியக்கூறுகளுக்கான கதவுகளைத் திறக்கின்றோம். இந்த அமர்வு கற்றல் பற்றியது மட்டுமல்ல இது நம்பிக்கையை வளர்ப்பது, சுதந்திரத்தை வளர்ப்பது மற்றும் கனவுகளை ஊக்குவிப்பது பற்றியதாகும்.

4. செவிப்புலன் குறைபாடுள்ள பயிற்சியாளர்களுக்கான கேக் அலங்காரப் பட்டறை
இந்த நேரடிப் பயிற்சிப்பட்டறையானது பங்கேற்பாளர்களுக்கு கேக் அலங்காரத்தில் அவர்களுக்குள்ள ஆக்கப்பூர்வமான திறன்களை மேம்படுத்துவதையும், அவர்களின் தன்னம்பிக்கையை மேம்படுத்துவதையும், சுய வெளிப்பாடு மற்றும் தொழில்

வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளைத் திறப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. காட்சி ரீதியான வழிகாட்டிகள் மற்றும் படிப்படியான அறிவுறுத்தல்களுடன் அவர்களின் தனித்துவமான திறமைகளைக் கொண்டாடும் ஒரு உள்ளார்ந்த ஈடுபாட்டு அனுபவத்தை உருவாக்குவதற்கு நாங்கள் பாடுபடுகின்றோம். ஒவ்வொரு பயிற்சியாளரின் அழகான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட படைப்புகளைக் காணவும் சமையல் கலைகளில் அவர்களின் பயணத்தை ஆதரிக்கவும் நாங்கள் ஆவலுடன் காத்திருக்கின்றோம்.

### சுகாதாரம் மற்றும் விசேட தேவையுடையோருக்கான ஆதரவு

1. ஒவ்வொரு மூச்சிலும் நம்பிக்கை - அபேக்ஷா குழந்தைநல புற்றுநோய் மருத்துவமனை



அபேக்ஷா மருத்துவமனை குழந்தைநல மருத்துவ பிரிவுக்கு முக்கியமான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளை நன்கொடையாக வழங்கப்பட்டது இந்த ஆண்டின் ஒரு முக்கிய மைல்கல்லாக உள்ளது. இந்த பங்களிப்பானது நோயறிதல் திறன் மேம்படுத்தப்படுகின்றது மற்றும் சிகிச்சை வழங்கலில் நோயாளிகளின்மீதான விளைவுகளை மேம்படுத்துகின்றது மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மீதான நிதி அழுத்தத்தையும் குறைக்கின்றது.

2. ஒரு புன்னகையை வரையவும் - குழந்தை நோயாளிகளுக்கு விஷேட மதிய உணவு

அபேக்ஷா புற்றுநோய் மருத்துவமனை குழந்தைகள் பிரிவில் உயிருக்குப் போராடும் 25 குழந்தைகளுக்கு விஷேட மதிய உணவை வழங்குதல். அபேக்ஷா மருத்துவமனையில் புற்றுநோயுடன் போராடும் 25 துணிச்சலான குழந்தைகளின் வாழ்க்கையில் சிரிப்பு, சுவையான உணவு மற்றும் ஈடுபாட்டுடன் கூடிய செயல்பாடுகள் நிறைந்த ஒரு வளர்ப்பு சூழலை உருவாக்குவதன் மூலம் மகிழ்ச்சியையும் அரவணைப்பையும் கொண்டு வருவதே எங்கள் விஷேட மதிய உணவின் நோக்கமாகும். பகிரப்பட்ட மகிழ்ச்சி, பொழுதுபோக்கு மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட தொடர்புகள் மூலம் உணர்ச்சி ரீதியான எழுச்சியை இந்த முயற்சி உருவாக்கியது.



3. பிரிதிபுரா இல்லத்திற்கான ஆதரவு

உடல் மற்றும் மன குறைபாடுகள் உள்ள குழந்தைகள் மற்றும் பெரியவர்களை ஆதரிப்பதற்காக வீட்டு அத்தியாவசியப் பொருட்கள், பொம்மைகள் மற்றும் ஊட்டச்சத்துப் பொருட்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. இந்த முயற்சி அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் கண்ணியம் என்ற நமது பரந்த நம்பிக்கையை பிரதிபலிக்கின்றது.

4. டவுன் சிண்ட்ரோம் இல்லத்திற்கான உணவு நன்கொடை

எங்களது குழு உள்ளூர் டவுன் சிண்ட்ரோம் பராமரிப்பு மையத்தைப் பார்வையிட்டு உணவு வழங்கியது. இது சமூக ஊட்டச்சத்து திட்டங்களில் இரக்கத்தையும் தொடர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றது.

### பேரிடர் நிவாரணம் மற்றும் அடிப்படைத் தேவைகள்

1. தேவைப்படுபவர்களுக்கான உணவு - வெள்ள அணர்த்த நிவாரணம் (கொலன்னாவை ரூ கம்பஹா) 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்திற்கு பதிலளிக்கும் விதமாக, இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு இரண்டு நாட்களுக்கு சமைத்த உணவு விநியோகிக்கப்பட்டது. நெருக்கடிகளின் போது அணிதிரள்வதற்கும் அடி மட்டத்தில் மீள்தன்மையை உருவாக்குவதற்கும் பங்களிப்பதற்கான நமது தயார்நிலையை இந்த நடவடிக்கைகள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.








# மேலாண்மை விவாதம் மற்றும் பகுப்பாய்வு

2. அத்தியாவசியப் பொதிகள் - முன் அலுவலக CSR செயற்பாடு
எமது முன் அலுவலகக் குழுவின் ஒரு அர்ப்பணிப்பு முயற்சியானது சிரமப்படும் 10 எண்ணிக்கையான வீடுகளுக்கு உணவு மற்றும் அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்கள் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தியாவசியப் பொதிகளை விநியோகிப்பதற்கு வழிவகுத்தது. உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களையும், ஒருவரின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய காலை உணவுப் பொதியையும் உள்ளடக்கிய வகையில் அத்தியாவசியப் பொதிகள் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

**பாலின சமனிலை மற்றும் பெண்கள் வலுவூட்டல்**

1. பெண்கள் வலுவூட்டல்
விழிப்புணர்வு பயிற்சி அமர்வு - கொலன்னாவை
பாதிக்கப்படக்கூடிய சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கு விருந்தோம்பல் துறையில் தொழில் சார் வழிகள் குறித்து கல்வி கற்பிப்பதற்காக ஒரு இலக்குப்படுத்தப்பட்ட அமர்வொன்று நடாத்தப்பட்டது. பொருளாதார பங்களிப்பை அதிகரிப்பதையும், நடைமுறை வழிகாட்டுதலை வழங்குவதையும், பிரதிநிதித்துவம் குறைந்த பெண்களிடையே திறன் மேம்பாட்டை ஆதரிப்பதையும் இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

**பருவகால மற்றும் கலாச்சார ஈடுபாடு**

1. தேவைப்படும் குழந்தைகளுடன் ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ் மர விளக்குகள் கொண்டாடுதல்
எமது வருடாந்திர கிறிஸ்துமஸ் மர விளக்கு விழாவில், ஒற்றுமையின் தத்துவம் மற்றும் கொடுக்கும் உணர்வைக் கொண்டாடும் வகையில் 22 பின்தங்கிய குழந்தைகளை நாங்கள் வரவேற்றோம்.

**ஹில்டனின் உலகளாவிய நுளுபு இலக்குகளுடனான தந்திரோபாய தாக்கம் மற்றும் சீரமைப்பு**

ஹில்டனின் 2030 பயண இலக்குகளுடன் ஹில்டன் கொழும்பின் மூலோபாய சீரமைப்பை இந்த முயற்சிகள் பிரதிபலிக்கின்றன

பின்வருவன உள்ளடங்குகின்றன :

- சமூக தாக்கத்துடனான செயற்திட்டங்களில் முதலீட்டை இரட்டிப்பாக்குதல்
- பிரதிநிதித்துவம் குறைந்த குழுக்களுக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்
- இலக்குப்படுத்தப்பட்ட கல்வி மற்றும் பயிற்சி மூலம் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்

உள்ளக தன்னார்வுத் தொண்டர் வலையமைப்புகளை அணிதிரட்டுவதன் மூலமும் உள்ளூர் நிறுவனங்களுடன் கூட்டு சேர்வதன் மூலமும், பொறுப்புள்ள பெருநிறுவன குடிமக்களாக எங்கள் பங்கை வலுப்படுத்தியுள்ளோம். இந்த முயற்சிகள் வியாபார குறி சமத்துவத்தை மேம்படுத்துகின்றன, சமூக நம்பிக்கையை உருவாக்குகின்றன மற்றும் பச்சாதாபம், சேவை மற்றும் பகிரப்பட்ட நோக்கத்தை மையமாகக் கொண்ட ஒரு நேர்மறையான பணியிட கலாச்சாரத்தை வளர்க்கின்றன.

**எதிர்காலத்தை நோக்கி**

சிக்கலான பொருளாதார மற்றும் சமூக நிலப்பரப்பில் நாம் தொடர்ந்து பயணித்து வருவதால், சமூக மூலதனத்திற்கான நமது அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாகவே உள்ளது. 2025 ஆம் ஆண்டில், நீண்டகால அளவிடக்கூடிய மாற்றத்தை உறுதி செய்வதற்காகவும் நமது வெளிநடவடிக்கை முயற்சிகளை அளவிடவும் அளவீடுகள் அடிப்படையிலான விளைவு அறிக்கையிடலை அறிமுகப்படுத்தவும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் அரச அமைப்புகளுடன் ஒத்துழைப்பை ஆழப்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

## புலமைச்சொத்து மூலதனம்

ஹில்டன் கொழும்பின் பெறுமானத்தினை உருவாக்கிய கட்டமைப்பின் முக்கிய தூணாக புலமைச்சொத்து மூலதனம் இருக்கின்றது. அறிவுசார் மூலதனம் என்பது உலகளவில் புகழ்பெற்ற மற்றும் மதிக்கப்படும் விருந்தோம்பல் வியாபார குறியான ஹில்டன் வேர்ல்டுவைடுடன் அதன் இணைப்பிலிருந்து பெறப்பட்ட அருவமானவற்றின் தந்திரோபாய பயன்பாட்டினை முக்கியமாகக் குறிக்கின்றது. ஹில்டன் கொழும்பு இந்த புலமைச்சொத்து மூலதனத்தை ஹில்டன் வேர்ல்டுவைடு வழங்கும் வியாபார குறி தர நியமங்கள், உலகளாவிய சந்தைப்படுத்தல் தளங்கள், மேம்பட்ட தொழில்நுட்ப முறைமைகள், சிறந்த செயற்பாட்டு நடைமுறைகள் மற்றும் திறன் அபிவிருத்தி கட்டமைப்புகள் ஆகியவற்றின் வடிவத்தில் பயன்படுத்துகிறது. தந்திரோபாய நிலைப்படுத்தலை மேம்படுத்துதல், வியாபார குறியின் உரிமையினை வலுப்படுத்துதல், செயல் மேன்மையினை இயக்குதல் மற்றும் பங்குதாரர்களுக்கு நீண்டகால பெறுமதியினை வழங்குவதில் இந்த வளங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## உலகளாவிய வியாபார குறி இணைப்பு மற்றும் சந்தை நிலைப்படுத்தல்

ஹில்டன் பிராண்டின் வலுவான உலகளாவிய பங்குகளிலிருந்து ஹில்டன் கொழும்பு பயனடைகின்றது, இது நுகர்வோர் நம்பிக்கை, சந்தை வேறுபாடு மற்றும் மதிப்புமிக்க விலை நிர்ணய திறன் ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க இயக்கியாகத் தொடர்கின்றது. இந்த சர்வதேச வியாபார குறிச் சங்கம் முக்கிய வணிக மற்றும் ஓய்வு பிரிவுகளில் ஆதனத்தின் ஈர்ப்பை மேம்படுத்துகின்றது, இது இலங்கையின் விருந்தோம்பல் நிலப்பரப்பில் ஹில்டன் கொழும்பின் போட்டித்தன்மையை வலுப்படுத்துகின்றது.

## செயல்பாட்டு ரீதியான முறைமைகள் மற்றும் தரநியமங்கள்

செயல் மேன்மையினை, தரநியமப்படுத்தப்பட்ட உலகளாவிய சட்டகங்கள் மற்றும் ஹில்டனின் தனியுரிமை சார் இயக்க நடைமுறைகள் என்பன ஹில்டன் கொழும்பு ஆதரிக்கின்றன. இந்த முறைமைகள் விருந்தினர் சேவை வழங்கல், ஒழுங்குபடுத்தல் இணக்கப்பாடு, தரக் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் நிலைபேறான தன்மையினை உறுதி செய்கின்றன, இது அனைத்து செயல்பாட்டு பகுதிகளிலும் செயல்பாட்டு ஒழுக்கம் மற்றும் செயல்முறை உச்சப்படுத்தலை கூட்டாக இயக்குகின்றது.

## மனித மூலதன அபிவிருத்தி மற்றும் அறிவு பரிமாற்றம்

ஹில்டன் கொழும்பின் அறிவுசார் மூலதனத்தின் முக்கிய தூணாக திறன் அபிவிருத்தி காணப்படுகின்றது. ஹில்டனின் உலகளாவிய கற்றலை அணுகுவதன் மூலமும், மேம்பாட்டு சுற்றுச்சூழல் முறைமை போன்ற தளங்கள் உள்ளடக்கியதாக ஹில்டன் பல்கலைக்கழக குழு உறுப்பினர்கள் வியாபார குறி தர நியமங்கள் மற்றும் வளர்ந்து வரும் விருந்தினர் எதிர்பார்ப்புகளுடன் ஒத்துப்போவதற்கு தொடர்ந்தும் திறன்களைப் பெறுகின்றார்கள். இந்த கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தலைமைத்துவ வளர்ச்சி, ஊழியர்களைத் தக்கவைத்தல் மற்றும செயல் மேன்மையினை வளர்க்கின்றன. இது வாடிக்கையாளர் திருப்தி மற்றும் செயல்திறன் விளைவுகளை நேரடியாக பாதிக்கின்றது.

## உலகளாவிய விநியோகம், விற்பனை மற்றும் விசுவாசத்திற்கான உட்கட்டமைப்பு

ஹில்டனின் விரிவான சர்வதேச விநியோக வலையமைப்பு, பெருநிறுவன விற்பனை அணுகல் மற்றும் ஹில்டன் ஹானர்ஸ் விசுவாசத் திட்டத்தினை ஹில்டன் கொழும்பு பயன்படுத்துகிறது, இவை கூட்டாக இரவு நேர அறை உருவாக்கம் மற்றும் வாடிக்கையாளர் தக்கவைப்பை மேம்படுத்துகின்றன. மையப்படுத்தப்பட்ட விற்பனை உத்திகள், மாறும் விலை நிர்ணய மாதிரிகள் மற்றும் அதிக மதிப்புள்ள மீண்டும் மீண்டும் வரும் விருந்தினர்களுக்கான அணுகல் உள்ளடங்கலாக குறிப்பாக மாறும் சந்தைகளிலிருந்தும் ஆதனமானது பயனடைகின்றது.

## தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மற்றும் புதுமையான தளங்கள்

ONQ சொத்து முகாமைத்துவ முறைமை மற்றும் ஏனைய வாடிக்கையாளருடனான உறவு முகாமைத்துவ கருவிகள் உள்ளிட்ட ஹில்டனின் தனியுரிமை சார்ந்த முறைமைகளுக்கான அணுகல் செயல்பாட்டு திறன் மற்றும் நிகழ்நேர வணிக நுண்ணறிவை ஹில்டன் ஆதரிக்கின்றது. டிஜிட்டல் சாவிகள் மற்றும் புதிய கட்டிட முகாமைத்துவ முறைமை (BMS) செயல்பாடுகள் போன்ற அறையின் உள்ளக புத்தாக்கங்கள் விருந்தினர் வசதியை மேம்படுத்தியதுடன் சேவை தனிப்பயனாக்கத்தையும் மேம்படுத்தியுள்ளன

## நிலைபேறான தன்மை மற்றும் தந்திரோபாய சீரமைப்பு

ஹில்டனின் நோக்கத்துடன் கூடிய பயண உலகளாவிய ESG உத்தியுடன் ஹில்டன் கொழும்பு இணைகின்றது. இது ஹோட்டலின் நீண்டகால சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாக நோக்கங்களை ஆதரிக்கிறது. ஆதனங்கள் அதிகரித்து வரும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய உதவுகின்றது மற்றும் சர்வதேச ரீதியான நிலைபேறான தன்மை அளவுகோல்களை இந்த சீரமைப்பு கடைப்பிடிக்கின்றது.

## தந்திரோபாய பொருத்தப்பாடு மற்றும் பெறுமானத்தினை மேம்படுத்தல்

ஹில்டன் வேர்ல்டுவைடுடன் இணைந்ததன் மூலம் பெறப்பட்ட கூட்டு நன்மைகள் ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் நீண்டகால நிலைத்தன்மை மற்றும் இலாபத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளன. இந்த சீரமைப்பானது சொத்து உலகளாவிய நிபுணத்துவம், செயல்பாட்டு அறிவு மற்றும் பிராண்ட் ஆதரவை அணுகல் செய்வதற்கு அனுமதிக்கின்றது, உயர் சேவையின் தரநிமங்கள் மற்றும் போட்டி நிலைப்பாட்டினை பேணுவதற்கு உதவுகின்றது. இந்த நன்மைகள் மாறிவரும் சந்தை நிலைமைகளை எதிர்கொள்ளும் போது ஹோட்டலின் மீள்தன்மையை வலுப்படுத்தியுள்ளன, மேலும் எதிர்காலத்தில் பெறுமானத்தின் உருவாக்கத்தின் முக்கியமான இயக்கியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# மேலாண்மை விவாதம் மற்றும் பகுப்பாய்வு

### மனித மூலதனம்

கையொப்பமிடப்பட்ட முகாமைத்துவ உடன்படிக்கையின் பிரகாரம், அட்டர்னி பத்திரம் மற்றும் சொத்துக்கள் மட்டத்தில் மனிதவள முகாமைத்துவத்திற்கான முழுப் பொறுப்பையும் ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட் ஆனது ஹில்டன் வேர்ல்டுவைட் (ர்றுறு) நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இதில் மக்கள் தொடர்பான அனைத்து செயல்பாடுகளையும் மேற்பார்வையிடுவதும் ஹில்டனின் உலகளாவிய தரநியமங்கள் மற்றும் செயல்பாட்டுச் செயல் முகாமைத்துவமானது ஒத்துப்போவதை உறுதி செய்வதும் இதில் உள்ளடங்கும்.

செயல்பாட்டு செயல்திறன், குழு தலைமை மற்றும் விருந்தினர் திருப்திக்கு முழு பொறுப்பு வகிக்கும் ஒரு பொது முகாமையாளர் (புஆ) தலைமையிலான ஹோட்டலானது ஹில்டனின் ஆதன மட்ட செயல்பாடுகள் தெளிவாக வரையறுக்கப்பட்ட படிநிலை ரீதியான நிறுவன ஒழுங்குக் கட்டமைப்பொன்றினால் வழிநடத்தப்படுகின்றன. புஆ துறைத் தலைவர்களின் குழுவினால் ஆதரிக்கப்படுகின்றார் மற்றும் அவர்கள் ஒவ்வொருவரும் முன்னணி அணிகளை நிர்வகிப்பதிலும் ஹில்டனின் வியாபாரக் குறி தர நியமங்களை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

| பாலினம் மற்றும் பதவிப் பெயரின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை, பல்வேறு வகிபாகங்களில் உள்ள ஊழியப்படையின் பகிர்வை எடுத்துக்காட்டுகின்றது. | பெண் | ஆண் | மொத்தம் |
|---|---|---|---|
| பொது முகாமையாளர் | - | 1 | 1 |
| பணிப்பாளர் | - | 2 | 2 |
| சிரேஷ்ட முகாமையாளர் | 2 | 8 | 10 |
| முகாமையாளர் | 4 | 10 | 14 |
| உதவி முகாமையாளர் | 10 | 58 | 68 |
| சிரேஷ்ட நிறைவேற்றாளர் | 12 | 46 | 58 |
| நிறைவேற்றாளர் | 25 | 85 | 110 |
| கனிஷ்ட நிறைவேற்றாளர் | 8 | 55 | 63 |
| நிறைவேற்றாளர் அல்லாதவர் | 47 | 223 | 270 |
| மொத்த எண்ணிக்கை | 108 | 488 | 596 |

### ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் தக்கவைத்தல்

ஹோட்டலின் ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவு செயல்முறைகள், முக்கிய பெறுமானங்கள் மற்றும் விதிவிலக்கான சேவைக்கான அர்ப்பணிப்புடன் ஒத்துப்போகும் நபர்களை அடையாளம் காணும் வகையில் தந்திரோபாய ரீதியாக வடிவமைக்கப்பட்டுள்ளன. பன்முகத்தன்மை கொண்ட, திறமையான மற்றும் சேவை சார்ந்த பணியாளர்களை ஈர்ப்பதற்கு மையப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் உள்ளூர் பணியமர்த்தல் நடைமுறைகளின் கலவையையினை ஹில்டன் பயன்படுத்துகின்றது. ஒவ்வொரு புதிய குழு உறுப்பினரும் விருந்தினர் ஈடுபாடு, பாதுகாப்பு, வியாபாரக்குறி விநியோகம் மற்றும் செயல் மேன்மை முறைகள் போன்ற துறைகளில் திறன்களை வளர்ப்பதற்கான தொடர்ச்சியான பயிற்சியைத் தொடர்ந்து விரிவான ஒருங்கு சேர்த்தல் திட்டத்திற்கு உட்படுகின்றார்.

#### நியமன வகை மற்றும் பாலினம் அடிப்படையில் பணியாளர் விபரம்

| | பெண் | ஆண் | மொத்தம் |
|---|---|---|---|
| நிரந்தர பணியாளர்கள் | 25 | 221 | 246 |
| ஒப்பந்தம் | 83 | 267 | 350 |
| **மொத்தம்** | **108** | **488** | **596** |

#### வயது மற்றும் பாலினம் அடிப்படையிலான ஊழியர்களின்

| | பெண் | ஆண் | மொத்தம் |
|---|---|---|---|
| 18-30 வருடங்கள் | 64 | 163 | 227 |
| 31-55 வருடங்கள் | 38 | 287 | 325 |
| 55 வருடங்களுக்கு அதிகம் | 6 | 38 | 44 |
| **மொத்தம்** | **108** | **488** | **596** |

**ஊழியர்களின் சேவைக்காலம் (வருடங்கள்)**

| | நிறைவேற்று தரம் | நிறைவேற்று தரமல்லாதவர்கள் |
|---|---|---|
| 1< | 13 | 99 |
| 1 முதல் 5 | 30 | 190 |
| 6 முதல் 10 | 11 | 35 |
| 11 முதல் 15 | 8 | 60 |
| 16 முதல் 20 | 7 | 45 |
| 21 முதல் 25 | 13 | 34 |
| 26 முதல் 30 | 9 | 27 |
| 31> | 4 | 11 |
| **மொத்தம்** | **95** | **501** |

**கற்றல் மற்றும் அபிவிருத்தி**

ஹில்டனின் மனித மூலதன தந்திரோபாயத்தின் மைல்கல் ஒன்றுதான் தலைமைத்துவ அபிவிருத்தி ஆகும். நிறுவனத்திற்குள் செயல்பாட்டு சிறப்பையும் நீண்டகால தொழில் முன்னேற்றத்தையும் ஆதரிக்கும் திறன்களை வளர்ப்பதற்கு டுநயன;ர்டைவழெ போன்ற கட்டமைக்கப்பட்ட செயற்திட்டங்கள் மூலம் வளர்ந்து வரும் தலைவர்கள் இலக்குப்படுத்தப்பட்ட பயிற்சி மற்றும் வழிகாட்டுதலைப் பெறுகின்றார்கள். இந்த முயற்சிகள் ஹில்டனின் வளர்ச்சி மற்றும் சேவை தரத்தை நிலைநிறுத்தும் ஒரு வலுவான தலைமைத்துவ பாதையொன்றினை உறுதி செய்கின்றன.

| பயிற்சியின் வகை | பங்கு பற்றுனர்களின் எண்ணிக்கை | பயிற்றி மணித்தியாலங்கள் |
|---|---|---|
| தலைமைத்துவ அபிவிருத்தி | 341 | 2,044 |
| பெரு நிறுவன பெறுமதிக்கான அபிவிருத்தி | 892 | 49,624 |
| தொழில்நுட்ப அபிவிருத்தி | 530 | 8,500 |
| மென் திறன் அபிவிருத்தி | 390 | 3,580 |
| வெளிப்புற பயிற்சி | 241 | 1,350 |
| **மொத்தம்** | **2,394** | **65,098** |

**பணியாளர் ஈடுபடுத்தல்**

குழு உறுப்பினர்களின் ஈடுபாடு சொத்து மட்டங்களில் முன்னுரிமையாக உள்ளது. அங்கீகாரத்தை வலியுறுத்துவதன் மூலம் ஹில்டன் நேர்மறையான, உள்ளார்ந்த மற்றும் உயர் செயல்திறன் கொண்ட பணியிட கலாச்சாரத்தையும் திறந்த தொடர்பு மற்றும் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளையும் வளர்க்கின்றார். வழக்கமான பணியாளர் ஈடுபாட்டு ஆய்வுகள் மற்றும் “CEO Light & Warmth Award”, “Hospitality Heroes Award” மற்றும் “Catch Me at My Best” போன்ற உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் போன்ற முயற்சிகள் சிறந்த செயல்திறனைக் கொண்டாடுகின்றது மற்றும் குழு உறுப்பினர்களிடையே உறவு மற்றும் பெருமையினை வளர்க்கின்றது.

ஹில்டனின் மனித மூலதன நடைமுறைகளில் நேர்மை மற்றும் ஒழுக்க நெறிமுறை சார் நடத்தை ஆழமாக பதிந்துள்ளன. தொழில் சார் ஒழுக்க நெறிமுறை, பணியிட பாதுகாப்பு, பாகுபாடு, எதிர்ப்பு மற்றும் சட்ட இணக்கம் தொடர்பான எதிர்பார்ப்புகளை கோடிட்டுக் காட்டும் ஹில்டனின் ஒழுக்க நெறிமுறை கோவையின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களும் வருடாந்தம் இணக்கம் மற்றும் நெறிமுறை தொடர்பான பயிற்சியினை நிறைவு செய்திருத்தல் வேண்டும். இது எமது பொறுப்புக்கூறல் மற்றும் நம்பிக்கையின் நிலையான கலாச்சாரத்தை அனைத்து உலகளாவிய செயல்பாடுகளிலும் உறுதி செய்கின்றன.

இது விருந்தோம்பல், நேர்மை, தலைமைத்துவம், குழு வேலை, உரிமை முதலிய எங்களது மதிப்புகளை பிரதிபலிக்கின்ற ஊழியர் படையொன்றினை வளர்ப்பதில் ஹில்டன் உறுதியாக உள்ளது. எங்களது மக்களில் மேற்கொள்ளும் தொடர்ச்சியான முதலீட்டின் மூலம் ஹில்டன் எங்களது வணிக நோக்கங்களை ஆதரிப்பது மட்டுமல்லாமல் எங்களது குழு உறுப்பினர்களை தனிப்பட்ட முறையிலும் மற்றும் தொழில் ரீதியாகவும் வலுவூட்டவும் ஆதரவு அளிக்கின்றது.

# நிறுவனத்தின் நடவடிக்கைகள் குறித்த இயக்குநர் குழுவின் ஆண்டு அறிக்கை

2024 திசெம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டிற்கான தங்கள் அறிக்கையையும் நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் வழங்குவதில் ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட்டின் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள்.

**1. முதன்மை செயற்பாடு**

ஹோட்டல்களின் உரிமையாளர்கள் மற்றும் நடத்துநர்களின் வணிகத்தை மேற்கொள்வதும், அத்தகைய நோக்கத்திற்காக எந்தவொரு நிலங்கள், கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களையும் நிர்மானிப்பது, கொள்வனவு செய்வது, குத்தகைக்கு பெற்றுக்கொள்வது அல்லது வேறுவிதமாக உடமையாக்கல் செய்வது, அவற்றை மேம்படுத்துவதும், பொருத்துக்களை செய்வதும், வழங்குவதும் நிறுவனத்தின் முக்கிய செயற்பாடு ஆகும்.

அதன் பிரகாரம், மீளாய்வாண்டில், கம்பனி ஹில்டன் கொழும்பு ஹோட்டலை சொந்தமாக வைத்து விருந்தோம்பல் வர்த்தகத்தில் ஈடுபட்டது

**2. நிதி அறிக்கைகள்**

நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் 48-87 ஆம் பக்கத்தில் இல் உள்ளன.

**3. தொடர்ந்தியங்கும் நிலை**

நிறுவனம் அதன் செயல்பாடுகளைத் தொடர்வதற்கு போதுமான சான்றுகளை கொண்டுள்ளது என்று இயக்குநர்கள் திருப்தி அடைகின்றார்கள். அதன் பிரகாரம், நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்தியங்கும் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**4. கணக்காய்வாளரின் அறிக்கை**

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் குறித்த கணக்காய்வாளரின் அறிக்கை பக்கங்கள் 48 முதல் 51 ஆம் பக்கம் வரையிலும் இல் உள்ளன.

**5. கணக்கீட்டு கொள்கைகள்**

நிதிக் கூற்றுக்களைத்தயாரிப்பதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் குறிப்பு 03 இல் கொடுக்கப்பட்டுள்ளன, மேலும் முந்தைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் அந்தக் கணக்கீட்டு கொள்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

**6. வரி விதிப்பு**

வரிவிதிப்புக்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 10 இல் கொடுக்கப்பட்டுள்ள வீதங்களில் கணக்கிடப்பட்டுள்ளது.

**7. பங்குலாபங்கள்**

2024 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்காக சாதாரண பங்குகளின் மீது இயக்குநர்கள் பங்குலாபத்தினை பரிந்துரைக்கவில்லை.

**8. பணிப்பாளர்கள் சபை மற்றும் அவர்களின் பங்குகள்**

மீளாய்வாண்டு மற்றும் 2024 திசெம்பர் 31 அன்றில் உள்ளவாறான கம்பனியின் பணிப்பாளர்கள்:

**திரு. பிரவீர் டி. சமரசிங்க [03.10.2024 அன்று முதல் நியமிக்கப்பட்டார்]**
செல்வி. தீஷனா எஸ். அமரசேகர
திரு. பி எச் பி தெனியாய
டாக்டர். ஐ ஏ கண்கனாம்கே
திரு. எம் எஸ் வத்தேகம
திரு. ஆர் சூரியஆராச்சிகே
திரு. சம்மில் உடவத்த [11.10.2024 அன்று முதல் நியமிக்கப்பட்டார]
திரு. துலிந்த பெரேரா [11.10.2024 அன்று முதல் நியமிக்கப்பட்டார்]
திரு. ஏ. ஜி. எஸ். சேனதீர [11.10.2024 அன்று முதல் நியமிக்கப்பட்டார்]
திரு. பி. ஏ. துஷார ரோட்ரிகோ [08.11.2024 அன்று முதல் நியமிக்கப்பட்டார்]

**பின்வரும் பணிப்பாளர்கள் 2024 திசெம்பர் 31 அன்று பணிப்பாளர்களாக இருப்பதை நிறுத்தினர்**

திரு. உப்புல் தர்மதாச [03.10.2024 அன்று முதல் நிறுத்தப்பட்டார்]
திரு. பி.ஏ. ஜெயகாந்த [11.10.2024 அன்று முதல் நிறுத்தப்பட்டார்]
திரு. கே.எஸ். வீரசிங்க [11.10.2024 அன்று முதல் நிறுத்தப்பட்டார்]
திரு. கே.ஏ.ஆர். ஜே. பெர்னாண்டோ [11.10.2024 அன்று முதல் நிறுத்தப்பட்டார்]
திரு. பி.ஏ.எஸ். ஏ. குமார [08.11.2024 அன்று முதல் நிறுத்தப்பட்டார்]

**2024 திசெம்பர் 31 அன்று பணிப்பாளர் பதவியில் ஏற்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு:**

திரு. உஸ்மான் அன்னாஸ் [08.01.2025 அன்று முதல் நியமிக்கப்பட்டார்]
திரு. மனோஜ் அல்காமா [08.01.2025 அன்று முதல் நியமிக்கப்பட்டார்]
திரு. பி. எச். பி. டெனியாயா [08.01.2025 அன்று முதல் நிறுத்தப்பட்டார்]
டாக்டர் ஏ. ஐ. கங்கனம்கே [08.01.2025 அன்று முதல் நிறுத்தப்பட்டார்]
திரு. ருவான் பெர்னாண்டோ [22.01.2025 அன்று முதல் நியமிக்கப்பட்டார]
திரு. ரோஷிகா ஜெயவர்தன [22.01.2025 அன்று முதல் நியமிக்கப்பட்டார்]
திரு. எம். எஸ். வத்தேகம [22.01.2025 அன்று முதல் நிறுத்தப்பட்டார்]
திரு. ஆர் சூரியஆராச்சிகே [22.01.2025 அன்று முதல் நிறுத்தப்பட்டார்]

**2024 திசெம்பர் 31 இற்கு பின்னர் பணிப்பாளர் பதவியில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களுக்குப் பின்னர், தற்போதைய பணிப்பாளர்கள் சபை பின்வருவோரை கொண்டுள்ளது.**

திரு.பிரவீர் டி.சமரசிங்க
செல்வி. தீஷனா எஸ். அமரசேகர
திரு.சமில் உடவத்த
திரு.துலிந்த பெரேரா

திரு. ஏ.ஜி.எஸ் சேனாதீர
திரு.பி.ஏ.துஷார ரொட்ரிகோ
திரு உஸ்மான் அண்ணாஸ்
திரு. மனோஜ் அல்கம
திரு.ருவான் பெர்னாண்டோ
திருமதி ரோஷிகா ஜயவர்தன

மேற்குறிப்பிட் பணிப்பாளர்கள் எவரும் கம்பனியில் பங்குகளை வைத்திருக்கவில்லை.

**9. அக்கறை இடாப்பு**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 192 (2) இல் வழங்கப்பட்டுள்ளதன் பிரகாரம் இயக்குநர்கள் பொதுவான வெளிப்படுத்தல்களைச் செய்துள்ளனர். இதன் விளைவாக, அவர்கள் அக்கறையுள்ள ஒப்பந்தங்களின் விபரங்கள் ஏதேனும் இருந்தால் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 37.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**10. இயக்குநர்களின் ஊதியம்**

கணக்கீட்டு காலதப்பகுதியில் இயக்குநர்களின் ஊதியம் மற்றும் பிற சலுகைகள் பின்வருமாறு இயக்குநர்களின் ஊதியம் ரூபா. 24,515,000/- (2023 - ரூபா.3,575,000/-)

**11. இயக்குநர்கள் அக்கறை / தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்**

மேற்குறிப்பிட்ட விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 37 இல் உள்ளன. வெளிப்படுத்தப்பட்டவை தவிர நிறுவனத்துடனான எந்தவொரு ஒப்பந்தங்கள் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்களிலும் இயக்குநர்களுக்கு நேரடி அல்லது மறைமுக அக்கறை இல்லை.

**12. கணக்காய்வாளர்கள்**

அரசியலமைப்பின் பிரிவு 154 உடன் சேர்த்துப் வாசிக்கப்படும் அரசியலமைப்பின் 19 மற்றும் 20 வது திருத்தங்களின் அடிப்படையில், கணக்காய்வாளர் நாயகம் கம்பனியின் கணக்காய்வாளராகத் தொடர்கின்றார். மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளருக்கு ரூபா. 4,592,021/- தொகை செலுத்தப்படல் வேண்டும், இதில் கணக்காய்வு கட்டணம் மட்டும் (2023- ரூபா. 3,440,000/-) உள்ளடங்கும்.

**13. நன்கொடைகள்**

2024 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டின் போது கம்பனி எவ்வித நன்கொடைகளையும் வழங்கவில்லை.

**14. கணக்காய்வு குழு**

மீளாய்வாண்டின் கணக்காய்வு குழுவின் கட்டமைப்பு.

2023 யூன் 28 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கணக்காய்வு குழு பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:

திரு. பி.ஏ.எஸ். ஏ. குமார தலைவர்
திரு. பி.எச்.பி. டெனியாய
திரு. எம்.எஸ். வட்டேகம

2024 திசெம்பர் 17 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கணக்காய்வு குழு பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:

திரு. பி. ஏ. துஷார ரொட்ரிகோ தலைவர்
திரு. பி.எச்.பி. தெனியாயே
திரு எம்.எஸ். வத்தேகம

சபையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து கணக்காய்வு குழு மீண்டும் 2025 பெப்ரவரி 21 முதல் பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:

திரு. பி. ஏ. துஷாரா ரோட்ரிகோ தலைவர்
திரு. மனோஜ் அல்காமா
திரு. உஸ்மான் அன்னாஸ்

இயக்குநர்கள் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் முன்னாள் பணிப்பாளரும் கணக்காய்வு குழுவின் தலைவருமான பட்டயக் கணக்காளர் திரு. வி. கனகசபாபதி அழைப்பின் பேரில் கணக்காய்வு குழு கூட்டங்களில் 2023 ஏப்ரல் இல் கலந்து கொள்கின்றார்.

**15. ஊதியக் குழு**

2023 ஏப்ரல் 20 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஊதியக் குழு பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:

திரு உபுல் தர்மதாச - தலைவர்
திரு. ஆர் சூரியராச்சிகே
திரு. பி.எச்.பி. மறுக்கின்றனர்
திரு. கே.எஸ்.வீரசிங்க
திரு. பி.ஏ.எஸ்.ஏ. குமார 2023 நவம்பர் 28 முதல் ஊதியக் குழுவில் நியமிக்கப்பட்டார்.

2024 திசெம்பர் 17 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஊதியக் குழு பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:

திரு.பிரவீர் டி.சமரசிங்க - தலைவர்
திரு. யு. பு. ளு சேனாதிரா
திரு. ஆர் சூரியராச்சிகே
திரு. சமில் உத்வெட்டா
திரு. பி. ஏ. துஷார் ரோட்ரிகோ

சபையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து ஊதியக் குழு மீண்டும் 2025 பெப்ரவரி 21 முதல் பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:

திரு.பிரவீர் டி. சமரசிங்க - தலைவர்
திரு.ஏ.சி.எஸ்.சேனாதிரா
திருமதி ரோஷிகா ஜயவர்தனா
திரு.சமில் உத்யவத்த
திரு. பி. ஏ. துஷாரா ரோட்ரிகோ

**16. தொடர்புடைய தரப்பினரடனான கொடுக்கல் வாங்கல் மீளாய்வு குழு**

தொடர்புடைய தரப்பினரடனான கொடுக்கல் வாங்கல் மீளாய்வு குழு 2025 பெப்ரவரி 21 முதல் பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:
திரு. பி. ஏ. துஷார ரோட்ரிகோ- தலைவர்
திரு. ருவன் பெர்னாண்டோ
திரு. துலிந்தா பெரேரா

**17. மூலதனச் செலவு**

பொருண்மையான மூலதன பங்களிப்புங்களின் விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 34 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

**18. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்**

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 12 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

**19. கூறப்பட்ட மூலதனம்**

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூறப்பட்ட மூலதனம் ரூபா. 20,466,456,858/- தொகையாக ஆக இருந்தது, இது 2,046,645,686 எண்ணிக்கையான சாதாரண பங்குகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.

# நிறுவனத்தின் நடவடிக்கைகள் குறித்த இயக்குநர் குழுவின் ஆண்டு அறிக்கை

**20. நிதிக் கூற்றுக்களுக்கான இயக்குநர்களின் பொறுப்புகள்**

நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களை அதன் விவகாரங்களின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் என்பன இயக்குநர்களின் பொறுப்பாகும், இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை இயக்குநர்கள் உறுதிப்படுத்துகின்றனர். அதன் பிரகாரம், இங்கு வழங்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் விவகாரங்களின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்குகின்றன மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நட்டம் குறித்தும் பணிப்பாளர்கள் திருப்தி அடைகிறார்கள்.

**21. நியதிச்சட்ட கொடுப்பனவுகள்**

இயக்குநர்கள் தங்களின் அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையிலும் அரசாங்கத்திற்கும் நிறுவனத்தின் ஊழியர்களுக்கும் செலுத்த வேண்டிய அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் நாளதுவரையாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பதில் திருப்தி அடைகின்றார்கள்.

**22. அறிக்கையிடல் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்**

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 33 இல் கொடுக்கப்பட்டுள்ளதைத் தவிர கணக்குகளில் சீராக்கம் செய்யும் அல்லது வெளிப்படுத்துதல் தேவைப்படும் வேறு எந்த நிகழ்வுகளும் அறிக்கையிடல் திகதிக்கு பின்னர் நடைபெறவில்லை.

**23. வருடாந்த பொதுக் கூட்டம்**

கம்பனியின் வருடாந்த பொதுக் கூட்டம் 2025 ஜூன் 27 அன்று ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட், ஹில்டன் கொழும்பு, 2, சர் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 1 இல் நடைபெறும்.

சபையின் உத்தரவின் பிரகாரம்
**ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட்**

கையொப்பமிடப்பட்டது
**திரு.பிரவீர் டி.சமரசிங்க**
தலைவர்

கையொப்பமிடப்பட்டது
**திரு.பி.ஏ.துஷாரா ரொட்ரிகோ**
பணிப்பாளர்

கையொப்பமிடப்பட்டது
**பி. டபிள்யூ. கார்ப்பரேட் செக்ரட்டீரியல் (பிரைவேட்) லிமிடெ**
கம்பனி செயலாளர்கள்

கொழும்பு
2025 யூன் 20

# கணக்காய்வு குழு அறிக்கை

**கணக்காய்வு குழு சாசனம்**
நிறுவனத்தின் நிதி விவகாரங்கள் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் ஆராய்வதற்கும் நிதி அறிக்கையை மீளாய்வு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் கணக்காய்வுக் குழுவானது சாசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகளின் அடிப்படையில் கணக்காய்வு குழுவானது பணிப்பாளர்கள் குழுவின் துணைக் குழுவாக செயல்படுகிறது.

**கணக்காய்வுக் குழுவின் வகிபாகம்**
தீர்மானமெடுப்பதில் சரியான உள்ளகட்டுப்பாட்டு முறைமைகள் இருப்பதை உறுதி செய்வதில் பணிப்பாளர்கள் குழுவிற்கு உதவுவதற்கான ஒரு பயனுள்ள மன்றமாகவும், அதே போல் இடர் முகாமைத்துவ செயல்முறை மற்றும் நிதி அறிக்கையின் தரத்தை நிவர்த்தி செய்வதற்கான செயல்பாடுகளிலும் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக கணக்காய்வுக் குழு செயல்படுகிறது: -

- நிறுவனத்தின் நிதி அறிக்கைகளின் நேர்மை மற்றும் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு மற்றும் நிதிக் கட்டுப்பாடுகளின் முறைமை.
- உள்ளக கணக்காய்வாளரின் செயல்திறன்.
- நிறுவனத்தின் நிதி அறிக்கைகளின் வருடாந்த சுயாதீன கணக்காய்வு.
- உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வு அறிக்கைகளை பாரபட்சமின்றி மீளாய்வு செய்தல் மற்றும் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை கருத்தில் கொள்ளுதல்.
- சட்டப்பூர்வ தேவைகளுடன் நிறுவனத்தின் இணக்கப்பாடு.

**கணக்காய்வுக் குழுவின் அமைப்பு**
பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு குழு, நிறைவேற்று அதிகாரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. இந்தக் குழு 2025 பெப்ரவரி 21 முதல் பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது :

| பணிப்பாளர்களின் பெயர் | நியமனத் திகதி |
|---|---|
| திரு.பி.ஏ.துஷார ரொட்ரிகோ | 2024.12.17 |
| திரு மனோஜ் அல்கம | 2025.02.21 |
| திரு உஸ்மான் அண்ணாஸ் | 2025.02.21 |

பணிப்பாளர்கள் சபை மறுசீரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து பின்வரும் பணிப்பாளர்கள் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களில் இருந்த தங்களது பதவிக் காலத்தை முடிவுறுத்தினர்.

| பணிப்பாளர்களின் பெயர் | இராஜினாமா திகதி |
|---|---|
| திரு. பி.ஏ.எஸ். ஏ. குமார் | 2024.11.08 |
| திரு. பி.எச்.பி. மறுப்பு | 2025.01.08 |
| திரு. எம்.எஸ். வட்டேகம | 2025.01.22 |

உறுப்பினர்களின் பின்னணி மற்றும் தொழில்சார் அனுபவத்தை விவரிக்கும் சுயவிவரங்கள் இந்த அறிக்கையின் 12 - 15 ஆம் பக்கங்களில் உள்ளன.

2023 ஏப்ரல் இல் கம்பனியின் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்தின் பிரகாரம், அழைப்பின் பேரில் திரு. வி. கனகசபாபதி கணக்காய்வு குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்.

திரு. வி. கனகசபாபதி இ திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற பணிப்பாளர் நாயகம், பொதுத்துறையில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக சேவையாற்றியவர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் நிதி முகாமைத்துவ சீர்திருத்த ஒருங்கிணைப்பாளராக இருந்தார். ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர் மற்றும் லண்டனில் உள்ள ஒரு பட்டய பொது நிதி கணக்காளர் ஆவார். இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனம், இலங்கை பொது நிதி கணக்காளர்கள் சங்கம் மற்றும் இலங்கை சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் ஆகியவற்றின் சக உறுப்பினராகவும் உள்ளார்.

**கணக்காய்வுக் குழு கூட்டங்கள்**
2024 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டின் போது கணக்காய்வுக் குழு 5 கூட்டங்களை நடத்தியது. பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர், பிரதம நிதி உத்தியோகத்தர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், கம்பனியின் கணக்காளர், ஹில்டன் கொழும்பின் பொது முகாமையாளர் மற்றும் நிதிப் பணிப்பாளர்,), ஹில்டன் கொழும்பின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதிகள், முகாமைத்துவ கணக்காய்வாளர்கள் மற்றும் M/s Ernst and Young என்போர் தேவைப்படும் சந்தர்பங்களில் அழைப்பின் பேரில் கணக்காய்வு குழு கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

கூட்டங்களில் கலந்து கொண்ட உறுப்பினர்களின் வருகை கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

# கணக்காய்வு குழு அறிக்கை

| பணிப்பாளர்களின் பெயர் | கலந்து கொள்ள திட்டமிடப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை | வருகை |
|---|---|---|
| திரு.பி.ஏ.துஷார ரொட்ரிகோ | 1 | 1/1 |
| திரு மனோஜ் அல்கம | N/A | N/A |
| திரு உஸ்மான் அண்ணாஸ் | N/A | N/A |
| திரு. பி.ஏ.எஸ். ஏ. குமார | 4 | 4/4 |
| திரு. பி எச் பி தெனியா | 5 | 5/5 |
| திரு. எம் எஸ் வத்தேகம | 5 | 5/5 |

கணக்காய்வு குழுவின் செயலாளராகச் செயல்படும் கம்பனியின் செயலாளரால் கணக்காய்வு குழு கூட்டங்களின் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டன மற்றும் அடுத்துவரும் மிகவும் சாத்தியமான கூட்டத்திற்கு கணக்காய்வுக் குழுக் கூட்ட அறிக்கைகள் பணிப்பாளர்கள் சபைக்கு அனுப்பப்பட்டன.

### நிதிசார் அறிக்கையிடல்

கம்பனியின் நிதிசார் அறிக்கையிடல் செயல்முறையின் நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேற்பார்வையிடுவதில் கணக்காய்வுக் குழு முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பிடத்தக்க தீர்மானம் அல்லது மதிப்பீடு தேவைப்படும் சிக்கலான அல்லது அசாதாரண கொடுக்கல் வாங்கல்களுக்கு குறிப்பாக கவனம் செலுத்தி, அனைத்து குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் முழுமையான மீளாய்வினை இந்தப் பொறுப்பு உள்ளடக்கியுள்ளது. இந்தக் கணக்கீட்டு பதிவுகள் பொருத்தமானவையாகவம் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றனவாகவும் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் ஏனைய தொடர்புடைய ஒழுங்குபடுத்தல் சட்டகங்களுடன் ஒத்துப்போகின்றன என்பதனை குழு உறுதி செய்கின்றது.

இதற்கு மேலதிகமாக, கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்குமுறை அறிவிப்புகளில் சமீபத்திய முன்னேற்றங்களை குழு உன்னிப்பாகக் கண்காணித்து, நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளில் அவற்றின் சாத்தியமான தாக்கத்தை மதிப்பிடுகின்றது. கணக்கீட்டு நடைமுறைகள் மற்றும் வெளிப்படுத்தல்களை சரியான நேரத்தில் சீராக்கம் செய்வதனை இந்த முன்னெச்சரிக்கை அணுகுமுறையானது செயல்படுத்துகின்றது, அதே நேரத்தில் நிதி அறிக்கையிடலின் துல்லியத்தன்மையினையும் நம்பகத்தன்மையினையும் பேணுகின்றது.

பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்திற்காக நிதிக்கூற்றுக்களை பரிந்துரைப்பதற்கு முன்னர், 2024 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை, ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் புறக்கணக்கணக்காய்வாளரான M/s நுசளெவ யனெ லுழரபெ, அகக் கணக்கணக்காய்வாளர் மற்றும் முகாமைத்துவ கணக்கணக்காய்வாளர்களுடன் இணைந்து மீளாய்வொன்றினை கணக்காய்வு குழு மேற்கொண்டது. குழுவிற்கு தேவையான உறுதிப்படுத்தல்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் வழங்கப்பட்டன. இந்த மீளாய்வானத நிதி கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டதை உறுதி செய்தது மற்றும் அந்த திகதியில் உள்ள கம்பனியின் விவகாரங்கள் மற்றும் மீய்வாண்டின் அதன் செயல்பாடுகள் குறித்த உண்மையான மற்றும் நியாயமான பார்வையினை அவை வழங்குகின்றன என்பதனையும் உறுதி செய்தது.

### உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம்

நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ செயல்முறைகளின் செயல்திறன் குழுவினால் கண்காணிக்கப்படுகின்றது. இது கணக்காய்வு அல்லது ஏனைய சான்றுகள் மூலம் அடையாளம் காணப்பட்ட கட்டுப்பாட்டு குறைபாடுகளை மீளாய்வு செய்து முகாமைக்கு சரியான நடவடிக்கைகளை பரிந்துரைக்கின்றது. தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக குழு அவ்வப்போது கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகளை மீள் மதிப்பீடு செய்கிறது.

கணக்காய்வு குழுவானது அதன் வரம்பிற்குள் உள்ள எந்தவொரு சிக்கலையும் விசாரணை செய்வதற்கு கட்டுப்பாடற்ற அதிகாரத்துடன் அதிகாரம் பெற்றுள்ளது.அதன் கடமைகளைச் செய்வதற்குத் தேவையான அனைத்து கம்பனி பதிவுகள், பணியாளர்கள் மற்றும் தேவையான வசதிகளுக்குமான முழுமையான அணுகலைக் இது கொண்டுள்ளது.குழு தேவைக்கேற்ப வெளிவாரி நிபுணர்கள் அல்லது ஆலோசகர்களை ஈடுபடுத்தலாம் மற்றும் பயனுள்ள மேற்பார்வையை எளிதாக்குவதற்கு அதன் கூட்டங்களில் எந்தவொரு ஊழியர், உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது வெளிப்புற கணக்காய்வாளரின் வருகையைக் கோருவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

### உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு செயல்பாடுகள் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் தலைமையில் மெற்கொள்ளப்பட்டன மற்றும் கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் ஹோட்டல் செயல்பாடுகள் குறித்த விரிவான கணக்காய்வுகள் மெற்கொள்ளப்பட்டது. முகாமையினால் நிறுவப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் வினைத்திறனை மதிப்பிடுவதிலும் குறிப்பாக இடர் முகாமைத்துவ நடைமுறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி செயல்பாட்டு ஊழியர்களின் இணக்கப்பாட்டினை மதிப்பிடுவதிலும் இந்த கணக்காய்வு கவனம் செலுத்தியது.

உள்ளக கணக்காய்வு திட்டமானது அதன் நோக்கம், வள ஒதுக்கீடு மற்றும் காலக்கெடு ஆகியவை நிறுவனத்திலுள்ள முக்கியமான இடர்கள் காணப்படும்

பகுதிகளை நிவர்த்தி செய்வதற்கு போதுமானதாக இருப்பதை உறுதி செய்த பின்னர் அந்த திட்டத்தை மீளாய்வு செய்து கணக்காய்வு குழு அங்கீகாரம் வழங்கியது. உள்ளகக் கட்டுப்பாடுகள், கணக்கீட்டு நடைமுறைகள் மற்றும் ஒட்டுமொத்தமான இடர் குறைப்பு சட்டகத்தின் வலிமையை மதிப்பீடு செய்வதற்கு உள்ளகக் கணக்காய்வாளர்களுடன் வழக்கமான ஈடுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

உள்ளக கணக்காய்வு அவதானிப்புக்கள் முகாமையுடன் விவாதிக்கப்பட்டதுடன் சரியான நேரத்தில் திருத்த நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டன. முகாமையின் பதிலளிப்புக்களுடனான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வுக் குழுவிடம் மீளாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டன. முக்கியமான பிரச்சினைகள் மற்றும் குழுவின் தீர்மானங்கள் உள்ளிட்ட இந்த அறிக்கைகளின் சுருக்கமொன்று உயர் மட்ட மேற்பார்வையினை உறுதி செய்வதற்காக பின்னர் பணிப்பாளர்கள் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது. கணக்கீடு, கணக்காய்வு அல்லது உள் கட்டுப்பாடுகள் தொடர்பான ஏதேனும் முறைப்பாடுகள் அல்லது கவலைகளை குழு மீளாய்வு செய்ததுடன் பொருத்தமான நடைமுறைகள் மற்றும் தீர்வுகள் நடைமுறையில் இருப்பதை உறுதி செய்தது.

**வெளிப்புற கணக்காய்வாளர்கள்**

அரசியலமைப்பின் 19 வது மற்றும் 20 வது திருத்தங்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க் தேசிய கணக்காய்வு சட்டம் இயற்றப்பட்டதன் மூலம், கணக்காய்வாரள் தலைமை அதிபதி கம்பனியின் வெளிப்புற கணக்காய்வாளராக தொடர்கின்றார். அதன் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டில் கம்பனியின் வெளிவாரி கணக்காய்வாளராக கணக்காய்வாளர்கள் தலைமை அதிபதி பணியாற்றினார். இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் உண்மையானதும் நேர்மையானதுமான முறையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பான இணக்கப்பாடு குறித்த சுதந்திரமான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துவதற்குப் பொறுப்பான வெளிவாரி கணக்காய்வாளருடன் கணக்காய்வு குழு வழமையான மற்றும் வினைத்திறனான ஈடுபாட்டினை பேணுகின்றது. சுயாதீனமான ஒரு பார்வையாளராக அனைத்து கணக்காய்வு குழு கூட்டங்களிலும் கலந்து கொள்வதற்கு வெளிவாரி கணக்காய்வாளர் அழைக்கப்பட்டார். இந்த தொடர்புகள் குழுவிற்கு ஒழுங்குபடுத்தல் மற்றும் இணக்கப்பாட்டு விடயங்களில் பெறுமதிமிக்க உள்ளுணர்வினை வழங்கின மற்றும் அடையாளம் காணப்பட்ட கட்டுப்பாடு அல்லது நடைமுறை ரீதியான குறைபாடுகள் குறித்த விவாதங்களை செயல்படுத்தின.

**முடிவுரை**

கம்பனியின் சொத்துக்கள் மற்றும் நிதி நிலையைப் பாதுகாக்க போதுமான கட்டுப்பாடுகள் உள்ளன என்றும், கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளில் வெளிப்படுத்தப்படும் முடிவுகள் எந்தவிதமான பொருண்மையான பிறழ்கூற்றுக்களில் இருந்தும் விடுபட்டுள்ளன என்றும் கணக்காய்வு குழு கருதுகின்றது.

**திரு.பி.துஷாரா ரொட்ரிகோ**
தலைவர்
கணக்காய்வுக் குழு

2025 பெப்ரவரி 21







# நிதிக்கூற்றுக்கள்

# சுதந்திரமான கணக்காய்வாளரின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எனது இல. My No. TIP/C/HDL/2024/FA/09 | உமது இல. Your No. | திகதி Date 26 May 2025

**தலைவர்**
ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட்

ஹோட்டல் டெவலப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டட்டின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் அதன் நடவடிக்கைகள் மீது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஹோட்டல் டெவலப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டட்டின் ("கம்பனி") 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் பிரிவு 154(6) இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு எனது அறிக்கை உரிய நேரத்தில் தாக்கல் செய்யப்படும்.

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

### 1.3 கம்பனியின் 2024 ஆம் வருட ஆண்டறிக்கையிலுள்ள உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் கம்பனியின் 2024 ஆம் வருட ஆண்டறிக்கையிலுள்ள தகவல்களை உள்ளடக்குகின்றன. ஆனால், அவை நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனிலான எனது கணக்காய்வாளரின் அறிக்கையினை உள்ளடக்கவில்லை. எனினும், இந்த கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுள்ளேன். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாளியாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயம், ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் அதில் நான் எந்த விதமான உறுதிமொழி தீர்மானத்தையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்களின் எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை, அவை கிடைக்கப் பெறும்போது, வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்வதில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் பொருண்மையாக வேறுபட்டுள்ளதா அல்லது கணக்காய்வில் நான் பெற்றுக்கொண்ட அறிவு அல்லது பொருண்மையாக இல்லாவிடின் பிறழ்கூற்றாகத் தோன்றுகின்றதா என்பதை கருத்திலெடுப்பதாகும்.

நிறுவனத்தின் 2024 ஆம் வருட ஆண்டறிக்கையைப் படிக்கும்போது, அதில் பொருண்மையான பிறழ்கூற்றான அறிக்கைகள் இருப்பதாக நான் முடிவு செய்தால், அந்த விடயத்தை முகாமைக்கு பொறுப்பானவர்களிடம் திருத்தம் செய்வதற்காகத் தெரிவிக்க வேண்டும். மேலும் குறிப்பிடத்தக்க திருத்தப்படாத பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இருந்தால், அவை அரசியலமைப்பின் பிரிவு 154 (6) இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது அறிக்கையில் சேர்க்கப்பட்டு அவை உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்கு தாக்கல் செய்யப்படும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது

# சுதந்திரமான கணக்காய்வாளரின் அறிக்கை

உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் காணும் உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளடங்கலாக ஏனைய விடயங்களுடன் குறிப்பிடத்தக்க கணக்காய்வு அவதானிப்புக்கள் குறித்து முகாமைக்கு பொறுப்பானவர்களுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

**2.1** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கதேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

**2.1.1** கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களையும் நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(a) மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163(2) இன் தேவைக்கேற்ப கம்பனியானதுமுறையான கணக்கீட்டுப் பதிவுகளைக் கொண்டுள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

**2.1.2** கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 151 இன் தேவைப்பாட்டுடன் இணங்குகின்றன.

**2.1.3** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d)(iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

**2.1.4** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(b)(iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

**2.2** பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள செயலாற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக்கொண்ட சான்றுகளின் அடிப்படையில் எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை

**2.2.1** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(d) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் கம்பனியினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் கம்பனியினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களைக் கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு.

**2.2.2** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (f) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூலச் சட்டம், கம்பனியினது ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு கம்பனி இணக்கப்பாடு காணவில்லை எனக் குறிப்பிடுவதற்கு.

**2.2.3** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (g) பிரிவின் தேவைக்கேற்ப கம்பனியானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை எனக் குறிப்பிடுவதற்கு.

**2.2.4** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (h) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிடுவதற்கு.

**ஜி.எச்.டீ. தர்மபால**

புதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# விரிவான வருமான கூற்று

2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான 12 மாதங்களுக்கானது

| | குறிப்பு | 12 மாதங்கள் 31.12.2024 ரூபா. 000 | 12 மாதங்கள் 31.12.2023 ரூபா. 000 |
|---|---|---|---|
| வருமானம் | 05 | 5,393,089 | 4,346,751 |
| விற்பனை கிரயம் | | (2,708,885) | (2,445,618) |
| மொத்த இலாபம் | | 2,684,204 | 1,901,133 |
| ஏனைய ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் | 06 | 28,621 | 13,175 |
| நிர்வாகச் செலவுகள் | | (1,077,648) | (904,197) |
| விற்பனை மற்றும் சந்தைபடுத்தல் செலவு | | (151,347) | (148,227) |
| ஏனைய செலவுகள் | | (611”748) | (698,548) |
| | | | |
| தேய்வுக்கு முன் செயற்பாட்டு இலாபம் | | 872,082 | 163,336 |
| தேய்வு | | (560,672) | (367,193) |
| தேய்வுக்கு பின் செயற்பாட்டு இலாபம் | | 311,410 | (203,857) |
| | | | |
| நிதி வருமானம் | 07 | 10,740 | 18,037 |
| நிதி கட்டணங்கள் | 08 | (590,497) | (598,546) |
| | | | |
| வரிக்கு முன் இலாபம் / நட்டம் | 09 | (268,347) | (784,366) |
| வருமான வரி செலவுகள் | 10 | (71,490) | 95,654 |
| காலப்பகுதிற்கான வரிவிதிப்புக்குப் பின்னர் இலாபம் / நட்டம் | | (339,837) | (688,712) |
| | | | |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| மீள்மதிப்பீட்டு மிகை - நிகர வரியின் பின் | | - | 704,527 |
| பணியாளர் நலன் கடப்பாடுகளின் கணக்கீட்டு ஆதாயம்/(இழப்பு) | | (11,801ரூ | (31,688) |
| **காலப்பகுதிற்கான மொத்த விரிவான வருமானம்/(செலவு)** | | (351,638ரூ | (15,873) |
| | | | |
| பங்கொன்றிற்கான வருவாய் - அடிப்படை (ரூபா.) | 11 | (0“ , 17ரூ | (0,01) |

# நிதி நிலைமை கூற்று

## 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று

| | | 2024.12.31 | 2023.12.31 |
|---|---|---|---|
| | | ரூபா. 000 | ரூபா. 000 |
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | | | |
| ஆதனம் பெறி மற்றும் உபகரணங்கள் | 12 | 14,323,547 | 11,553,379 |
| குத்தகை காணி | 13 | 6,141,189 | 6,215,377 |
| மூலதன குறை வேலைகள் | | 89,016 | 1,705,375 |
| மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள் | | 20,553,752 | 19,474,131 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்புகள் | 14 | 109,792 | 97,317 |
| வியாபார மற்றும் வருமதிகள் | 15 | 343,568 | 230,329 |
| தொடர்புடைய தரப்பினரிடமிருந்தான நிலுவைகள் | 16 | 88,407 | 42,820 |
| ஏனைய சொத்துக்கள் | 17 | 160,708 | 385,056 |
| நடைமுறை நிதி சொத்துக்கள் | 18 | 66,766 | 61,947 |
| காசு மற்றும் வங்கி மீதி | 19 | 103,596 | 275,356 |
| மொத்த நடைமுறை சொத்துக்கள் | | 872,837 | 1,092,825 |
| **மொத்த சொத்துக்கள்** | | 21,426,589 | 20,566,956 |
| **உரிமை மற்றும் பொறுப்புகள்** | | | |
| **பங்குதாரர்களின் உரிமை** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 20 | 20,466,456 | 20,466,456 |
| மீள்மதிப்பீடு மிகை | | 2,157,505 | 2,157,505 |
| ஒதுக்கங்கள் | 21 | 303 | - |
| திரண்ட நட்டம் | | (10,709,007) | (10,357,067) |
| மொத்த உரிமை | | 11,915,257 | 12,266,894 |
| **நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | | |
| வட்டியுடனான கடன்கள் மற்றும் ஏனைய பெறுகைகள் | 22 | 3,354,136 | 3,067,766 |
| ஓய்வூதிய நன்மை கடப்பாடகள் | 23 | 123,261 | 117,655 |
| பிற்போடப்பட்ட வரி பொறுப்பு | 24 | 1,552,104 | 1,480,613 |
| சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமை - குத்தகை காணியின் பொறுப்பு | 13 | 19,105 | 24,645 |
| மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புகள் | | 5,048,606 | 4,690,679 |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 25 | 1,696,975 | 1,156,620 |
| தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகையின் நிலவை | 26 | 32,776 | 215,996 |
| ஒப்பந்த பொறுப்புகள் | 27 | 304,541 | 226,786 |
| வட்டியுடனான கடன்கள் மற்றும் ஏனைய கடன்கள் | 22 | 595,824 | 58,333 |
| சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமை - குத்தகை காணியின் பொறுப்பு | 13 | 6,505 | 4,446 |
| பிடிகாசுக் கட்டணம் - மறுசீரமைப்பு செயற்திட்டம் | | 166,709 | 162,012 |
| வங்கி மேலதிக பற்று | | 1,659,396 | 1,785,189 |
| மொத்த நடப்பு பொறுப்புகள் | | 4,462,726 | 3,609,382 |
| மொத்த பொறுப்புகள் | | 9,511,332 | 8,300,062 |
| **மொத்த உரிமைமற்றும் பொறுப்புகள்** | | 21,426,589 | 20,566,956 |
| | | | |
| **ஒரு பங்கொன்றிற்கான தேறியசொத்துக்கள் - (ரூபா.)** | 28 | 5.82 | 5.99 |

இந்த நிதிநிலை கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்று நான் சான்றளிக்கின்றேன்.

**பிரதம நிதி உத்தியோகத்தர்**
ஜுட் விக்ரமரத்ன

இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்து வழங்குவதற்கு வழங்குவது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். 2025 பெப்ரவரி 21 அன்று பணிப்பாளர் சபைக்காகவும் அதன் சார்பாகவும் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது.

இயக்குனர்
துஷார ரொட்ரிகோ

தலைவர்
பிரவீர் சமரசிங்க

1 முதல் 38 வரையிலான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

# உரிமை மாற்றல் கூற்று

2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான 12 மாதங்களுக்கானது

| | கூறப்பட்ட மூலதனம் | மீள் மதிப்பீட்டு மிகை | தளபாடம், பொருத்துக்கள், உபகரணங்களுக்கான பதிலீட்டு ஒதுக்கம் | திரண்ட நட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| 2023 சனவரி 01 இல் உள்ளவாறான ஆரம்ப மீதி | 20,466,456 | 1,452,978 | 178,230 | (9,814,896) | 12,282,767 |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம் / (நட்டம்) | - | - | - | (688,712) | (688,712) |
| ஊழியர் நலன் கடமைகளின் கணக்கீட்டு ஆதாயம்/(இழப்பு), தேறிய வரி கழித்த பின் - நட்டம் | - | - | - | (31,688) | (31,688) |
| மீள் மதிப்பீடு மிகை (தேறிய வரி கழித்த பின்) | | 704,527 | | | 704,527 |
| தளபாடங்கள், பொருத்துக்கள்கள் மற்றும் உபகரணங்களை பதிலீடு செய்ததன் ஒதுக்கம் | - | - | - | - | - |
| தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம் | - | - | ரு178,230ரூ | 178,230 | - |
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 20,466,456 | 2,157,505 | - | (10,357,067) | 12,266,894 |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம் / (நட்டம்) | - | - | - | (339,837) | (339,837) |
| ஊழியர் நலன் கடமைகளின் கணக்கீட்டு ஆதாயம்/(இழப்பு), தேறிய வரி கழித்த பின் - நட்டம் | - | - | - | (11,801) | (11,801) |
| மீள் மதிப்பீடு மிகை (தேறிய வரி கழித்த பின்) | - | - | - | - | - |
| தளபாடங்கள், பொருத்துக்கள்கள் மற்றும் உபகரணங்களை பதிலீடு செய்ததன் ஒதுக்கம் | - | - | 207,816 | ரு207,816ரூ | - |
| தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம் | - | - | ரு207,513ரூ | 207,513 | - |
| **2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **20,466,456** | **2,157,505** | **303** | **(10,709,007)** | **11,915,257** |

1 முதல் 38 வரையிலான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

# காசுப் பாய்ச்சல் கூற்று

2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான 12 மாதங்களுக்கானது

| | குறிப்பு | 2024.12.31<br>ரூபா. 000 | 2023.12.31<br>ரூபா. 000 |
|---|---|---|---|
| வரிக்கு முன் இலாபம் / (நட்டம்) | | (268,347) | (784,366) |
| **சீராக்கங்கள்** | | | |
| தேய்மானம் | 12 | 482,573 | 291,682 |
| காணி பெறுமதி மதிப்பிழப்பு | 13 | 78,099 | 75,511 |
| கடன்பட்டோரின் மதிப்பிழப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் | 15 | 2,350 | 7,643 |
| நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களுக்கான ஏற்பாடு | 23 | 28,460 | 22,462 |
| முறிவுகளுக்கான ஏற்பாடு | 25 | 2,798 | 4,647 |
| வட்டிச் செலவுகள் | 8 | 590,497 | 598,546 |
| தேறாத நாணயமாற்று (இலாபம்)/நட்டம் | 6 | (35) | (2,955) |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபம் | 6 | (10,674) | (3,188) |
| வட்டி வருமானம் | 7 | (10,740) | (18,037) |
| தொழிற்படு மூலதனம் மாற்றத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் / (நட்டம்) | | 894,981 | 191,944 |
| இருப்புக்களில் அதிகரிப்பு / (குறைவு) | 14 | (12,476) | 35,287 |
| வருமதிகளில் அதிகரிப்பு / (குறைவு) | 15 | (115,588) | (96,078) |
| (தொடர்புடைய தரப்பினரிடமிருந்து வர வேண்டிய தொகையில் அதிகரிப்பு / (குறைவு) | 16/26 | (228,806) | 105,713 |
| ஏனைய சொத்துக்களில் அதிகரிப்பு / (குறைவு) | 17 | 224,349 | (50,641) |
| வியாபார மற்றும ஏனைய செண்மதிகளில் அதிகரிப்பு / (குறைவு) | 25 | (164,289) | 89,961 |
| ஒப்பந்தக் பொறுப்புகளில் அதிகரிப்பு / (குறைவு) | 27 | 77,755 | 47,342 |
| செயல்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாக்கப்படும் காசு | | 675,926 | 323,527 |
| செலுத்திய வருமான வரி | 29 | - | (254) |
| ஓய்வூதிய நன்மைகளை செலுத்துதல் | 23 | (34,656) | (13,963) |
| செயல்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாக்கப்படும் தேறிய காசு | | 641,270 | 309,310 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாக்கப்படும் காசு** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 12 | (171,388) | (193,842) |
| குத்தகை நிலத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையில் / பொறுப்பில் ஏற்பட்ட நிகர மாற்றம் | 13 | (7,392) | (4,806) |
| மூலதன குறை வேலையில் முதலீடு | | (766,283) | (1,289,918) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானம் | | 18,541 | 5,625 |
| பெறப்பட்ட வட்டி வருமானம் | 7 | 10,740 | 18,037 |
| முதலீட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | (915,781) | (1,464,903) |
| **நிதியீட்ட நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்வுகள்** | | | |
| நீண்ட கால கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் | 22 | - | (500,040) |
| நீண்ட கால கடன்களிலிருந்து கிடைக்கும் வருமானம் | 22 | 823,861 | 1,626,139 |
| நிதிக்கிரயம் | 8 | (590,497) | (598,546) |
| நிதியீட்ட நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | 233,364 | 527,553 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு/(குறைவு) | | (41,146) | (628,038) |
| ஆண்டின் ஆரம்பத்திலுள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவை (குறிப்பு 30) | | (1,447,886) | (822,800) |
| அமெரிக்க டாலர் சேமிப்பு வைப்புகளில் தேறாத நாணயமாற்று இலாபம் / (நட்டம்) | | 35 | 2,955 |
| **ஆண்டின் இறுதியிலுள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவை** | | **(1,488,998)** | (1,447,886) |

1 முதல் 38 வரையிலான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2024 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த 12 மாதங்களுக்கானது

**1. நிறுவனத் தகவல்**

**1.1 பொது**

ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட் என்பது இலங்கையில் பதிவு செய்யப்பட்டு, காணப்படும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஆகும். கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமும் முக்கிய வணிக இடமும் கொழும்பு 2, எண் 02, சர் சித்தம்பலம் கார்டினர் மாவத்தை என்ற முகவரியில் அமைந்துள்ளன.

**1.2 முதன்மை செயல்பாடுகள் மற்றும் வணிகத்தின் தன்மை**

ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட் நிறுவனம் விருந்தோம்பல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது மற்றும் ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் உரிமையாளராக செயல்படுகிறது.

**1.3 வெளியீட்டிற்கான அங்கீகாரத் திகதி**

இந்த நிதிக் கூற்றுகள் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி பணிப்பாளர்கள் சபையால் வெளியீட்டிற்காக அங்கீகரிக்கப்பட்டன.

**2. தயாரிப்பதன் அடிப்படைகள்**

**2.1 இணக்கப்பாட்டு அறிக்கை**

கம்பனியின் நிதி அறிக்கைகள் (நிதி நிலைமைக் கூற்று, முற்றடக்க வருமானக் கூற்று, உரிமை மாற்ற கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள்) இலங்கை கணக்கீட்டு நியமம், இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனம் வெளியீடு செய்த SLFRS மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.2 அளவீட்டின் அடிப்படை**

நிதிநிலை கூற்றுக்களில் பின்வரும் பொருள் உருப்படியைத் தவிர, நிதிநிலைமை கூற்று வரலாற்றுகிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன:

- பின்னர் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் நியாயமான பெறுமதியில் அளவிடப்படும்.
- நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடானது நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் நிகழ்கால பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**2.3 செயல்பாட்டு மற்றும் காட்சி நாணயங்கள்**

இது கம்பனியின் செயல்பாட்டு நாணயமும், காட்சி நாணயமும் ஆக காணப்படும் இலங்கை ரூபாயில் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கை ரூபாயில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து நிதி தகவல்களும் வேறு எதுவும் குறிப்பிடப்படாதபோது மிகவும் அண்மித்த ரூபாயிற்குக் மட்டந்தட்டப்பட்டுள்ளன.

**2.4 ஒப்பீட்டு தகவல்**

நிதி கூற்றுக்களை முன்வைத்தலுக்கான LKAS 01 நியமத்தின் பிரகாரம் கணக்கீட்டு கொள்கைகள் கம்பனியினால் முந்தைய நிதியியல் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் ஒத்துப்போகும் வகையில் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுள்ளன,

**2.5 பொருண்மை மற்றும் தொகுத்தல்**

நிதிக்கூற்றுக்களை முன்வைத்தலுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 01 இன் பிரகாரம், ஒவ்வொரு முக்கிய வகைப்படுத்தப்பட்ட பொருள்களும் நிதி நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக முன்வைக்கப்படகின்றன. வேறுபட்ட இயல்புகள் அல்லது செயல்பாடுகளைக் கொண்ட பொருள்களும், அவை முக்கியமானவை என்றால், இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 1 இன் பிரகாரம் தனியாக முன்வைக்கப்படகின்றன. மேலும் LKAS 1 இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் 2020 ஆம் ஆண்டு சனவரி 01 அன்று நடைமுறைக்கு வந்தன.

**2.6 எதிரீடு செய்தல்**

நிதி சொத்துகள் மற்றும் நிதி பொறுப்புகள் எதிரீடு செய்யப்படுகின்றன மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை எதிரீடு செய்யத்தக்க சட்ட உரிமை உள்ளதோ மற்றும் நிகரான அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது சொத்துகளை விற்னை செய்து பொறுப்பினை ஒரே நேரத்தில் தீர்க்கும் நோக்கம் உள்ளதோ, அவ்வாறு இருக்குமானால் மாத்திரம் தேறிய தொகை நிதி நிலைமை கூற்றில் அறிக்கையிடப்படுகின்றன.
ஏதாவது கணக்கீட்டு நியமம் அல்லது அதன் விளக்கத்தில் தேவைப்படத்தப்பட்டாலோ அல்லது அனுமதிக்கப்பட்டாலோ மற்றும் கணக்கீட்டு கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்தாலோ தவிர வருமானம் மற்றும் செலவுகள் முற்றடக்க வருமானக் கூற்றில் எதிரீடு செய்யப்படக்கூடாது.

**3. கணக்கீட்டு கொள்கைகள்**

கணக்கீட்டு கொள்கைகள் கம்பனியினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுள்ளன மற்றும் குறிப்பு 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளின் மாற்றங்களை தவிர முந்தைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றோடு ஒத்துப் போகின்றன.

**ஒப்பீட்டு தகவல்**

முந்தைய ஆண்டின் நிதி கூற்றுக்களின் விளக்கக்காட்சியும் வகைப்பாடுகளும் ஒப்பிடக் கூடியதற்காகவும் சிறந்த விளக்கக்காட்சிக்காகவும் தேவையான இடங்களில் திருத்தப்பட்டுள்ளது.

முந்தைய காலப்பகுதியை பொறுத்தவரை அளவு, விவரிப்பு மற்றும் விளக்கமான தகவல்கள் உள்ளிட்ட ஒப்பீட்டுத் தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, கணக்கீட்டு கொள்கையின் பின்னோக்கிய பயன்பாடு, பின்னோக்கிய மீள்பரிசீலனை அல்லது நிதிக்கூற்றுக்களில் உள்ள உருப்படிகளின் மீள வகைப்படுத்தல் என்பன காணப்படும் போது கம்பனி முந்தைய காலத்தினை முன்னிட்டு மேலதிகமான நிதிக்கூற்றொன்றினை முன்வைக்கின்றது.

**3.1 கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல்களின் மாற்றங்கள்**

**புதிய மற்றும் திருத்தப்பட்ட தரநியமங்கள் மற்றும் விளக்கங்கள்**

SLFRS 16 ஒரு ஒற்றை குத்தகைதாரர் கணக்கீட்டு முறைமையை வழங்குகின்றது, இது அனைத்து குத்தகைகளுக்கும் சொத்துகள் மற்றும் பொறுப்புகளை அங்கீகரிக்க குத்தகைதாரர்களை தேவைப்படுத்துகின்றது. இதன் பிரகாரம், குத்தகை காலம் 12 மாதங்கள் அல்லது குறைவாக இருந்தால் அல்லது அடிப்படையில் உள்ள சொத்து குறைந்த பெறுமதியுடையதாக இருந்தாலும், விதிவிலக்கு அளிக்கப்படுகின்றது. அதே நேரத்தில், குத்தகை வழங்குநரின் கணக்கீடு நடைமுறை தற்போது உள்ள நடைமுறையைப் போலவே தொடர்கின்றது.

இது LKAS 17 - குத்தகைகள், IFRIC 4 - ஒரு ஏற்பாட்டில் குத்தகை உள்ளதா என்பதை தீர்மானிப்பது, SIC 15 - செயற்பாட்டு குத்தகை ஊக்கத் தொகைகள் மற்றும் SIC 27 - குத்தகையின் சட்ட வடிவத்தை உள்ளடக்கிய பரிமாற்றங்களின் பொருளினை மதிப்பிடுதல் ஆகியவற்றை ஒழிக்கின்றது. SLFRS 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானத்தினை பயன்படுத்தும் நிறுவனங்கள் முன்கூட்டியே இதனை செயல்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

2019 சனவரி 1 அன்று அல்லது அதற்குப் பிறகு தொடங்கும் நிதிஅறிக்கையிடல் காலப்பகுதிக்கு ளுடுகுசுளு 16 அமுலில் இருக்கும்.

ஹில்டன் கொழும்பு ஹோட்டலின் ருனுயு கார் தரிப்பிடத்தின் நில குத்தகை உரிமைகள் 2019 சனவரி 1 முதல் அமுலுக்கு வரும் வகையில் ளுடுகுசுளு 16 இனை ஏற்றுக்கொள்ளும் போது பாதிப்பொன்று உள்ளது.

### 3.2 முக்கியமான கணக்கீட்டு தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

நிதி கூற்றுக்களை தயாரிப்பது எதிர்காலத்துடன் தொடர்புடைய சில முக்கியமான கணக்கீட்டு எடுகோள்கள்களை பயன்படுத்துவதைக் கோருகிறது. மேலும், அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில், வருமானம், செலவுகள், சொத்துகள், பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புகளின் வெளிப்படுத்தலை பாதிக்கும் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்களை கம்பனியின் முகாமைத்துவம் மேற்கொள்வதைத் தேவைப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், இந்த எடுகோள்கள்கள் மற்றும் மதிப்பீடுகளுக்கான நிச்சயமற்ற தன்மையானது எதிர்காலத்தில் சொத்து அல்லது பொறுப்பின் முன்கொண்டுசெல்லும் தொகையில் முக்கியமான சீராக்கத்தினை ஏற்படுத்தும் தீர்மானங்களுக்கு வழிவகுக்கலாம். எனவே, அனுபவம் மற்றும் முடிவுகள் இந்த தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளுடன் வேறுபடலாம்.

நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கைகளைப் பயன்படுத்துவதில், முகாமையானது பின்வரும் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொண்டுள்ளது. அவை நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் மிகவும் குறிப்பிடத்தக்க விளைவைக் கொண்டுள்ளன.

#### (அ) வரிவிதிப்பு

வருமான வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு தீர்வை உள்ளிட்ட ஏனைய வரிகளுக்கு கம்பனி பெறுப்புடையதாகும். நிதிக்கூற்றுக்களில் ளுடுகுசுளு இனை ஏற்றுக்கொள்வது மற்றும் வரி விதிப்பிற்கான வரி விதிக்கக்கூடிய இலாபம் குறித்த வரி வழிகாட்டுதல்கள் தொடர்பான பிரச்சினை நிலுவையில் உள்ள தற்போதைய, பிற்போடப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஏற்பாட்டினை தீர்மானிப்பதற்கு குறிப்பிடத்தக்க தீர்ப்பு தேவைப்பட்டது. தற்போதைய, பிற்போடப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஏற்பாட்டினை நிதிக்கூற்றுக்களில் ளுடுகுசுளு இனை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் வரி விதிப்பிற்கான வரி விதிக்கக்கூடிய இலாபம் குறித்த வரி தொடர்பான வழிகாட்டுதல்களின் பிரச்சினை நிலுவையில் உள்ளதையும் தீர்மானிப்பதற்கு குறிப்பிடத்தக்க தீர்ப்பு தேவைப்பட்டது. இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் நேரத்தில் வரிச் சட்டங்களின் பொருந்தக்கூடிய தன்மையின் விளக்கம் குறித்து நிச்சயமற்ற தன்மைகள் உள்ளன.

கம்பனி தற்போதைய, பிற்போடப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகளை அதன் மதிப்பீடுகளின் அடிப்படையில் அங்கீகரித்துள்ளது, அதாவது மேலதிகமான வரிகள் நிலவையானதா என்பதைப் பற்றியும் மதிப்பிட்டுள்ளது. இவை, இறுதியான வரி விளைவானது தொடக்கத்தில் பதிவு செய்யப்பட்ட தொகைகளுடன் வேறுபட்டால், அத்தகைய வேறுபாடுகள் வருமானம், பிற்போடப்பட்ட மற்றும் ஏனைய வரி தொகைகளை இது பாதிக்கும், இதன் விளைவாக தீர்மானம் எடுக்கும் காலப்பகுதியில் இந்த மாற்றங்கள் ஏற்படும்.

#### (ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு

கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நியாய பெறுமதியில் காட்டப்படுகின்றன. சாதாரணமான சொத்துகளுக்கான தற்போதைய சந்தை விலைகள் கிடைக்கப்பெற்றால், அந்தத் சான்றுகள் இந்த சொத்துகளின் நியாய பெறுமதிகளை மதிப்பிடுவதில் கருத்தில் கொள்ளப்படுகின்றன. அந்த வகையான தகவல்கள் இல்லாதபோது, கம்பனி ஒழுங்கான நியாய பெறுமதி மதிப்பீடுகளை உள்ளடக்கிய அளவுகளில், ஒரு சுயாதீன தொழில்முறை மதிப்பீட்டாளரின் உதவியுடன் அந்த சொத்துகளுக்கு நியாய பெறுமதிகளை தீர்மானிக்கின்றது.

#### (இ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலங்கள்

கம்பனி ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் சொத்துகளின் எஞ்சிய பெறுமதிகள் பயன்தரு ஆயுட்காலங்கள் மற்றும் தேய்வு ஆகியவற்றை மீளாய்வு செய்கின்றது. இவ்வாறான மதிப்பீடுகள், வீதங்கள் மற்றும் முறைகளை பற்றிய தீர்மானம் முகாமைத்துவத்தின் அனுபவத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது, எனவே இவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்படுகின்றன.

#### (ஈ) தொடர்ந்தியங்கும் தன்மை

பணிப்பாளர்கள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மையின் செயல்பாட்டை தொடர்ந்து மேற்கொள்ளும் இயலுமையினை மதிப்பீடு செய்துள்ளார்கள் மற்றும் எதிர்காலத்தில் வணிகத்தினை தொடர்வதற்காக கம்பனியின் வளங்கள் காணப்படுகின்றன என்று அவர்கள் திருப்தி அடைந்துள்ளனர். மேலும், பணிப்பாளர்கள் எந்தவொரு முக்கியமான நிச்சயமற்ற தன்மைகளையும் அறியவில்லை, அவை கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மையின் தொடரும் இயலுமையை மிகுந்த சந்தேகத்திற்கு ஆளாக்குவதாக இருக்கலாம். அவர்கள் கம்பனியை கலைப்பு செய்யவோ அல்லது அதன் செயல்பாடுகளை நிறுத்தவோ திட்டமிடவில்லை. அதனால், நிதிக்கூற்றுகள் தொடர்ந்தியங்கும் தன்மையின்) அடிப்படையில் தொடர்ந்தும் தயாரிக்கப்படுகின்றன.

#### (உ) நிதி சொத்துக்கள் மீதான மதிப்பிழப்புக்கள்

முற்றடக்க வருமான கூற்றில் மதிப்பிழப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டுமா என்பதற்கான ஏதேனும் புறநிலை சான்றுகள் உள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்கு, கம்பனி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அல்லது அடிக்கடியும் மதிப்பீடு செய்கின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2024 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த 12 மாதங்களுக்கானது

**(ஊ) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள்**
நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களின் கிரயம் நிகழ்கால மதிப்பீடுகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு நிகழ்கால மதிப்பீடு என்பது எதிர்காலத்தில் நிகழக்கூடிய உண்மையான நிலைகளிலிருந்து மாறுபடக்கூடிய பல்வேறு கருதுகோள்களை உருவாக்குவதை உட்கொள்கின்றது. இதில் கழிவிட்டு வீதம், எதிர்கால சம்பள அதிகரிப்புகள், இறப்பு வீதங்கள் போன்றன உள்ளடங்கும். இந்த மதிப்பீட்டின் சிக்கலான தன்மை, அதன் அடிப்படை கருதுகோள்கள் மற்றும் அவற்றின் நீண்டகால தன்மை ஆகியவற்றினால், நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் இக்கருதுகோள்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு மிகுந்த உணர்திறனுடையவை ஆகும். அனைத்து கருதுகோள்களும் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன.

சரியான கழிவீட்டு வீதத்தை நிர்ணயிக்கும் போது, முகாமையானது நிர்ணயிக்கப்பட்ட நலன் பொறுப்புகளின் எதிர்பார்க்கப்படும் காலத்துடன் இணைந்த இலங்கை அரசாங்க பிணைப் பத்திரங்களின் உழைப்பு விகிதத்தை பரிசீலிக்கிறது. இறப்பு வீதம் பொதுவாகக் கிடைக்கும் இறப்பு அட்டவணைகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது. எதிர்கால சம்பள அதிகரிப்புகள், எதிர்பார்க்கப்படும் எதிர்கால பணவீக்க வீதம் மற்றும் கம்பனியின் எதிர்பார்க்கப்படும் சம்பள அதிகரிப்பு வீதம் ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன.

## 4. குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்

கம்பனி அதன் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பயன்படுத்திய குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் கீழே உள்ளடக்கப்பட்டுள்ளன.

வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால் தவிர கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் இந்த நிதி அறிக்கைகளில் வழங்கப்பட்ட அனைத்து காலப்பகுதிகளுக்கும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 4.1 வருமான அங்கீகாரம்

**(i) வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்**
விருந்தோம்பல் மற்றும் ஓய்வு நேர சேவைகளை வழங்கும் வணிகத்தில் ஹோட்டல் ஈடுபட்டுள்ளது.

பொருட்கள் அல்லது சேவைகளின் கட்டுப்பாடானது இந்தப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு ஈடாக ஹோட்டல் எதிர்பார்க்கும் பரிசீலனையைப் பிரதிபலிக்கும் தொகைக்கு வாடிக்கையாளருக்கு மாற்றப்படும் போது வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது. ஹோட்டல் பொதுவாக அதன் வருமான ஏற்பாடுகளில் முதன்மையானது என்று இதனை முடிவு செய்துள்ளது, ஏனெனில் அது பொதுவாக பொருட்களை அல்லது சேவைகளை வாடிக்கையாளருக்கு மாற்றுவதற்கு முன்பு அவற்றைக் கட்டுப்படுத்துகிறது.

கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம் ளுடுகுசுளு 15 ஐப் பயன்படுத்துவதன் விளைவினை முகாமை மதிப்பிட்டுள்ளது:

**(அ) சேவைகளை வழங்குதல்-**
சேவைகளை வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானமானது சிறிது காலத்திற்குள் செயல்திறன் கடப்பாடுகள் பூர்த்தி செய்யப்படும்போது அங்கீகரிக்கப்படுகிறது.

அறை வருமானமானது தினசரி பயன்படுத்தப்படும் அறைகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுவதுடன் உணவு மற்றும் குடிபான வருமானம் விற்பனை செய்யப்படும் நேரத்தில் கணக்கிடப்படுகிறது. (அதாவது செயல்திறன் கடப்பாடு பூர்த்தி செய்யப்படும் போது). ஹோட்டல் தொடர்பான ஏனைய வருமானம் அத்தகைய சேவை வழங்கப்படும்போது கணக்கிடப்படுகின்றது.

**(ii) வட்டி**
அனைத்து நிதி சாதனங்களும் காலக்கழிவிடல் கிரயத்தில் மதிப்பிடப்படும் மற்றும் வட்டியுடன் கூடிய நிதி சொத்துக்களும் விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாக வகைப்படுத்தப்படுகின்றன. வட்டி வருமானம் அல்லது செலவு என்பன பயனுள்ள வட்டி விகிதத்தைப் (நுஐசு) பயன்படுத்தி பதிவு செய்யப்படுகின்றன, இந்த வீதம் நிதிக் சாதனத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசு கொடுப்பனவுகள் அல்லது எதிர்பார்க்கப்படும் ஆயுள்காலம் குறுங்காலம் முழுவதுமான பெறுவனவுகளை சரியாக கழிவீடு செய்யும் வீதமாவதுடன் பொருத்தமான இடங்களில், நிதிச் சொத்து அல்லது பொறுப்பின் முன் கொண்டு செல்லும் தொகைக்கு கணிப்பிடப்படும். நிதி அல்லாத சொத்துக்களின் மீதான வருமானம் தளபாடம் பொருத்துக்கள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஏனைய அனைத்து வட்டி வருமானமும் நிதி வருமானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**(iii) கடை வாடகை வருமானம்**
கடை வாடகை வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**புரள்வினை அடிப்படையாக கொண்ட வரிகள்**
விற்பனை புரள்வினை அடிப்படையாக கொண்ட வரிகளில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, சுற்றுலா அபிவிரத்தி தீர்வை மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு தீர்வை ஆகியன உள்ளடங்கும்.

ஹோட்டலின் வரிகள் அந்தந்த சட்டங்களின் பிரகாரம் விதிக்கப்படுகின்றன.

**ஏனைய வருமானம்**
ஏனைய வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.2 செலவு அங்கீகாரம்

ஏற்பட்ட செலவுக்கும் குறிப்பிட்ட வருமானப் பொருட்களின் உழைப்பிற்கும் இடையிலான நேரடி தொடர்பின் அடிப்படையில் செலவுகள் விரிவான வருமான கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. வணிகத்தை நடத்துவதிலும், ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களை வினைத்திறனான நிலையில் பராமரிப்பதிலும் ஏற்படும் அனைத்து செலவுகளும் விரிவான வருமான கூற்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

விரிவான வருமான அறிக்கையை முன்வைப்பதற்காக நிறுவனத்தின் செயல்திறனின் கூறுகளை நியாயமாக முன்வைப்பதன் அடிப்படையில்

"செலவுகளின் செயல்பாடு" முறை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வருமான வரி செலவு தற்போதைய மற்றும் பிற்போடப்பட்ட வரியை உள்ளடக்கியுள்ளது. வருமான வரி செலவு விரிவான வருமான கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.3 வரிவிதிப்பு

### 4.3.1 தற்போதைய வரி

தற்போதைய வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என்பது நடைமுறை ஆண்டைப் பொறுத்தவரை உள்நாட்டு உள்நாட்ட இறைவரி திணைக்களஆணையாளரிடம் இருந்து மீட்கப்பட அல்லது செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகளையும் மற்றும் முந்தைய ஆண்டுகளைப் பொறுத்தவரை செலுத்த வேண்டிய வரியிலுள்ள ஏதேனும் சிராக்கங்களையும் கொண்டுள்ளது.

தொகையைக் கணக்கிடுவதற்கு பயன்படுத்தப்படும் வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளவையாகும் அல்லது அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு கணிசமாக இயற்றப்பட்டவை ஆகும்.

### 4.3.2 பிற்போடப்பட்ட வரி

நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வரி அடிப்படைகளுக்கும் அவற்றின் முன்கொண்டு செல்லும் தொகைகளுக்கும் இடையிலான அறிக்கையிடல் திகதியில் உள்ள தற்காலிக வேறுபாடுகள் மீதான கடப்பாட்டு முறையினைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி வழங்கப்படுகின்றது.

அனைத்து விலக்களிக்கக்கூடிய வேறுபாடுகளுக்கும் ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. பயன்படுத்தப்படாத வரி வரவுகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்களை முன் கொண்டு செல்லுதல், வரி விதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைக்கக்கூடிய அளவிற்கு, விலக்கு அளிக்கப்பட்ட தற்காலிக வேறுபாடுகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி வரவுகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளை முன் கொண்டு செல்லுதல் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். வரி விதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைக்கக்கூடிய அளவிற்கு எதிராக விலக்களிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி வரவுகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்களை பயன்படத்தி முன்கொண்டு செல்ல முடியும்.

பிற்போடப்பட்ட வரிச் சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் பரிசீலிக்கப்படுகின்றது மற்றும் எதிர்காலத்தில் போதுமான வரிவிதிக்ககூடிய இலாபம் கிடைக்கப்பெறும் என்று இனி சாத்தியமில்லாத அளவுக்கு அது குறைக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்படாத முந்தைய வரிவிலக்குச் சொத்துகள் ஒவ்வொரு அறிக்கையிடும் தேதியிலும் மீண்டும் மீளாய்வு செய்யப்படுகின்றன, மேலும் எதிர்கால வரிவிதிக்ககூடிய இலாபம் இந்த பிற்போடப்பட்ட வரிச் சொத்தை மீட்டெடுக்கச் சாத்தியமுள்ளது என்ற நிலை ஏற்படும் வரை அவை அங்கீகரிக்கப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் மற்றும் பெறுப்புக்கள், அந்த சொத்துகள் தேறும் அல்லது கடன்கள் தீர்ப்பனவு செய்யப்படும் ஆண்டில் பொருந்தும் என்று எதிர்பார்க்கப்படும் வரி வீதத்தில் மதிப்பீடு செய்யப்படுகின்றன, இது அறிக்கையிடும் திகதியில் இயற்றப்பட்ட அல்லது அதன் பின்னர் இயற்விதிகள் மற்றும் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகின்றது.

### 4.4 நிதி அல்லாத சொத்து

### 4.4.1 ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்

#### (அ) ஆரம்ப அங்கீகாரத்தில் அங்கீகாரம் மற்றும் அளவீடு

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவத்திற்கு வழங்கப்படும் என்பது சாத்தியமாக இருக்கும் என்றும், அந்த சொத்தின் கிரயத்தினை நம்பகரமாக அளவிட முடியும் என்றும் இருந்தால், அவை LKAS 16 - ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் நியமத்தின் கீழ் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்பத்தில், ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் திரண்ட தேய்வு மற்றும் திரண்ட பெறுமதி மதிப்பிழப்பு என்பன இருந்தால் அதனை கழித்தபின்னர் மீதமுள்ளவை தேறிய கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் பாகங்களை மாற்றுவதற்கான செலவு மற்றும் அங்கீகாரத்திற்கான பிரமாணங்களுடன் இணங்கினால் நீண்ட காலப்பகுதிக்கான நிர்மாண செயற்திட்டங்களுக்கான கடன்படுகிரயம் என்பன அத்தகைய கிரயத்தில் உள்ளடங்கும். ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் குறிப்பிடத்தக்க பகுதிகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் மாற்ற வேண்டியுள்ள போது, கம்பனி குறிப்பிட்ட பயன்தரு ஆயுட்காலம் கொண்ட தனிப்பட்ட சொத்துக்களாக அத்தகைய பகுதிகளை அங்கீகரித்து அதற்கேற்ப தேய்மானம் செய்கின்றது. அதேபோல், பெரிய புதுப்பித்தலொன்று செய்யப்படும்போது, அங்கீகாரத்திற்கான பிரமாணங்கள் திருப்தியாக பூர்த்தி செய்யப்பட்டால், அதன் கிரயம் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் முன் கொண்டு செல்லும் தொகையில் பிரதியீடொன்றாக அங்கீகரிக்கப்படும். ஏனைய அனைத்து பராமரிப்பு மற்றும் திருத்த செலவுகளும் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படும்.

ஆரம்ப அளவீட்டிற்கு பின்னரான அளவீட்டில் அனைத்து ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களும் நியாயபெறுமதியில் இருந்து திரண்ட தேய்மானத்தைக் கழித்ததன் பின்னர் அளவிடப்படுகின்றன. மேலும் அத்தகைய மதிப்பீடு வெளிவாரியான சுதந்திரமான மதிப்பீட்டாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நியாய பெறுமதி அதன் முன்கொண்டு செல்லும் தொகையிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் வேறுபடுவதில்லை என்பதை உறுதிசெய்ய போதுமான தடவைகளில் மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன.

மீள்மதிப்பீட்டு மிகையானது ஏனைய முற்றடக்க வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டு உரிமையில் மீள்மதிப்பீட்டு மிகையாக செலவு வைக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், வருமான கூற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தின் மீள் மதிப்பீட்டு பற்றாக்குறையினை அது மாற்றியமைக்கும் அளவிற்கு ஏற்ப அதிகரிப்பானது வருமான கூற்றில் அங்கீகரிக்கப்படும். சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தின் மீதுள்ள ஏற்கனவே காணப்படும் மிகையினை மீள்மதிப்பீட்டு குறையானது ஈடுசெய்யும் மற்றும் இதனை தவிர மறுமதிப்பீட்டு பற்றாக்குறையனது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. அகற்றப்பட்டாலோ அல்லது அங்கீகாரம் நீக்கப்பட்டாலோ

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2024 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த 12 மாதங்களுக்கானது

விற்பனை செய்யப்படும் குறிப்பிட்ட சொத்து தொடர்பான எந்தவொரு மீள்மதிப்பீட்டு ஒதுக்கமும் நிறுத்திவைத்த இலாபத்திற்கு மாற்றப்படும்.

சொத்துக்களின் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட முன்கொண்டு செல்லும் தொகையின் அடிப்படையிலான தேய்மானத்திற்கும் சொத்தின் உண்மை விலையின் அடிப்படையிலான தேய்மானத்திற்கும் இடையிலான வேறுபாடானது சொத்தின் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து நிறுத்திவைத்த இலாபத்திற்கு ஆண்டுதோறும் மாற்றம் செய்யப்படுகின்றது.

**பிற்படுத்தப்பட்ட கிரயம்**

நிலைத்த தன்மையான சொத்துக்களை விரிவுபடுத்த அல்லது மேம்படுத்துவதற்காக ஏற்படும் பிற்படுத்தப்பட்ட கிரயங்கள் வணிகத்தைப் பயன்படுத்துவதற்கு அல்லது வணிகத்தின் வருமான கொள்ளளவை அதிகரிப்பதற்கு மூலதனச் செலவாகக் கருதப்படும் மற்றும் அத்தகைய செலவுகள் ஒரு சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகையில் அங்கீகரிக்கப்படும். ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் அன்றாட பராமரிப்புடன் தொடர்புடைய செலவுகள் முற்றடக்க வருமான கூற்றில் ஏற்பட்டதாக அங்கீகரிக்கப்படும்.

**தேய்மானம்**

ஆதனம் மற்றும் உபகரணங்களின் கிரயத்தை அவற்றின் எஞ்சிய பெறுமதிகளுக்காக எழுதுவதற்கு மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தின் அடிப்படையில் நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி தேய்மானம் கணக்கிடப்படுகின்றது. கொள்வனவு திகதியிலிருந்து அகற்றல் செய்யப்பட்ட திகதி வரையிலும் விகிதாசார அடிப்படையில் தேய்மானம் விதிக்கப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தின் அடிப்படையில் தேய்மான வீதங்கள் பின்வருமாறு:

| சொத்தின் வகை | % |
|---|---|
| கட்டிடங்கள் | 1.82 |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | 7.50 |
| குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் சமையலறை உபகரணங்கள் | 7.50 |
| கணினிகள் மற்றும் தொலைக்காட்சிகள் | 20.00 |
| மோட்டார் வாகனங்கள் | 25.00 |
| தளபாடங்கள், பொருத்துதல்கள் மற்றும் உபகரணங்கள் | 10.00 |
| செயற்பாட்டு உபகரணங்கள் | 33.00 |

* மூமென்பொருள் ஒரு துணை கூறு என்பதன் காரணமாக "கணினிகள் மற்றும் தொலைக்காட்சி" வகைப்படுத்தலின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றது மற்றும் அதன் பெறுமதி பொருண்மையற்றதாக இருந்ததன் காரணமாக வருமானம் ஈட்டுவதற்கு நேரடியாக பங்களிப்பு செய்யாது.

சொத்தின் எஞ்சிய பெறுமதிகள், பயன்தரு ஆயுட்காலம் மற்றும் தேய்மான முறைகள் ஆகியன ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமானதாக இருந்தால் சீராக்கம் செய்யப்படும்.

**அங்கீகரிப்பு நீக்கம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவை விற்பனை செய்யப்படும் போது அல்லது அவற்றின் பயன்பாட்டில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாத போது அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது (இல்லாமலாக்கப்படுதல்). அந்தச் சொத்து அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்ற போத உருவாகும் இலாபம் அல்லது நட்டம் (நிகர விற்பனை வருமானம் மற்றும் அந்தச் சொத்தின் முன்கொண்டு செல்லம் தொகை ஆகியவற்றின் வித்தியாசமாகக் கணக்கிடப்படும்) அந்த ஆண்டின் முழுமையான வருமானம் அறிக்கையில் "ஏனைய செயற்பாட்டு வருமானம் " என அங்கீகரிக்கப்படும். ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உருப்படி தொடர்பான மீள்மதிப்பீட்டு மிகை உரிமையில் உள்ளடக்கப்பட்டிருந்தால் அந்தச் சொத்து அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்ற போது அது நேரடியாக உரிமைக்கு மாற்றப்படும்.

**கடன்படு கிரயம்**

சொத்தொன்றை உடமையாக்குதல், நிர்மாணம் செய்தல் அல்லது உற்பத்தி செய்வதற்காக நேரடியாகச் செலவிடப்படும் கடன் கிரயங்கள், அந்தச் சொத்தை அதன் நோக்கத்திற்கேற்ப பயன்படுத்துதல் அல்லது விற்பனைக்குத் தயாராக்குதல் என்பவற்றிற்கு கணிசமான கால அளவு தேவைப்படும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய சொத்தின் கிரயத்துடன் மூலதனமாக்கல் செய்யப்படுகின்றன. ஏனைய அனைத்து கடன் கிரயங்களும் அவை ஏற்பட்ட காலத்தில் செலவாகக் கணக்கிடப்படுகின்றன.

### 4.4.2 நிதியல்லா சொத்தக்களின் மதிப்பிழப்பு

நிறுவனம் ஒவ்வொரு அறிக்கை திகதியிலும், ஒரு சொத்து மதிப்பிழந்திருக்கலாம் என்ற குறிகாட்டி உள்ளதா என்பதை மதிப்பீடு செய்கிறது. எந்த குறிகாட்டியும் காணப்பட்டால் அல்லது அந்தச் சொத்திற்கான வருடாந்த மதிப்பிழப்பு சோதனை தேவைப்பட்டால் கம்பனி அந்தச் சொத்தின் மீட்டெடுக்கக்கூடிய தொகையை மதிப்பீடுசெய்கின்றது. ஒரு சொத்தின் மீட்டெடுக்கக்கூடிய தொகை என்பது, அந்தச் சொத்தின் அல்லது காசுப்பாய்ச்சலினை உருவாக்கும் அலகின் நியாயமான பெறுமதி இல் இருந்து விற்பனைக்கான செலவுகள் கழித்த பின்னரான பெறுமதி மற்றும் அதன் பயன்பாட்டு பெறுமதி ஆகியவற்றில் எத அதிகமானதோ அந்த பெறுமதிதான் மீட்டெடுக்கக்கூடிய தொகையாகும். இது ஒவ்வொரு சொத்திற்கும் தனித்தனியாக நிர்ணயிக்கப்படுகின்றது ஆனால், ஏனைய சொத்துகள் அல்லது சொத்துக்களின் தொகுதியில் பெரும்பாலும் சுயாதீனமாக காசுப்பாய்ச்சலினை உருவாக்கவில்லை என்றால் அந்தச் சொத்துக்கு தனித்து கணக்கிடப்படாது. ஒரு சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகையானது அதன் மீட்டெடுக்கக்கூடிய தொகையினை விட அதிகமாக காணப்படம் போது, அந்தச் சொத்து மதிப்பிழந்திருக்கலாம் என்று கருதப்படும் மற்றும் அது அதன் மீட்டெடுக்கக்கூடிய தொகைக்கு பதிவழிப்பு செய்யப்படும். பயன்பாட்டு பெறுமதியினை மதிப்பீடு செய்யும் போது, எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் காலப்பெறுமதியினை மதிப்பீடு செய்வதற்கு குறித்த சொத்துடன் சார்ந்த இடர்கள் குறித்த நடைமுறை சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கும் வரிக்கு

முன்னரான கழிவீட்டு வீதத்தை பயன்படுத்தி தற்போதைய பெறுமதிக்கு கழிவீடு செய்யப்படுகின்றது. நியாய பெறுமதி மற்றும் விற்பனைக்கான கிரயத்தினை நிர்ணயம் செய்வதற்கு பொருத்தமான மதிப்பீட்டு மாதிரியொன்று பயன்படுத்தப்படுகின்றது. மதிப்பீட்டு பெருக்கிகளால் அல்லது ஏனைய கிடைக்கக்கூடிய நியாயமான பெறுமதி குறியீடுகளால் இக்கணக்கீடுகள் உறுதிசெய்யப்படுகின்றன.

தொடரும் செயல்பாடுகளில் ஏற்பட்ட மதிப்பிழப்புக்களானவை அந்த மதிப்பிழக்கப்பட்ட சொத்தின் பயன்பாட்டுடன் தொடர்புடைய செலவு வகைப்படுத்தலின் கீழ் வருமான கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆனால், முன்பு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு, அதன் பெறுமதி உரிமையில் பதிவு செய்யப்பட்டிருந்த சொத்துகளினை தவிர அந்த மதிப்பிழக்கப்புக்கள் முன்பிருந்த மீள்மதிப்பீட்டுதொகை வரையிலும் உரிமையிலேயே அங்கீகரிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு அறிக்கை திகதியிலும், முன்பு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பிழப்புக்கள் இனி இல்லாமல் இருக்கக்கூடும் அல்லது குறைந்திருக்கக்கூடும் என்ற குறிகாட்டி உள்ளதா என்பதை சொத்துக்களுக்காக மதிப்பீடு செய்கின்றது. அத்தகைய குறிகாட்டி இருந்தால், கம்பனி அந்தச் சொத்தின் மீட்டெடுக்கக்கூடிய தொகையை (Recoverable Amount) கணக்கிடுகனிறது. முன்பு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பிழப்புக்கள் அந்தச் சொத்தின் மீட்டெடுக்கக்கூடிய தொகையை நிர்ணயிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மதிப்பீடுகளில், கடைசியாக மதிப்பிழப்புக்கள் அங்கீகரிக்கப்பட்டதிலிருந்து மாற்றம் ஏற்பட்டிருந்தால் மட்டுமே மீள்மாற்றப்படலாம் (Reversed). அப்படியானால், அந்தச் சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகை அதன் மீட்டெடுக்கக்கூடிய தொகைக்கு உயர்த்தப்படும். ஆனால், உயர்த்தப்பட்ட அந்தத் தொகை, அந்தச் சொத்திற்கு முன்பு மதிப்பிழப்புக்கள் அங்கீகரிக்கப்படாமல காணப்பட்டு, பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்டிருந்தால் கிடைத்திருக்கும் முன்கொண்டு செல்லும் தொகையினை விட அதிகமாக இருக்கக் கூடாது.

### 4.4.3 நியாயப் பெறுமதி அளவீடு

கம்பனியானது அதன் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களினை நியாயப் பெறுமதியில் அளவீடு செய்கின்றது. நியாயப் பெறுமதி என்பது அளவிடப்படும் திகதியில் சந்தைப் பங்கு பற்றுநர்களிடையேயான ஒழுங்கான கொடுக்கல் வாங்கலில் ஒரு சொத்தினை விற்பனை செய்வதற்கு பெறப்படும் விலை அல்லது ஒரு பொறுப்பினை மாற்றல் செய்வதற்கு செலுத்தப்படும் விலை எனப் பொருள்படும் நியாயப் பெறுமதி அளவீடானது சொத்தை விற்பனை செய்யும் கொடுக்கல் வாங்கல் அல்லது பொறுப்பினை மாற்றல் செய்யும் கொடுக்கல் வாங்கல் பின்வரும் விதங்களில் உத்தேசத்தின் அடிப்படையில் இடம்பெறும்.

- சொத்து அல்லது பொறுப்புக்கான முதன்மை சந்தையில், அல்லது
- முதன்மை சந்தையொன்று காணப்படாவிடின், சொத்து அல்லது பொறுப்பிற்கான மிகவும் சாதகமான சந்தை

முதன்மைச் சந்தை அல்லது மிகவும் சாதகமான சந்தையினை கம்பனியினால் அணுகக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

அத்தகைய சொத்துக்களின் நியாயப் பெறுமதியானது சந்தைப் பங்குபற்றுநர்கள் சொத்தினை அல்லது பொறுப்பினை விலையிடும்போது பயன்படுத்துவார்கள் என்ற அனுமானத்தினை பயன்படுத்தியும், சந்தை பங்குபற்றுனர்கள் அவர்களது சிறந்த பொருளாதார நலனுக்காக செயற்படுகின்றார்கள் என்ற அனுமானம் என்பவற்றில் அளவீடு செய்யப்படுகின்றது.

கம்பனி சூழ்நிலைகளுக்கு பொருத்தமான பெறுமதியிடல்கள் நுட்பங்களை பயன்படுத்துவதுடன், நியாயப் பெறுமதியினை அளவீடு செய்வதற்காக இவற்றுக்கு போதுமான தரவுகள் கிடைக்கப்பெறுதல், பொருத்தமான அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளின் பயன்பாட்டினை அதிகரிக்கவும் அவதானிக்கமுடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டினை குறைத்தல் என்பவையாகும்

நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும் நியாயப் பெறுமதியானது அளவிடப்பட்ட அனைத்து சொத்துக்களும் பொறுப்புக்களும் நியாயப் பெறுமதி படிநிலையினுள் வகைப்படுத்தப்பட்டு, நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முழுவதுமாக குறிப்பிடத்தக்க ஆகக்குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:

**மட்டம்** 1 - ஒரேமாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான உயிர்ப்புள்ள சந்தைகளில் உள்ள விலை கூறப்பட்ட (செம்மையாக்கப்படாத) சந்தை விலைகள்

**மட்டம்** 2 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கக்கூடிய ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்

**மட்டம்** 3 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு அவதானிக்கப்பட இயலாத ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்

மீளத்தோன்றும் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு, ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலப்பகுதியின் இறுதியிலும் வகைப்படுத்தலினை மீள்மதிப்பீடு செய்வதன்மூலம் படிநிலைகளின் மட்டங்களுக்கிடையில் (நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முழுவதுமாக குறிப்பிடத்தக்க குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில்) ஏதேனும் மாற்றல்கள் இடம்பெற்றுள்ளதா என்று கம்பனி தீர்மானிக்கின்றது.

தொடர்ச்சியான நியாய பெறுமதி மதிப்பீட்டிற்கான அளவீடுகளுக்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை நிறுவனத்தின் முகாமை தீர்மானிக்கிறது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்பீட்டில் வெளிப்புற மதிப்பீட்டாளர்கள் ஈடுபட்டுள்ளனர். நிறுவனத்தின் கணக்காய்வு குழுவுடன் கலந்துரையாடலுக்கு ஒப்புதலுக்குப் பின்னர்,

வெளிப்புற மதிப்பீட்டாளர்களின் ஈடுபாடு முகாமையினால் தீர்மானிக்கப்படுகின்றது. தேர்வு செய்வதற்கான கோட்பாடுகள் சந்தை அறிவு, நற்பெயர், சுயாதீனத்தன்மை மற்றும் தொழில்சார் நியமங்கள் பராமரிக்கப்படுதல் என்பவற்றை உள்ளடக்கும்.

**4.5 முற்பண குத்தகை வாடகை**

குத்தகை காணிகள் குத்தகை காலத்தில் சமமான வருடாந்த அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட்டு, குத்தகை காலத்தில் வருமான கூற்றில் நேர்கோட்டு அடிப்படையில் தாக்கல் செய்யப்படும்.

**4.6 இருப்புக்கள்**

சரக்குகள், கிரயம் மற்றும் நிகர தேறத்தக்க பெறுமதி ஆகியவற்றில் குறைவான பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன. காலாவதியான (ழுடிளழடநவந) மற்றும் மெதுவாகச் நகரும் இருப்புக்களுக்கான தேவையான கழிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.நிகர தேறத்தக்க பெறுமதி என்பது இருப்புக்களை அவற்றின் தற்போதைய நிலையில் இருந்து விற்பனை செய்யக்கூடிய நிலைக்கு மாற்றுவதற்கான கிரயம் மற்றும் அல்லது கிரயத்தை கழித்ததன் பின்னர் வழக்கமான வணிக நடவடிக்கைகளில் விற்கப்படக்கூடிய விலை ஆகும்.

ஒவ்வொரு வகையான இருப்புக்களின் கிரயம் நிறையளிக்கப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

**4.7 நிதி சொத்துகள் - ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு**

ஒரு நிதிக் கருவி என்பது, ஒரு நிறுவனத்தின் நிதி சொத்தை மற்றும் மற்றொரு நிறுவனத்தின் நிதி பொறுப்பு அல்லது பங்குசார் கருவியினை உருவாக்கும் எந்த ஒப்பந்தமாக இருந்தாலும் ஆகும்.

**நிதி சொத்துகள்**

(அ) ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு நிதியியல் சொத்துக்கள் பெறுமதி குறைப்புக் கிரயத்தில், ஏனைய விரிவான வருமானத்தினூடான நியாயப் பெறுமதி (FVOCI) மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதி (FVTPL) என வகைப்படுத்தப்படுகின்றன.

நிதிச் சொத்தின் ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்கள் மற்றும் அவற்றை முகாமை செய்வதற்கான ஹோட்டலின் வணிக மாதிரியைப் பொறுத்தது ஆரம்ப அங்கீகாரத்தில் நிதி சொத்துக்களின் வகைப்பாடு தங்கியுள்ளது.முக்கிய நிதி கூறுகளை கொண்டிராத வியாபார வருமதிகள் தொடர்பாக, ஹோட்டல் நடைமுறை சலுகையினை பயன்படுத்தியுள்ளதால், அவை ஆரம்பத்தில் SLFRS 15 அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட பரிவர்த்தனை விலையில் அளவிடப்படுகின்றன. இதற்கு மாறாக, நிதி சொத்துகள் நியாயமான பெறுமதி ஊடாக இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதி (FVTPL) ஆக அளவிடப்படாதவரை, அவை ஆரம்பத்தில் அதன் நியாயமான பெறுமதியில் அதனுடன் பரிவர்த்தனைச் செலவுகளும் சேர்த்து அளவிடப்படுகின்றன.

ஒரு நிதி சொத்து குறைப்புக் கிரயத்தில் (Amortized Cost) அல்லது OCI ஊடாக நியாயமான பெறுமதி ஆக வகைப்படுத்தப்பட வேண்டுமானால், அது உருவாக்கும் காசுப்பாய்ச்சல்களின் முதல் மற்றும் வட்டியின் மட்டுமே கொடுப்பனவுகளாக இருத்தல் வேண்டும்.

ஹோட்டலின் வணிக மாதிரி என்பது, நிதி சொத்துகளை காசுப்பாய்ச்சல்களை உருவாக்கும் விதத்தில் முகாமைசெய்யும் முறையை குறிக்கின்றது. வணிக மாதிரியின் அடிப்படையில், ஒப்பந்த அடிப்படையிலான வசூலிப்புகளிலிருந்தும், நிதி சொத்துகளை விற்பனையிலிருந்தும் அல்லது இரண்டிலிருந்தும் காசுப்பாய்ச்சல்கள் உருவாகலாம்.

சந்தை இடம் அல்லது ஒழுங்குபடுத்தலின் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வழங்கப்பட வேண்டிய நிதி சொத்துகளின் கொள்வனவு அல்லது விற்பனை என்பன வியாபார திகதியில் அங்கீகரிக்கப்படும், அதாவது ஹோட்டல் சொத்தை கொள்வனவு அல்லது விற்பனை செய்வதற்கு ஒப்புக்கொண்ட திகதியில்.

**(ஆ) பின்னரான அளவீடு**

பின்னரான அளவீட்டு நோக்கங்களுக்கு நிதி சொத்துகள் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன:

I. குறைப்புக் கிரயத்தில் நிதி சொத்துகள- கடன் கருவிகள்

II. திரண்ட இலாபங்கள் மற்றும் நட்டங்களை மீண்டும் பதிவு செய்வதுடனான ஏனைய விரிவான வருமானத்தின் (OCI) ஊடான நியாயமான பெறுமதி (கடன் கருவிகள்).

III. ஏனைய விரிவான வருமானத்தின் (OCI) ஊடான நியாயமான பெறுமதி - திரண்ட இலாபங்கள் மற்றும் நட்டங்களை மீண்டும் பதிவு செய்யாமல் சொத்து அழிக்கப்படும் போது (பங்குசார் கருவிகள்).

IV. இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயமான பெறுமதி கொண்ட நிதி சொத்துகள்

**குறைக்கப்பட்ட கிரயத்தில் நிதிச்சொத்துகள் (கடன் கருவிகள்)**

இந்த வகை ஹோட்டலுக்கு இது மிகவும் தொடர்புடையது. ஹோட்டலானது நிதி சொத்துகளை குறைப்புக் கிரயத்தில் அளவிடும் போது கீழ்கண்ட இரு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்:

- நிதி சொத்து வணிக மாதிரியினுள் வைத்திருத்தல். அதாவது ஒப்பந்த அடிப்படையிலான காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காகவே நிதி சொத்துகளை வைத்திருத்தல்.
- நிதிச் சொத்தின் ஒப்பந்த விதிமுறைகள், குறிப்பிட்ட திகதிகளில் உள்ள காசுப்பாய்ச்சல்களுக்கு வழிவகுக்கும், அவை அசல் மற்றும் நிலுவையில் உள்ள அசல் தொகைக்கான வட்டியை மட்டுமே செலுத்துகின்றன.

குறைப்பு கிரயத்தில் மதிப்பிடப்படும் நிதி சொத்துக்கள் பின்னர் பயனுள்ள வட்டி விகிதம் (EIR) முறையினைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றன, மேலும் அவை மதிப்பிழப்பிற்குட்டவை. உட்பட்டவை. சொத்து அங்கீகரிக்கப்படாத போது, மாற்றியமைக்கப்பட்டபோது அல்லது மதிப்பிழப்பிற்குட்படும் போது ஆதாயங்களும் இழப்புக்களும் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஹோட்டலின் குறைக்கப்பட்ட கிரயத்திலான நிதி சொத்துக்களில் காசு மற்றும் வங்கி மீதிகள், குறுகிய கால முதலீடுகள், தொடர்புடைய தரப்பினரிடமிருந்து

பெறவேண்டிய தொகைகள், வியாபார வருமதிகள் மற்றும் நடைமுறை அல்லாத முதலீடுகள் என்பன உள்ளடங்கும்.

ஹோட்டல் நிதி சொத்துக்களை OCI (கடன் கருவிகள்) மூலம் நியாய பெறுமதியிலும், நிதி சொத்துக்களை OCI (பங்குசார் கருவிகள்) மூலம் நியாய பெறுமதியிலும், நிதி சொத்துக்களை FVTPL இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாய பெறுமதியிலும் வகைப்படுத்துவதில்லை.

**(இ) அங்கீகார நீக்கம்**

ஒரு நிதிச் சொத்தின் (பொருந்தக்கூடிய இடங்களில்) நிதிச் சொத்தின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிச் சொத்துக்களின் குழுவின் ஒரு பகுதியின் முதன்மையாக அங்கீகாரம் பின்வருவனவற்றைச் செய்தால் ரத்து செய்யப்படும்.

- சொத்திலிருந்து காசுப்பாய்வுகளை பெறுவதற்கான உரிமைகள் காலாவதியாகிவிடுதல் அல்லது
- சொத்திலிருந்து காசுப்பாய்வுகளை பெறுவதற்கான அதன் உரிமைகளை "பாஸ்த்துரூ" ஏற்பாட்டின் கீழ் மூன்றாம் தரப்பினருக்கு தாமதமின்றி முழுமையாக செலுத்த வேண்டிய கடமையினை ஹோட்டல் ஏற்றுக்கொண்டால் மற்றும்

    (அ) சொத்தின் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளையும் ஹோட்டல் கணிசமாக பரிமாற்றியுள்ளது, அல்லது

    (ஆ) சொத்தின் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளையும் கணிசமாக மாற்றவோ அல்லது தக்கவைத்துக்கொள்ளவோ இல்லை, ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டை ஹோட்டல் பரிமாற்றியுள்ளது.

சொத்தொன்றிலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறும் உரிமைகளை ஹோட்டல் மாற்றியிருந்தால் அல்லது 'Passthrough' ஏற்பாட்டில் சேர்ந்திருந்தால், அது உரிமையின் இடர்கள் மற்றும் நன்மைகள் எவ்வளவு பரிமாறப்பட்டுள்ளன என்பதை மதிப்பீடு செய்கின்றது. சொத்தின் முக்கியமான அனைத்து இடர்களையும் மற்றும் நன்மைகளையும் பரிமாற்றவோ, தக்கவைக்கவோ இல்லையெனில் அல்லது சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றவில்லை எனின், தொடர்ந்து பங்கேற்பின் அளவுக்கே மாற்றியுள்ள சொத்தை ஹோட்டல் அங்கீகரிக்கின்றது. இந்தக் குறைந்த அளவிலும், ஹோட்டல் தொடர்புடைய பொறுப்பையும் அங்கீகரிக்கின்றது. ஹோட்டல் தக்கவைத்துள்ள உரிமைகள் மற்றும் கடமைகளை பிரதிபலிக்கும் அடிப்படையில் மாற்றப்பட்ட சொத்து மற்றும் தொடர்புடைய பொறுப்புக்கள் அளவிடப்படுகின்றன.

மாற்றப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதத்தின் வடிவத்தை எடுக்கும் தொடர்ச்சியான ஈடுபாடானது சொத்தின் உண்மையான முன் செல்லும் தொகை மற்றும் ஹோட்டல் திருப்பிச் செலுத்த வேண்டிய அதிகபட்ச பரிசீலனைத் தொகை ஆகியவற்றில் எது குறைவானதோ அதனடிப்படையில் அளவிடப்படுகின்றது.

**(ஈ) மதிப்பிழப்பு**

ஹோட்டல் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயமான பெறுமதியில் வைத்திருக்கப்படாத அனைத்து கடன் கருவிகளுக்காகவும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான (ECLs) ஒதுக்கீட்டை அங்கீகரிக்கின்றது. ECLs என்பது ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய காசுப் பாய்ச்சல்கள் மற்றும் ஹோட்டல் பெறும் என எதிர்பார்க்கப்படும் காசுப் பாய்ச்சல்கள் ஆகியவற்றிற்கிடையேயான வித்தியாசத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது. இந்த வித்தியாசம் மூல செயல்திறன் வட்டி வீதத்தின் நெருக்கமான மதிப்பில் கழிவீடு செய்யப்படுகிறது. எதிர்பார்க்கப்படும் காசுப் பாய்ச்சல்களில் பிணைய பத்திரங்களின் (Collateral) விற்பனையிலிருந்து கிடைக்கும் காசுப் பாய்ச்சல்கள் அல்லது ஒப்பந்த விதிமுறைகளின் ஒரு பகுதியாக உள்ள ஏனைய கடன் மேம்பாடுகள் என்பன சேர்க்கப்பட்டிருக்கும்.

வியாபார வருமதிகளுக்கு ஹோட்டல் எளிமைப்படுத்தப்பட்ட அணுகுமுறையை ECL களினை கணக்கிடுவதற்கு பயன்படுத்துகின்றது. எனவே, ஹோட்டல் கடன் அடர்களில் ஏற்படும் மாற்றங்களை தனித்தனியாக கண்காணிக்காது, மாறாக, ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் முழு வாழ்நாள் ECL அடிப்படையில் இழப்பு ஒதுக்கீட்டினை அங்கீகரிக்கிறது. ஹோட்டல், கடந்தகால கடன் இழப்பு அனுபவத்தின் அடிப்படையில் மற்றும் கடன்பட்டோர் தனிப்பட்ட முன்கூட்டிய பொருளாதார காரணிகளை கருத்தில் கொண்டு, ஒரு ஒதுக்கீட்டு அட்டவணையை உருவாக்கியுள்ளது.

**நிதி பொறுப்புகள்**

**(அ) ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு**

தேவைக்கு ஏற்ப நிதி பொறுப்புகள், ஆரம்ப அங்கீகாரத்தின் போது இலாபம்/ நட்டத்தின் ஊடான நியாயமான பெறுமதி), கடன்கள் கடன் பெறுமதிகள் செலுத்தவேண்டிய தொகைகள் அல்லது பலவீன எதிர்ப்பு கருவிகளில் (Derivatives) ஹெட்ஜிங் (Hedging) கருவிகளாக வகைப்படுத்தப்படுகின்றன,

ஹோட்டலின் அனைத்து நிதிப் பொறுப்புகளும் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன, மேலும் கடன்கள், கடன் பெறுமதிகள் மற்றும் செலுத்தவேண்டிய தொகைகள் என்ற பட்சங்களில், நேரடியாகக் பரிவர்த்தனைச் செலவுகளை கழித்த பின்னரான நிகர பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

நிதி பொறுப்புகளில் வியாபாரம் மற்றும் ஏனைய செண்மதி தொகைகள், சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு வழங்க வேண்டிய தொகைகள் மற்றும் வங்கி மேலதிகப்பற்றுகள் உள்ளடங்கும்.

இலாபம் மற்றும் நட்டத்தின் ஊடான நியாயமான பெறுமதியில உள்ள நிதி பொறுப்புகளும் மற்றும் பலவீன எதிர்ப்பு நிதி கருவிகளும் ஹோட்டலிடம் இல்லை.

**(ஆ) பின்னரான அளவீடு**

நிதி பொறுப்புகளின் அளவீடு அவற்றின் வகைப்பாட்டின் அடிப்படையில் காணப்படும் இதைப் பின்வரும் வகையில் விளக்கலாம்:

கடன்கள் மற்றும் கடன் பெறுமதிகள்
கடன்கள் மற்றும் கடன் பெறுமதிகள் இந்த வகையான ஹோட்டலுக்கு மிகவும் தொடர்புடையதாகும். ஆரம்ப அங்கீகாரத்துக்குப் பின்னர், வட்டியுடன் கூடிய கடன்கள் மற்றும் கடன் பெறுமதிகள் குறைப்புக் கிரயத்தில் செயல்திறன் வட்டி வீத முறையை பயன்படுத்தி அளவிடப்படுகின்றன. பொறுப்புகள் அங்கீகரிக்கப்படாத போது அல்லது EIR குறைப்புக் கிரயம் செயல்முறையின்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2024 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த 12 மாதங்களுக்கானது

போது ஏற்படும் ஆதாயங்களும் இழப்புக்களும் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

குறைப்புக் கிரயம் கணக்கிடும் போது, கொள்வனவின் போது வழங்கப்பட்ட கழிவு அல்லது முதிர்ச்சிப் பெறுகைகள் மற்றும் EIR இன் ஒரு பகுதியாக உள்ள கட்டணங்கள்/ செலவுகள் கருத்தில் கொள்ளப்படும். EIR குறைப்புக் கிரயம் நிதி செலவுகளின் கீழ் இலாப நட்டக் கூற்றில் சேர்க்கப்படும். இந்த வகை பொதுவாக வட்டியுடன் கூடிய கடன்கள் மற்றும் கடன் பெறுமதிகளுக்கு பொருந்தும்.

**(இ) அங்கீகார நீக்கம்**

பொறுப்பின் கீழான கடப்பாடானது வெளியேற்றப்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால் அல்லது முதிர்வடைந்தால் ஒரு நிதியியல் பொறுப்பானது அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது. நடைமுறையிலுள்ள ஒரு நிதியியல் பொறுப்பானது, குறிப்பிடத்தக்க வித்தியாசமான விதிமுறைகளில் அதே கடன் வழங்குநரிடமிருந்தான மற்றுமோர் பொறுப்பினால் மாற்றீடு செய்யப்பட்டால், அல்லது நடைமுறையிலுள்ள பொறுப்பொன்றின் விதிமுறைகள் கணிசமானளவு மாற்றியமைக்கப்பட்டால், அத்தகைய பரிமாற்றல் அல்லது மாற்றியமைத்தலானது ஆரம்ப பொறுப்பின் அங்கீகார நீக்கமாக கருதப்படுவதுடன் மற்றும் ஓர் புதிய பொறுப்பானது அங்கீகரிக்கப்படுகின்றது. அவற்றின் முன் கொண்டு செல்லல் தொகைகளிலான வித்தியாசம் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**நிதியியல் கருவிகளின் ஈடுசெய்கை**

நிதி சொத்துகள் மற்றும் நிதி பொறுப்புகள் ஈடுசெய்யப்பட்டால்,அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கான வலியுறுத்தத்தக்க சட்ட உரிமை நடைமுறையில் காணப்பட்டால், மேலும் நிகர அடிப்படையில் தீர்க்கும் நோக்கம் காணப்பட்டால் நிகரத் தொகையானது ஒருங்கிணைந்த நிதி நிலைமை கூற்றில் அங்கீகரிக்கப்படும்.இதனால் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் ஒரே நேரத்தில் தீர்க்கப்படுவதும், பெறப்படுவதும் சாத்தியமாகும்.

## 4.8 காசு மற்றும் வங்கி மீதிகள்

காசு மற்றும் வங்கி மீதிகள் என்பது கையிலுள்ள காசு மற்றும் வங்கிகளில் உள்ள மீதிகளை குறிக்கின்றது. காசுப்பாய்ச்சல் கூற்றுக்காக காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பது கையிலுள்ள காசு மற்றும் வங்கிகளில் உள்ள வைப்புகளின் நிகர பெறுமதியாக, நிலுவையில் உள்ள வங்கி மேலதிகப்பற்றுகளை கழித்த பின்னரான பெறுமதியினை உள்ளடக்கியதாகும். கொள்வனவு திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது குறைவான குறுகிய காலத் திருப்பத்திற்குட்பட்ட முதலீடுகளும் காசுக்கு சமமானவைகளாகக் கருதப்படுகின்றன.

## 4.9 கூறப்பட்ட மூலதனம்

சாதாரண பங்குகள் உரிமையாக வகைப்படுத்தப்படுகின்றன. பங்குசார் கருவிகள் என்பது, பெறப்பட்ட அல்லது பெறவேண்டிய பணம் அல்லது ஏனைய வளங்களின் நியாயமான பெறுமதியில், பங்குசார் கருவிகளை வெளியிடுவதற்கான நேரடி கிரயத்தினை கழித்துத் தரப்படும் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

## 4.10 ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகள்

### 4.10.1 நிா்ணயிக்கப்பட்ட நலன் திட்டம் - பணிக்கொடை

நிதி நிலைமை கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு, அறிக்கை திகதியில் உள்ள நிர்ணயிக்கப்பட்ட நலன் பொறுப்பின் தற்போதைய பெறுமதியை குறிக்கின்றது. இது உத்தேச அலகு வரவு முறையினை பயன்படுத்தி நிகழ்கால மதிப்பீடு அடிப்படையில் கணிக்கப்பட்டது. நிகழ்கால மதிப்பீடுகளில், கழிவீட்டு வீதங்கள் மற்றும் எதிர்கால ஊதிய உயர்வுகள் பற்றிய கருதுகோள்கள் உருவாக்கப்படுகின்றன. ஒரு நிர்ணயிக்கப்பட்ட நலன் பொறுப்பு, இத்தகைய கருதுகோள்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு மிகவும் உணர்திறனுடையது. இந்நலன்கள் வெளிவாரியாக நிதியுதவி பெறப்படாதவையாகும்.

கம்பனி, நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களிலிருந்து உருவாகும் அனைத்து நிகழ்கால இலாபங்களையும் நட்டங்களையும் உடனடியாக ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கிறது.

எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் பிரகாரம், 5 ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையை நிறைவு செய்த பின் மட்டுமே பணிக்கொடை செலுத்தும் பொறுப்பு உருவாகின்றது.

### 4.10.2 நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு திட்டம்

ஒரு நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு திட்டம் என்பது, ஒரு நிறுவனம் தனியான நிறுவனமொன்றிற்கு நிரந்தர பங்களிப்புகளை செலுத்திய பின்னர் கிடைக்கும் ஒரு நலன் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ், கூடுதலாகத் தொகைகள் செலுத்தும் சட்டப்பூர்வமான அல்லது கட்டமைப்புக்குரிய பொறுப்பு நிறுவனத்துக்கு காணப்படாது. நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்களுக்கு வழங்கப்படும் பங்களிப்புகள், ஊழியர்களால் சேவைகள் வழங்கப்படும் காலங்களில், ஊழியர் நலன் செலவாக முழுமையான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**அ) ஊழியர் சேமலாப நிதியம்**

ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தில் முறையே 12% மற்றும் 8% பங்களிப்புகளை அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியத்திற்கு கம்பனியும், ஊழியர்களும் முறையே செலுத்துகின்றனர்.

**ஆ) ஊழியர் நம்பிக்கை நிதியம்**

கம்பனியானது ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தின் 3% இனை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு செய்கின்றது.

## 4.11 நிதி பொறுப்புகள்

### 4.11.1 ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு

கம்பனி அதன் நிதி பொறுப்புகளை ஒப்பந்த ஏற்பாட்டின் தன்மை மற்றும் நிதி பொறுப்புகளின் வரையறைகள் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயமான பெறுமதி (FVTPL) அல்லது ஏனைய நிதி பொறுப்புகள் என வகைப்படுத்துகின்றது.

கம்பனி அதன் பொறுப்புகளின் ஒப்பந்த ஏற்பாடுகளில் பங்கெடுக்கும் தருணத்தில் அந்த நிதி பொறுப்புகளை நிதி நிலைமை கூற்றில் அங்கீகரிக்கிறது

அ) இலாப நட்டத்தின் ஊடான நியாயமான பெறுமதி கொண்ட நிதிப் பொறுப்புக்கள் (FVTPL)

இலாப நட்டத்தின் ஊடான நியாயமான பெறுமதி கொண்ட நிதி பொறுப்புகள் (FVTPL) என்பன வியாபாரம் செய்வதற்காக வைத்திருக்கும் நிதி பொறுப்புகள் அல்லது ஆரம்ப அங்கீகாரத்தின் போது அதற்குத் தகுதிப்படுத்தப்பட்ட நிதி பொறுப்புகளை உள்ளடக்கியவை ஆகும்.

ஆரம்ப அங்கீகாரத்துக்குப் பின்னர் FVTPL நிதி பொறுப்புகள் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன மற்றும் அதில் ஏற்பட்ட மாற்றங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. கொள்வனவுடன் நேரடியாகச் சார்ந்த பரிவர்த்தனைச் செலவுகள் இலாபம் அல்லது நட்டத்தில் அவ்வப்போது ஆரம்ப அங்கீகாரத்தின் போது அங்கீகரிக்கப்படும். ஆரம்ப அங்கீகாரத்தின் போது FVTPL நிதி பொறுப்புகளை குறிப்பிடும் பிரமாணங்கள் FVTPL நிதி சொத்துகளுக்கான பிரமாணங்களோடு ஒத்துப்போகும் விதமாகவே காணப்படும்.

**ஆ) ஏனைய நிதி பொறுப்புகள்**

வைப்புகள், கம்பனி வெளியிடப்படும் கடன்கள் மற்றும் ஏனைய கடன் பெறப்பட்ட நிதிகளை உள்ளடக்கிய ஏனைய நிதி பொறுப்புகள் ஆரம்பத்தில் பரிவர்த்தனைச் செலவை கழித்ததன் பின்னர் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன.
அச் செலவு நேரடியாகக் கொள்வனவு நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாகும். பின்னர் அவை குறைப்புக் கிரயம் முறையில் செயல்திறன் வட்டி வீதத்தினை பயன்படுத்தி அளவிடப்படுகின்றன. வெளியீட்டில் வழங்கப்பட்ட கழிவு அல்லது முதிர்ச்சிப் பெறுகைகள் மற்றும் செயல்திறன் வட்டி வீதத்தின் ஒரு அங்கமாக உள்ள செலவுகளை கருத்தில் கொண்டு குறைப்புக் கிரயம் கணக்கிடப்படுகின்றது.

### 4.11.2 நிதிப் பொறுப்புக்களின் அங்கீகார நீக்கம்

பொறுப்பின் கீழான கடப்பாடானது வெளியேற்றப்பட்டால் அல்லது ரத்துசெய்யப்பட்டால் அல்லது முதிர்வடைந்தால் ஒரு நிதியியல் பொறுப்பானது அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது. நடைமுறையிலுள்ள ஒரு நிதியியல் பொறுப்பானது, குறிப்பிடத்தக்க வித்தியாசமான விதிமுறைகளில் அதே கடன் வழங்குநரிடமிருந்தான மற்றுமோர் பொறுப்பினால் மாற்றீடு செய்யப்பட்டால், அல்லது நடைமுறையிலுள்ள பொறுப்பொன்றின் விதிமுறைகள் கணிசமானளவு மாற்றியமைக்கப்பட்டால், அத்தகைய பரிமாற்றல் அல்லது மாற்றியமைத்தலானது ஆரம்ப பொறுப்பின் அங்கீகார நீக்கமாக கருதப்படுவதுடன் மற்றும் ஓர் புதிய பொறுப்பானது அங்கீகரிக்கப்படுகின்றது. அவற்றின் முன் கொண்டுசெல்லல் தொகைகளிலான வித்தியாசம் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.12 ஏற்பாடுகள்

முன்னைய நிகழ்வின் விளைவாக ஒரு தற்போதைய பொறுப்பினை (சட்டப்பூர்வமானதோ அல்லது கட்டமைப்புக்குரியதோ) கம்பனி கொண்டிருக்கும்போது, அந்தப் பொறுப்பை தீர்ப்பனவு செய்வதற்குரிய பொருளாதார நலன்களை உட்படுத்திய வளங்களின் வெளியேற்றம் நிகழும் என்பது சாத்தியமானதாக இருந்தால் மற்றும் அந்தப் பொறுப்பின் தொகையை நம்பத்தகுந்த முறையில் மதிப்பிடக் கூடியதாகவிருந்தால் ஏற்பாடொன்று அங்கீகரிக்கப்படும். மேலும் எந்த ஏற்பாட்டிற்கும் தொடர்பான செலவு, முழுமையான வருமான கூற்றில் மீள்நிரப்பலினை கழித்துப் பதிவு செய்யப்படும்.

### 4.13 காசுப்பாய்ச்சல் கூற்று

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 7 காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், காசுப்பாய்ச்சல் கூற்று நேரில் முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பன கையில் காசு, வங்கியில் உள்ள காசு மற்றும் வங்கி மேலதிகப்பற்றுக்களை உள்ளடக்கியதாகும்.

### 4.14 பிரிவு/கூறு ரீதியான தகவல்

பிரிவு (Segment) என்பது ஏனைய பிரிவுகளிலிருந்து மாறுபடும் இடர்கள் மற்றும் வருமானங்களுக்கு உட்பட்ட சேவைகளை வழங்கும் ஒரு தனித்துவமான கூறாகும். கம்பனியின் செயல்பாடுகள் அனைத்தும் ஒரே பிரிவாகவே கருதப்படுவதால், தனித்துவமாக அடையாளம் காணத்தக்க பிரிவுகள் எதுவும் இல்லை.

### 4.15 வெளியிடப்பட்டுள்ள ஆனால் இன்னும் நடைமுறைக்கு வராத நியமங்கள்

2023 திசெம்பர் 31 அன்று வெளியிடப்பட்ட அனைத்து தொடர்புடைய நியமங்கள் மற்றும் விளக்கங்களையும் கம்பனி ஏற்றுக்கொண்டுள்ளது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2024 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த 12 மாதங்களுக்கானது

| | 2024.12.31<br>ரூபா. 000 | 2023.12.31<br>ரூபா. 000 |
|---|---|---|
| **5. வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்** | | |
| **5.1** வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான மொத்த வருமானம் | 5,445,959 | 4,389,326 |
| கழி: சுற்றுலா அபிவிருத்தி தீர்வை | (52,870) | (42,575) |
| **வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான நிகர வருமானம்** | **5,393,089** | 4,346,751 |

வருமானத்தை கணக்கிடுவதில் ரூபா. 1,033 மில்லியன் (2023 - ரூபா. 720 மில்லியன்) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கழிக்கப்பட்டுள்ளது.

### 5.2 வருமானம்

| | | |
|---|---|---|
| அறை வருமானம் | 1,848,222 | 1,137,293 |
| உணவு மற்றும் குடிபான வருமானம் | 3,342,408 | 3,034,962 |
| ஏனைய செயல்பாட்டுத் திணைக்களங்கள் | 56,153 | 55,845 |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு தீர்வை | 146,306 | 118,651 |
| | **5,393,089** | 4,346,751 |

### 6. ஏனைய ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள்

| | | |
|---|---|---|
| பொறி மற்றும் உபகரணங்களை அகற்றல் செய்வதன் மூலமான இலாபம் | 10,674 | 3,188 |
| கடை வாடகைகள் | 15,168 | 15,673 |
| நாணய மாற்று ஆதாயம் / (இழப்பு) தேறாதது | 35 | 2,955 |
| நாணய மாற்று ஆதாயம் தேறியது | (82) | (13,668) |
| ஏனைய வருமானம் | 2,826 | 5,027 |
| | **28,621** | 13,175 |

### 7. நிதி வருமானம்

**வட்டி வருமானம் - கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள்**

| | | |
|---|---|---|
| பணச்சந்தை மீதான வட்டி / திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | 4,941 | 961 |
| பணியாளர் கடன்களுக்கான வட்டி | 436 | 609 |
| சுகுஊ கணக்குகள் மீதான வட்டி | 30 | 409 |
| சேமிப்பு கணக்குகள் மீதான வட்டி | 2,623 | 2,507 |
| குகுரூநு தளபாடம், பொருத்துக்கள் மற்றும் உபகரண பிரதியீட்டு ஒதுக்கம் மீதான வட்டி வருமானம் | 2,712 | 13,551 |
| | **10,740** | 18,037 |

### 8. நிதிசார் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| வங்கி மேலதிக பற்று வட்டி | 209,850 | 296,254 |
| காலக் கடன் வசதி | 379,638 | 299,097 |
| குத்தகைச் சொத்துக்கள் | 1,008 | 3,195 |
| | **590,497** | 598,546 |

## 9. காலப்பகுததிக்கான இலாபம்

| | 31.12.2024<br>ரூபா. 000 | 31.12.2023<br>ரூபா. 000 |
|---|---|---|
| பின்வருவனவற்றை உள்ளடக்கிய அனைத்து செலவுகளையும் தாக்கல் செய்த பின்னர் காலப்பகுதிக்கான இலாபம் குறிப்பிடப்படுகின்றது: | | |
| பணிப்பாளர்களின் ஊதியங்கள் | 24,515 | 18,806 |
| கணக்காய்வளர்களுக்கான ஊதியம் - கம்பனி | 1,952 | 1,200 |
| - கொழும்பு ஹில்டன் | 2,600 | 2,240 |
| தேய்மானம் | 560,672 | 367,193 |
| பணியாளர் செலவுகள் (பின்வரும் பணியாளர் நலன் திட்டச் செலவுகள் உட்பட) | 740,983 | 606,880 |
| நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டக்கிரயம் - பணிக்கொடை | 28,460 | 22,462 |
| நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்ட செலவுகள் - நூீகு ரூ நுவுகு | 87,842 | 75,780 |
| குழும சேவை மற்றும் நலன் கட்டணம் - ஹில்டன் இன்டர்நேஷனல் | 105,273 | 85,008 |
| சட்டக் கட்டணங்கள் | 12,057 | 6,337 |
| மின்சாரம் | 276,784 | 349,175 |

### 9.1 மீள வகைப்படுத்தப்பட்ட செலவுகள்

முந்தைய ஆண்டுகளில், வருமான மையங்களுடன் தொடர்புடைய பணியாளர் உணவகம் தொடர்பான செலவுகள் விற்பனை கிரயமாக மீள வகைப்படுத்தப்பட்டபோது, அவை தவறுதலாக ஏனைய செயல்பாட்டு செலவுகள்எனப் பதிவுசெய்யப்பட்டன அதேவேளை, அதன் உண்மையான செலவானது நிர்வாகச் செலவுகள் எனப் பதிவாகி இருந்தன. மேலும், 2024 முதல், சமூக பாதுகாப்பு பங்களிப்பு தீர்வை வருமானத்துடன் சேர்த்துக் காட்டப்பட்டு அதற்குரிய செலவுகள் தற்போதைய மற்றும் முந்தைய ஆண்டுகளுக்கான நிர்வாகச் செலவுகளில் சீராக்கப்பட்டுள்ளன . இவ்வாறு, இப்போது சரியாக மறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| | முன்னர் பதிவு செய்யப்பட்டதன் பிரகாரம் | பிழை திருத்தத்தின் தாக்கம் | மீண்டும் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் |
|---|---|---|---|
| செயற்பாட்டு செலவுகள் | 616,505 | 82,043 | 698,548 |
| நிர்வாக செலவுகள் | 867,590 | (82,043) | 785,547 |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு தீர்வை | - | 118,651 | 118,651 |
| நிர்வாக செலவுகளை மீள வகைப்படுத்தல் | 867,590 | 36,607 | 904,197 |

## 10. வருமான வரிச் செலவு

| | பிழை திருத்தத்தின் தாக்கம் | மீண்டும் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் |
|---|---|---|
| முந்தைய ஆண்டுகளிலிருந்தான குறை/(மிகை) ஏற்பாட்டுச் சீராக்கங்கள் | - | (17,731) |
| பிற்போடப்பட்ட வரி (வருமானம்) செலவு | 71,490 | (77,923) |
| | 71,490 | (95,654) |

பொருந்தக்கூடிய வருமான வரி வீதம் 30% ஆகும். 30% பிற்போடப்பட்ட வரிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது, இதன் விளைவாக ஏற்படும் விளைவு விரிவான வருமான கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2024 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த 12 மாதங்களுக்கானது

**10.1** 2024 திசெம்பர் 31 மற்றும் 2023 திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான வரி விதிக்கக்கூடிய இலாபத்திற்கும் கணக்கீட்டு இலாபத்திற்கும் இடையிலான இணக்கம் பின்வருமாறு:

| | 2024.12.31<br>ரூபா. 000 | 2023.12.31<br>ரூபா. 000 |
|---|---|---|
| வருமான வரி விதிப்புக்கு முன்னரான கணக்கியல் இலாபம் | (268,347) | (784,367) |
| மொத்தமாக அனுமதிக்கப்படாத உருப்படிகள் | 618,814 | 383,516 |
| மொத்தமாக அனுமதிக்கக்கூடிய செலவு | (733,631) | (625,103) |
| வியாபார இலாபம் மற்றும் ஏனைய வருமான மூலங்கள் 30மூ | (383,163) | (1,025,954) |
| ஏனைய வருமான மூலங்கள் 30% பொறுப்பில் | - | - |
| மொத்த வரி விதி வருமானம் | - | - |
| **வரி விதி இலாபம்** | - | - |
| ஏனைய வருமான மூலங்கள் 30% பொறுப்பில் | - | - |
| **நடைமுறை ஆண்டு வரி செலவுகள்** | - | - |

**10.2** பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு

| | | |
|---|---|---|
| பின்வருவனவற்றிலிருந்து ஏற்படும் பிற்போடப்பட்ட வரி: | | |
| தற்காலிக வேறுபாட்டின் தோற்றம் மற்றும் தலைகீழான மாற்றம் (குறிப்பு 24) | 71,490 | (77,923) |
| மொத்த பிற்போடப்பட்ட வரி விதிப்பு | 71,490 | (77,923) |

**10.3 வரி நட்டங்கள் முன் கொண்டு செல்லப்பட்டன**

| | | |
|---|---|---|
| வரி நட்டங்கள் முன்கொண்டு செல்லப்பட்டன | 14,048,890 | 13,057,369 |
| (-) ஆண்டின் போது காலாவதியான நட்டங்கள் | (9,937,175) | - |
| ஆண்டின் போது ஏற்பட்ட வரி நட்டங்கள் | 383,163 | 1,025,954 |
| முதலீட்டிற்கு மாற்றப்பட்ட நட்டங்கள் | - | (34,433) |
| **எதிர்காலங்களுக்கு முன் கொண்டு செல்லப்பட்ட வரி நட்டங்கள்** | **4,494,878** | 14,048,890 |

11. பங்கொன்றிற்கான உழைப்பு - அடிப்படை

சாதாரண பங்குதாரர்களுக்குரிய ஆண்டுக்கான நிகர இலாபத்தை, அந்த ஆண்டு நிலுவையில் உள்ள சாதாரண பங்குகளால் வகுப்பதன் மூலம் பங்கொன்றிற்கான உழைப்பு கணக்கிடப்படுகிறது.

| | 2024.12.31<br>ரூபா. 000 | 2023.12.31<br>ரூபா. 000 |
|---|---|---|
| சாதாரண பங்கொன்றிற்கான இலாபம் | (0,17) | (0,01) |
| **எண்கணிதமாகப் பயன்படுத்தப்படும் தொகை** | ரூபா. 000 | ரூபா. 000 |
| சாதாரண பங்குதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட இலாபம் | (351,638) | (15,873) |
| **வகுக்கப்படும் தொகை** | ரூபா. 000 | ரூபா. 000 |
| ஒரு பங்கிற்கான அடிப்படை இலாபம் என்ற நோக்கத்திற்காக சாதாரண பங்குகளின் நிறையளிக்கப்பட்ட சராசரி எண்ணிக்கை | 2,046,646 | 2,046,646 |

## 12. ஆதனம்,பொறி மற்றும் உபகரணம்

| | குத்தகை காணியில் உள்ள கட்டிடங்கள் | பொறி மற்றும் இயந்திரம் | ஹோட்டலின் தளபாடம் மற்றும் பொருத்தக்கள் | மோட்டார் வாகனம் | குளிர்சாதன பெட்டி மற்றும் சமையலறை உபகரணங்கள் | தொலைக்காட்சி மற்றும் கணனிகள் | செயற்பாட்டு ரிதியான உபகரணம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| **கிரயம்/மீள்மதிப்பீடு** | | | | | | | | |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 6,123,575 | 407,765 | 564,166 | 56,020 | 474,650 | 52,060 | 151,330 | 7,829,566 |
| அகற்றல் | - | - | (2,272) | - | (593) | (978) | - | (3,844) |
| ஆண்டிற்கான சேர்ப்பனவுகள் | 48,754 | 10,315 | 52,266 | - | 3,844 | 29,260 | 49,403 | 193,842 |
| றுஜீ இலிருந்து மாற்றியது - அறை புதுப்பித்தலின் மூலதனமாக்கல் | 2,085,124 | | 204,743 | - | - | - | - | 2,289,866 |
| றுஜீ இலிருந்து மாற்றியது - கட்டிட வடிவமைப்பு | 1,123,560 | | | | | | | 1,123,560 |
| மீள்மதிப்பீட்டு இலாபம் | 1,396,705 | - | - | 107,785 | | | 124,683 | 1,629,173 |
| றுஜீ க்கு மாற்றம் | (318,342) | | | | | | | (318,342) |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது | (486,616) | | | (56,020) | | | (142,216) | (684,852) |
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 9,972,759 | 418,080 | 818,903 | 107,785 | 477,901 | 80,342 | 183,200 | 12,058,970 |
| அகற்றல் | - | (818) | (7,378) | - | (3,337) | (3,018) | - | (14,550) |
| ஆண்டிற்கான சேர்ப்பனவுகள் | 18,391 | 7,936 | 43,744 | - | 34,522 | 42,940 | 23,855 | 171,388 |
| றுஜீ இலிருந்து மாற்றியது - அறை புதுப்பித்தலின் மூலதனமாக்கல் | 2,194,388 | - | 179"278 | - | | 22,691 | | 2,396,358 |
| றுஜீ இலிருந்து மாற்றியது -கட்டிட வடிவமைப்பு | 692,862 | | | | | | | 692,862 |
| **2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **12,878,400** | **425,199** | **1,034,548** | **107,785** | **509,086** | **142,956** | **207,055** | **15,305,028** |
| **திரட்டிய தேய்மானம்** | | | | | | | | |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 365,629 | 73,533 | 166,047 | 42,015 | 97,361 | 30,017 | 125,564 | 900,166 |
| ஆண்டிற்கான சேர்ப்பனவுகள் | 120,987 | 30,862 | 61,167 | 14,005 | 35,678 | 12,331 | 16,652 | 291,682 |
| அகற்றல் | - | - | (682) | - | (133) | (585) | - | (1,400) |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது | (486,616) | | | (56,020) | | | (142,216) | (684,852) |
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | - | 104,395 | 226,532 | - | 132,905 | 41,763 | - | 505,595 |
| ஆண்டிற்கான சேர்ப்பனவுகள் | 207,369 | 31,533 | 90,922 | 26,946 | 37,756 | 24,326 | 63,722 | 482,573 |
| அகற்றல் | - | (327) | (2,941) | - | (1,001) | (2,414) | | (6,683) |
| **2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **207,369** | **135,600** | **314,512** | **26,946** | **169,661** | **63,672** | **63,722** | **981,481** |
| **பதிவளிக்கப்பட்ட பெறுமதி** | | | | | | | | |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 5,757,946 | 334,232 | 398,119 | 14,005 | 377,289 | 22,043 | 25,766 | 6,929,400 |
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 9,972,759 | 313,685 | 592,371 | 107,785 | 344,996 | 38,579 | 183,200 | 11,553,379 |
| **2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **12,671,031** | **289,599** | **720,036** | **80,839** | **339,425** | **79,284** | **143,333** | **14,323,547** |

ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட் ஹோட்டலின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீதான முழு உடைமை மற்றும் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது.

**12.2** 1998 ஆம் ஆண்டு, உலக வர்த்தக மையத்தையும் ஹில்டன் ஹோட்டலையும் இணைக்கும் பாலமொன்று ஐக்கிய அமெரிக்க டொலர் 360,000 செலவில் கட்டப்பட்டது. ஓவர்சீஸ் ரியால்டி லிமிடெட் மற்றும் ஹில்டன் இன்டர்நேஷனல் என்பன முறையே ஐக்கிய அமெரிக்க டொலர் 180,000 மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 90,000 தொகையினை பங்களிப்பு செய்தன மீதமுள்ள தொகையை கம்பனி பங்களிப்பு செய்தது. கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 90,000 தொகையானது கட்டிடக் கணக்கின் கீழ் நிதிக் கூற்றுக்களில் மூலதனமாக்கல் செய்யப்பட்டது. க.ளஎமந.ளஇயஇ ஙபக்ய அமூன.யமுமளுடசமுா டச றந்“

**12.3** கம்பனி 2019 திசெம்பர் 31, முதல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ( ீநு) அளவீட்டுக்காக மீள்மதிப்பீட்டு மாதிரியைப் பயன்படுத்துகின்றது. கட்டிடம், மோட்டார் வாகனங்கள் மற்றும் செயற்பாட்டு உபகரணங்களின் நியாய பெறுமதி, 2023 ஆம் நிதியாண்டில், கம்பனிக்கு சொந்தமான ீநு இன் நியாய பெறுமதியினை தீர்மானிப்பதற்கு அங்கீகாரம் பெற்ற சுயாதீன மதிப்பீட்டாளரான பு.று.பு. அபேகுணவர்தனவால் மீள்மதிப்பீடு செய்வதன் மூலம் தீர்மானிக்கப்பட்டது. சந்தை அடிப்படையிலான சான்றுகளைக் குறிப்பிடுவதன் மூலம் நியாய மதிப்பு தீர்மானிக்கப்படுகின்றது. மதிப்பீடுகள் திறந்த சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டவை, குறிப்பிட்ட சொத்தின் தன்மை, இருப்பிடம் அல்லது சொத்தின் நிலையில் உள்ள எந்தவொரு வேறுபாட்டிற்கும் சீராக்கம் செய்யப்படுகின்றன, இவை அனைத்தும் நியாய பெறுமதி அளவீட்டு படிநிலையின் 3 ஆம் நிலையின் கீழ் வருகின்றன. மதிப்பீட்டின் திகதி 2023 திசெம்பர் 31 ஆகும்.

| | |
|---|---|
| ஆதனம் | கட்டிடங்கள் (பரப்பளவு - 445,175 சதுர அடி) எண்.02, சர் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை கொழும்பு 02 மற்றும் ஏனைய அசையும் சொத்துக்கள் |
| மதிப்பீட்டுக்கான முறை | பெறுமான தேய்வு செய்யப்பட்ட கிரய அடிப்படையிலான மதிப்பீட்டு முறை |
| மதிப்பீட நடைமுறைக்கு வரும் திகதி | 2023 திசெம்பர் 31 |
| ஆதன மதிப்பீட்டாளர் | திரு. ஜி.டபிள்யூ.ஜி. அபேகுணவர்தன, பட்டய மதிப்பீட்டு அளவீட்டாளர |

PPE ஆனது கிரயத்திலிருந்து திரண்ட தேய்வினை கழித்த பின்னரான பெறுமதியில் முன்வைக்கப்பட்டால், அதன் முன்கொண்டு செலும் பெறுமதி பின்வருமாறு காணப்படும்

| | 2024.12.31<br>ரூபா. 000 | 2023.12.31<br>ரூபா. 000 |
|---|---|---|
| கிரயம் | 19,726,510 | 17,158,765 |
| திரண்ட தெய்வு | (7,487,792) | (7,005,220) |
| **முன் கொண்ட வந்த பெறுமதி** | **12,238,718** | 10,153,545 |

**12.4** 264 விருந்தினர் அறைகளின் புதுப்பித்தல செயற்பாடு படிப்படியாக நிறைவடைந்து, 2024 நவம்பர் இறுதியில் நிறைவடைந்தது. சொத்துக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு தேவையான மூலதனமயமாக்கல் செய்யப்பட்டதிலிருந்து, வேலை நிறைவடைந்தமைக்கான விலைப்பட்டியல்களை ஒப்பந்ததாரர் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பதால், கிரய வல்லுனர் (ஞரயவெவைல ளுரசஎநலழச) வழங்கிய நிறைவு செய்வதற்கு மதிப்பிடப்பட்ட கரயத்தின் அடிப்படையில் தொடர்புடைய கிரயங்கள் மூலதனமாக்கப்பட்டன. இறுதியாக சான்றளிக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் விலைப்பட்டியல்கள் கிடைத்தவுடன், மூலதனமயமாக்கல் செய்யப்பட்ட தொகைகள் மீளாய்வு செய்யப்பட்டு, தேவை ஏற்பட்டால், ஏற்படும் உண்மையான செலவுகளைப் பிரதிபலிக்கும் வகையில் சீராக்கம் செய்யப்படும்.

**13.**

| ரூபா. 000 | பிரதான ஆதனம் 99 வருட குத்தகை | ருனுயு கார் தரிப்பிடம் | மொத்தம் |
|---|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 6,256,992 | 4,806 | 6,261,798 |
| மதிப்பிழப்பு | (70,705) | (4,806) | (75,511) |
| சேர்ப்பனவு | - | 29,091 | 29,091 |
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 6,186,287 | 29,091 | 6,215,377 |
| மதிப்பிழப்பு | (70,707) | (7,392) | (78,099) |
| சேர்ப்பனவு | - | 3"911 | 3,911 |
| **2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **6,115,580** | **25,609** | **6,141,189** |

**13.1** பிரதான ஆதனத்தினுடைய காணியின் 99 ஆண்டுகளுக்கான குத்தகையானது 2012 யூன் 28 முதல் அமலுக்கு வருகிறது. ரூ. 7 பில்லியன் குத்தகை காணியின் பெறுமதி மூலதனமாக்கல் செய்யப்பட்டதுடன் இலங்கை அரசாங்கத்திற்கும் பங்குகள் வழங்கப்பட்டுள்ளன.

**13.2** 2016 திசெம்பர் 13 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், விளையாட்டு வளாகம் அமைந்துள்ள 1.8 ஏக்கர் காணிக்கான குத்தகை காலம் யூன் - 2111 ஆம் ஆண்டு வரை பிரதான கட்டிடத்தின் குத்தகை காலத்திற்கு ஏற்ப நீட்டிக்கப்பட்டது. மேலும், 2022 மார்ச் 3 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், கம்பனியின் மூலதன மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக, முதலீட்டாளருடன் உப குத்தகை ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் வரைக்கும் அந்தக் காலத்திற்கான மொத்த குத்தகை பிரீமியத்தைக் குறிக்கும் ரூ.4440 மில்லியன் குத்தகை பணம் பிற்போடப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

**13.3** ஹோட்டலுக்கு அருகில் உள்ள 52 பேர்ச் நிலத்திற்கான குத்தகை ஒப்பந்தத்தை கம்பனி நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் (ருனுயு) செய்துள்ளது. இது கார் தரிப்பிட வசதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் குத்தகை காலம் 30 ஆண்டுகள் ஆகும். 2020 சனவரி 1 முதல் குத்தகை வாடகைகள் அரச தலைமை மதிப்பீட்டாளரால் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் திருத்தத்தம் செய்யப்படல் வேண்டும். ஆரம்ப ஐந்தாண்டு காலம் 2024 திசெம்பர் 31 அன்று முடிவடைவதால், அடுத்த ஐந்து ஆண்டு காலத்திற்கான குத்தகை வாடகையினை அடிப்படை ஆண்டு குத்தகை பிரீமியத்தை விட 5மூ அதிகரிப்பின் அடிப்படையில் மூலதனமாக்கப்பட்டுள்ளது. குத்தகை பொறுப்பு மற்றும் தொடர்புடைய சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமை நியாயமான மதிப்பை பிரதிபலிக்கும் அளவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதை உறுதி செய்வதற்காக இந்த சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

| | 2024.12.31<br>ரூபா. 000 | 2023.12.31<br>ரூபா. 000 |
|---|---|---|
| **14. இருப்புக்கள்** | | |
| உணவு | 42,554 | 32,200 |
| குடி பானங்கள் | 58,872 | 56,516 |
| பொறியியல் களஞ்சியசாலை (எரிபொருள் மற்றும் குரசயெஉந எண்ணெய்) | 8,366 | 8,600 |
| | **109,792** | 97,317 |
| | | |
| **15. வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்ய** | | |
| வியாபார வருமதிகள் | 356,109 | 240,521 |
| கழி: கடன்பட்டோரின் பெறுமதிக்குறைப்பு | (12,542) | (10,192) |
| | **343,568** | 230,329 |
| | | |
| **16. தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெற வேண்டியவை** | | |
| ஹில்டன் கொழும்பு குடியிருப்பு | 3,852 | 5,309 |
| ஹில்டன் வீரவில | 1,829 | 6,803 |
| ஹில்டன் யால | 10,997 | 4,277 |
| ஹில்டன் ஜப்பான் | - | 2,031 |
| ஹில்டன் ஷா அலம் 1-நகரம் | - | 42 |
| நிதி அமைச்சு | 71,728 | 24,358 |
| | 88,407 | 42,820 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2024 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த 12 மாதங்களுக்கானது

| | 2024.12.31<br>ரூபா. 000 | 2023.12.31<br>ரூபா. 000 |
|---|---|---|
| **17. பிற சொத்துக்கள்** | | |
| வைப்புக்கள் மற்றும் முற்பணம் | 90,426 | 116,003 |
| ஏனைய பெறவேண்டியவைகள் | 36,052 | 40,257 |
| முற்பணம் - புதுப்பித்தல் செலவுகள் | - | 194,941 |
| வருமான வரி பெறவேண்டியது - குறிப்பு 29 | 34,231 | 33,855 |
| | **160,708** | 385,056 |

**18. நடைமுறை நிதி சொத்துக்கள் குறுகிய கால முதலீடுகள்**

| | | |
|---|---|---|
| அழைப்பு வைப்புகள் | 961 | 836 |
| கடன் சேவைகள் ஒதுக்கம் (னுளுசு) - கணக்கு | 65,805 | 61,111 |
| மொத்த குறுங்கால முதலீடு | 66,766 | 61,947 |

**19. காசு மற்றும் வங்கி மீதிகள்**

| | | |
|---|---|---|
| வெளிநாட்டு நாணய சேமிப்புகள் | 43,791 | 113,297 |
| தளபாடம்,பொருத்து மற்றும் உபகரண(குகுரூநு )ஒதுக்கக் கணக்கு (சேமிப்பு கணக்கு) | 20,909 | 112,249 |
| கடன் சேவைகள் ஒதுக்கம் (னுளுசு) - கணக்கு | 36 | 36 |
| காசு மற்றும் செயல்பாட்டிலுள்ள வங்கிக் கணக்கு | 38,860 | 49,774 |
| | **103,596** | 275,356 |

கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில், வெளிநாட்டு நாணய சேமிப்புக் கணக்கில் உள்ள ஆண்டின் இறுதி மீதியானது, ஐந்தொகை திகதியில் உள்ளவாறான இறுதி வீதத்தில் இலங்கை ரூபாயின் செயல்பாட்டு நாணயமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

20. குறிப்பிடப்பட்ட மூலதனம்

| | 2024.12.31<br>ரூபா. 000 | 2023.12.31<br>ரூபா. 000 |
|---|---|---|
| வழங்கப்பட்டு முழுமையாக செலுத்தப்பட்டது | | |
| 2இ046இ645இ685 சாதாரண பங்குகள் | 20,466,456 | 20,466,456 |

இலங்கை அரசின் திறைசேரியின் செயலாளர் தற்போது கம்பனியின் சாதாரண பங்கு மூலதனத்தில் 100மூ வைத்திருக்கிறார். 2023 ஆம் ஆண்டு மார்ச் 14 அன்று வெளியிடப்பட்ட அமைச்சரவை தீரமான இலக்கம் 23/0431/604/046 இன் பிரகாரம் ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட்டின் பங்கு விற்பனை, 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 27 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் ஆகு/018/ஊஆ/2023/055 இன் பிரகாரம், இலங்கை அரசின் புதிய கொள்கை வழிமுறைகள் நிலுவையில் இருப்பதால் தற்போது இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## 21. ஒதுக்கங்கள்

| | 2024.12.31 ரூபா. 000 | 2023.12.31 ரூபா. 000 |
|---|---|---|
| தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் உபகரண மாற்று ஒதுக்கங்கள் (குறிப்பு 21.1) | 303 | - |

### 21.1 தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் உபகரண மாற்று ஒதுக்கங்கள்

| | | |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த மீதி | - | 178,228 |
| சேர்: ஆண்டு காலத்தில் செய்யப்பட்ட ஏற்பாடு | 207,816 | - |
| கழி: பங்கு அறிக்கைக்கு மாற்றப்பட்ட தொகைகள் | - | - |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களை வாங்குவதற்கும் மாற்றுவதற்கும் பயன்படுத்தப்பட்ட தொகைகள் | (207,513) | (178,228) |
| **ஆண்டின் இறுதியில் உள்ள மீதி** | **303** | |

இந்த ஆண்டில் தளபாடங்கள் பொருத்துக்கள் மற்றும் உபகரண ஒதுக்கத்திற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 700,000 க்கு சமமான தொகை மாற்றப்பட்டுள்ளது.

## 22. வட்டியுடன் கூடிய கடன்கள்

| | 2024 | | | 2023 | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய தொகைகள் ரூபா | ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்த வேண்டிய தொகைகள் ரூபா | மொத்தம் ரூபா | ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய தொகைகள் ரூபா | ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்த வேண்டிய தொகைகள் ரூபா | மொத்தம் ரூபா |
| காலக் கடன் - சம்பத் வங்கி பிஎல்சி | 262,500 | 2,187,500 | 2,450,000 | - | 1,626,139 | 1,626,139 |
| காலக் கடன் - மக்கள் வங்கி | 333,324 | 1,166,636 | 1,499,960 | 58,333 | 1,441,627 | 1,499,960 |
| | **595,824** | **3,354,136** | **3,949,960** | 58,333 | 3,067,766 | 3,126,099 |

பிணை மற்றும் திருப்பி செலுத்தும் விதிமுறைகள்

### 22.1 காலக் கடன்கள்

| | 2023 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | பெற்ற கடன்கள் | மீள செலுத்தியது | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|
| காலக் கடன் - மக்கள் வங்கி | 2,000,000 | - | (500,040) | 1,499,960 |
| காலக் கடன் - சம்பத் வங்கி பிஎல்சி | - | 1,626,139 | - | 1,626,139 |
| | 2,000,000 | 1,626,139 | (500,040) | 3,126,099 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2024 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த 12 மாதங்களுக்கானது

| | 2023 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | பெற்ற கடன்கள் | மீள செலுத்தியது | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|
| காலக் கடன் - சம்பத் வங்கி பிஎல்சி | 1,499,960 | - | - | 1,499,960 |
| காலக் கடன் - மக்கள் வங்கி | 1,626,139 | 823,861 | - | 2,450,000 |
| | 3,126,099 | 823,861 | - | 3,949,960 |

| நிதி நிறுவனம் | மக்கள் வங்கி | சம்பத் வங்கி |
|---|---|---|
| வசதியின் தன்மை | காலக் கடன் | காலக் கடன் |
| தொகை | ரூ. 1,500 மில்லியன் | ரூ. 2,450 மில்லியன் |
| வட்டி விகிதம் | AWPLR +1.5% | AWPLR +1.5% |
| பிணை | சொத்து அடமானம் | சொத்து அடமானம் |
| திருப்பிச் செலுத்தும் காலம் | 7 வருடங்கள் | 7 வருடங்கள் |

ஹில்டன் கொழும்பு ஹோட்டல் சொத்துக்கான குத்தகை உரிமைகளுக்கு முதன்மை அதே நேர கடன் பத்திரம் (Primary Concurrent Mortgage Bond) 2023 மார்ச் மாதம் Sampath Bank PLC இற்கு சார்பாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இது Peoples Bank இற்கு வழங்கப்பட்டுள்ள தற்போதைய முதன்மை கடன் உறுதிப்பத்திரத்துடன் சம அளவிலும் (pari-passu) ஒப்புள்ள நிலையில் உள்ளது. Sampath Bank வழங்கிய மொத்த வங்கி மேலதிகப்பற்று வசதி ரூபா. 600 மில்லியன் மற்றும் காலக் கடன் (Term loan) ரூ. 2,450 மில்லியன ஆகும், இதில் Peoples Bank-இன் தற்போதைய கடனில் ரூபா. 500 மில்லியன் பகுதி தீர்ப்பனவாக செலுத்தப்பட்டுள்ளது.

சம்பத் வங்கி பிஎல்சியின் சார்பில் 2023 மார்ச் 28 அன்று நிறைவேற்றப்பட்ட முதன்மை அதே நேர கடன் பத்திரத்தின் பிரகாரம், ரூபா. 2,450 மில்லியன் பெறுமதியான புதிய காலக் கடன் வசதியானது, நடந்துகொண்டிருக்கும் புதுப்பித்தல் திட்டத்திற்கு ஓரளவு நிதியளிக்கவும் மற்றும் மக்கள் வங்கியின் தற்போதைய கடனில் ரூபா. 500 மில்லியன் பகுதி தீர்ப்பனவினை மேற்கொள்ளவும் 2 ஆண்டு சலுகைக் காலத்துடன் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம், இரண்டு வசதிகளின் அடுத்த மூலதனத் தவணைகளும் 2025 ஆம் ஆண்டிலேயே மாத்திரம் செலுத்தப்பட வேண்டியவைகளாகும்.

## 23. ஓய்வூதிய நலன் பொறுப்பு

| | 2024.12.31<br>ரூபா. 000 | 2023.12.31<br>ரூபா. 000 |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த மீதி | 117,655 | 77,467 |
| ஆண்டிற்கான கட்டணம் | 11,972 | 8,131 |
| ஆண்டுக்கான வட்டி செலவு | 16,488 | 14,332 |
| இடைக்கால பொறுப்பு / (சொத்து) மற்றும் கணக்கு விவர இழப்பு / (ஆதாயம்) ஆகியவற்றை அங்கீகரித்தல் | | 8,648 |
| முந்தைய ஆண்டுகளில் அனுமானங்களில் ஏற்பட்ட மாற்றங்களிலோ அல்லது (அதிகமாக) / குறைவாக இருந்ததாலோ ஏற்படும் இழப்பு / (ஆதாயம்) | 12,144 | 23,041 |
| ஆணிடில் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் | (34,656) | (13,963) |
| ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி | 123,261 | 117,655 |

கம்பனியின் ஓய்வூதிய நலனுக்கான கடப்பாடு, பியால் எஸ். குணதிலக்கே மற்றும் பங்காளர்கள் மேற்கொண்ட உண்மையான் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். கழிவீட்டு வீதம் மற்றும் வருடாந்த அடிப்படை சம்பள உயர்வு தொடர்பான எடுகோள்களை தவிர

ஏனைய அனைத்து எடுகோள்களும் முந்தையதை போல் உள்ளன. அடுத்த ஆண்டு அறிக்கையிடல் காலப்பகுதிக்கான நிர்ணயிக்கப்பட்ட நலத் திட்டத்திற்கான பங்களிப்பில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதிர்பார்க்கப்படவில்லை. திறைசேரி முறிகளின் வருமான வீதங்களை பிரதிபலிக்கும் வகையில், கழிவீட்டு வீதம் 14மூ இலிருந்து 12மூ ஆக திருத்தம் செய்யப்பட்டது. ஊழியர் நலனுக்கான செலவை நிர்ணயிப்பதில் பயன்படுத்தப்படும் முக்கிய அனுமானங்கள கீழே:

| | 2024.12.31<br>ரூபா. 000 | 2023.12.31<br>ரூபா. 000 |
|---|---|---|
| கழிவு விகிதம் | 12% | 14% |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு | 6% | 6% |
| ஓய்வூதிய வயது | 60 வருடங்கள் | 60 வருடங்கள் |

| | கழிவு விகிதம் | | சம்பள அதிகரிப்பு | |
|---|---|---|---|---|
| உணர்திறன் மற்றும் முதிர்வு விவரம் | 2024 | 2023 | 2024 | 2023 |
| ஒரு சதவீத புள்ளி அதிகரிப்பு | (6,353) | (5,957) | 6,971 | 6,632 |
| ஒரு சதவீத புள்ளி குறைவு | 6,992 | 6,551 | (6,432) | (6,110) |

கழிவு செய்யப்படாத நிலையில் உள்ள கட்டணங்களின் முதிர்வு பகுப்பாய்வு

| | 2024.12.31 | 2023.12.31 |
|---|---|---|
| அடுத்த 12 மாதங்களுக்குள் | 2,203 | 1,137 |
| 1 மற்றும் 2 வருடங்களுக்கு இடையில் | 311 | 7,383 |
| 2 மற்றும் 5 வருடங்களுக்கு இடையில் | 34,625 | 35,558 |
| 5 மற்றும் 10 வருடங்களுக்கு இடையில் | 82,194 | 135,450 |
| எதிர்பார்க்கப்படும் மொத்த கொடுப்பனவுகள் | 119,334 | 179,529 |

நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் சராசரி எடையுள்ள காலம் 6.2 ஆண்டுகள் (2023 - 6.1 ஆண்டுகள்)

## 24. பிற்போடப்பட்ட வரி பொறுப்பு

பொறுப்பு முறையை பயன்படுத்தி நிதி நிலைமை கூற்றில் பிற்போடப்பட்ட வரி அங்கீகரிக்கப்படுகின்றது. இது நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் முன் கொண்டு செல்லும் தொகைகளுக்கும், வரி நோக்கங்களுக்கான தொடர்புடைய தொகைகளுக்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகளை கணக்கிடுகின்றது. பிற்போடப்பட்ட வரிக்கான ஏற்பாடு, அறிக்கையிடல் திகதியின் போதும் சட்டபூர்வமாக அல்லது கணிசமாக இயற்றப்பட்ட வரி விகிதங்களை பயன்படுத்தி, சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் முன் கொண்டு செல்லும் தொகைகளை எதிர்காலத்தில் உணர்தல் அல்லது தீர்வு காணும் முறையின் அடிப்படையில் செய்யப்படுகின்றது. வருமான வரி இழப்புகள் மற்றும் முன்னெடுக்கக்கூடிய வரி கடன்களின் தாக்கத்தால் உருவான பிற்போடப்பட்ட வரி சொத்துகள், எதிர்காலத்தில் வரி விதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைக்கும் அளவிற்கு மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றன, அதற்குப் பிணைத்துச் சொத்துகளையும் பயன்படுத்தலாம். பிற்போடப்பட்ட வரி சொத்துகள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன மற்றும் தொடர்புடைய வரி நலன் தேறாத நிலையில் இருப்பின் கீழ்நோக்கி சீர்செய்யப்படுகின்றன.

| | 2024.12.31<br>ரூபா. 000 | 2023.12.31<br>ரூபா. 000 |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த மீதி | 1,480,613 | 633,891 |
